

சென்னை பாரகனில்

தினசரி 3 காட்சிகள்: பகல் 3 மணி - மாலை 6-15 & இரவு 9 30 மணிக்கு



மகாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்

பாண்டி பஜார் : தியாகராயநகர்

★ ★ ★ ★

எமது சொந்தத் தறிகளில் எமது ஊக்கமான கவனத்தோடு தயாராகும் பட்டுப் புடவைகள் அன்பர்களின் பெருமதிப்பைப் பெற்றிருக்கின்றன.

★

தீபாவளியை முன்னிட்டு பலவகை 'கலர் டிஸைன்'களில் பட்டுச் சேலைகளும் பல ஊர் நூல் கைத்தறிச் சேலைகளும், வேஷ்டிகளும் ஏராளமாக ஸ்டாக் செய்திருப்பதோடு விலையையும் குறைத்திருக்கிறோம்.

★ ★ ★ ★

பம்பாய் கிளை :

பிம்டிவாலா பில்டிங்ஸ்

மாதுங்கா G. I. P.

19-9-49ம் தேதி முதல்

மீண்டும் புஸ்தக ரூபத்தில்

புரட்சி

(வாரப் பதிப்பு)

தீவிர அரசியல், இலக்கிய, விஞ்ஞான லலித கலை

வெள்ளி இதழ்

கண்கவரும் வர்ண அட்டையுடன் வெளிவருகிறது

விலை அணா 4

•

சுடச்சுட அரசியல் செய்திகளைக் கொண்ட புரட்சி துணை இதழையும் எதிர்பாருங்கள்

தனிப் பிரதி விலை அணா 1

•

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை:

புரட்சி காரியாலயம்

மதுரை

கண்ணகியின் கற்பு மதுராபுரியைச் சாம்பலாக்கியது

மங்கையர்க்கரசியின் கற்பு இந்திர லோகத்தையே எரித்துப் பொசுக்கியது

கற்புக் கனலின் ஜ்வாலையை மங்கையர்க்கரசியில் காணுங்கள்



★

பாக்யா பிக்சர்ஸ்

மங்கையர்க்கரசி

சென்னை

பிரபாத் - சித்ரா (போன் 8125) - சரஸ்வதி - மஹாராணியில்

தினசரி 3 காட்சிகள் — மாலை 2-30, 6 & 9-30 மணிக்கு

சென்னை உரிமை :

லெக்ஷ்மி நாராயணா பிக்சர்ஸ்


4, வானல்ஸ் ரோடு : எழும்பூர் : சென்னை

கோல்கேட்

சுவாசத்தையும் பற்களையும் சுத்தப்படுத்துகின்றது

கோல்கேட் பவுடரோ அல்லது கிரீமோ உங்கள் இஷ்டப்படி வாங்கிக் கொள்ளலாம்

- ★ உங்களது பற்களைச் சுத்தம் செய்வதுடன் உங்களது சுவாசத்தையும் சுத்தமாக்குகிறது.
- ★ கோல்கேட்டிலுள்ள மிருதுவான பளபளப் பூட்டும் பொருளானது எனாமலை மிக எளிதாக வும், கேடு விளைவிக்காமலும் பரிபூரணமாகவும், சுத்தப் படுத்துகின்றது.
- ★ கோல்கேட் ஒரு சிறந்த உயர் ரகப் பொருள். மிருகக் கொழுப்பு அற்றது.
- ★ பல் வைத்தியர்களால் சிபார்சு செய்யப்படுவது. விலை குறைவு - அதிக நாட்கள் வரும்.



உங்களது ஜவுளித் தேவைகளை தயாரிப்பவர்களிடமே வாங்கிப் பணத்தைச் சேமியுங்கள்

பொறுக்கி எடுத்த 2000 வெவ்வேறு தினுசுகளில்

பனாரஸ் - கொள்ளேகால் - பங்களூர்

புடவைகள்

நூதன டிசைன்களில் இப்பொழுதே எங்கள் பாக்டரியிலிருந்து வந்துள்ளன. விஜயம் செய்யுங்கள்.

இந்தியன் ஆர்ட் பேலஸ்

(உயர் ரக கொள்ளேகாலம் & பங்களூர் கெட்டிச் சாய புடவைகள் & பனாரஸ் புடவைகள் சொந்தத் தறிகளில் தயாரிப்பவர்கள்)

427, தங்கசாலைத் தெரு (சௌகார்பேட்டை) மதராஸ்

டெலிபோன்: 2676 தலைமை ஆபீஸ்: பனாரஸ்

கீழ்க்கண்ட இடத்திலும் கிடைக்கும்

ஸி. வி. கன்னைய செட்டி & கம்பெனி

ரட்டன் பஜார் - மதராஸ்-3 போன்: 3200

நவயுவன்

நவம்பர் மீ முதல்

கண்கவரும் படங்கள், உண்மையான போட்டோக்கள், திடுக்கிடும் கதைகள் முதலியவைகளுடன் வெளிவரப்போகிறது

விலை 4 அணா

எங்கும் ஏஜெண்டுகள் தேவை

நவயுவன்

..புதுக்கோட்டை..

கல்கி
பொருளடக்கம்

மலர் 9 | இதழ் 10 | அக்டோபர் 9 | விரோதி ஐ புரட்டாசி 23உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.


ஜெமினியின்
அபூர்வ
சகோதரர்கள்
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
உணர்ச்சி மிகுந்த சித்திரம்.....
அக்டோபர் 21
வெளிவருகிறது

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 10

என்ன சேதி?

யாருடைய தவறு?

உலகத்திலே உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத இரண்டு சாதனங்களை இறைவன் இலவசமாக அளித்திருக்கிறார். அவற்றில் முதலாவது காற்று, இரண்டாவது தண்ணீர். எங்கும் வியாபித்துள்ள காற்று எல்லோருக்கும் சுலபமாகக் கிடைக்கிறது.

ஆனால், தண்ணீரின் விஷயம் அப்படியல்ல. இந்த நாட்டில் தண்ணீர்ப் பஞ்சத்தினால் தத்தளிக்கும் நகரங்கள் எத்தனையோ இருக்கின்றன. குடி தண்ணீர் வசதியின்றிக் கஷ்டப்படும் கிராமங்கள் எண்ணில் அடங்காது. இறைவன் இலவசமாக அளித்திருக்கும் தண்ணீருக்குக் கூட வழியில்லாமல் ஜனங்கள் திண்டாடுவதெனில், அதைக் காட்டிலும் சகிக்க முடியாத விஷயம் வேறு என்ன இருக்க முடியும்? அத்தகைய நிலைமைக்குக் காரணம் என்ன? பூமியில் பெய்யும் மழையையும், ஏரிகளில் தேங்கும் தண்ணீரையும், நதிகளில் போகும் பிரவாகத்தையும் வியர்த்தமாக்காமல் கட்டுப்படுத்தி ஆங்காங்கு வசிக்கும் ஜனங்களுக்கு உபயோகமாகும்படி செய்வதில் அரசாங்கம் தவறிவிடுவதே பெரிதும் பஞ்சத்துக்குக் காரணம் எனலாம். மேற்கூறிய விதம் கட்டுப்படுத்தியதன் மூலம் உலகில் எத்தனையோ பிரதேசங்கள் கொடிய தண்ணீர்ப் பஞ்சத்திலிருந்து விடுதலையடைந்து தன தானியக் களஞ்சியங்களாக மாறியிருக்கின்றன. அவ் விஷயமாக மனிதனின் விடாமுயற்சி எவ்வளவு தூரம் பலனைக் கொடுக்கும் என்பதற்கு, சென்னை மாகாணத்திலே காந்தி ஜயந்தி தினத்தன்று நிகழ்ந்த ஒரு வைபவமே சிறந்த உதாரணமாகும்.

கதி மோட்சம்

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த திருச்செந்தூர், காயல் பட்டணம் முதலிய பதினொரு கிராமங்களில் சுமார் எழுபத்தையாயிரம் ஜனங்களுக்கு மேல் வசிக்கிறார்கள். "எங்கு பார்த்தாலும் தண்ணீர் மயம்; ஆனால், குடிக்க ஒரு சொட்டுக்கூட இல்லை!" என்ற பரிதாபகரமான நிலையில் அவர்கள் வெகுகாலமாக இருந்து வருகிறார்கள். ஏனெனில், கடற்கரையோரப் பிரதேசங்களில் வாழும் அவர்களுக்கு உப்புத் தண்ணீரைத் தவிர நல்ல தண்ணீர் எப்படி கிடைக்கும்?

எனினும், சென்னை சர்க்கார் ஸானிடரி இஞ்சினீர் ஸ்ரீ எஸ். ராஜகோபாலன் அவர்கள் தயாரித்துள்ள அற்புதமான திட்டத்தின் பயனாகத் தண்ணீர்க் கஷ்டத்திலிருந்து அந்த ஜனங்களுக்குக் கதி மோட்சம் பிறக்கும் காலம் இப்போது வந்திருக்கிறது. மேற்படி திட்டத்தை அனுசரித்து நிர்மாணமாகவிருக்கும் கட்டிடத்துக்கு சர்க்கார் சுகாதார மந்திரி கனம் டி. எஸ். எஸ். ராஜன் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி அஸ்திவாரக்கல் நாட்டினார். தாமிரபரணி நதியை அடுத்த ஆத்தூர் கால்வாயிலிருந்து 'மெயின்' குழாய் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்படும் தண்ணீர்த் தொட்டியில் ('ரிசர்வாயர்') ஜலத்தைக் கொண்டு வந்து கிராம ஜனங்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்வது என்பதே திட்டமாகும்.

அந்தத் திட்டம் பூர்த்திபெற சுமார் முப்பத்தேழு லட்சம் ரூபாய் செலவாகும் என்றும், பின்னர் வருஷா வருஷம் அதன் பராமரிப்புச் செலவு முப்பதாயிரம் ரூபாய் ஆகும் என்றும் மதிப்பிட்டிருக்கிறார்கள். சற்றேறக்குறைய ஒரு லட்சம் ஜனங்களுக்குக் குடி தண்ணீர் கிடைக்கப் போகிறது என்பதை நினைக்கும்போது மேற்படி தொகை பெரிதல்ல. இத்தகைய திட்டம் அமுலுக்கு வருவது இந்தியாவிலேயே இதுதான் முதல் தடவை என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

சக்தி வடிவம்

அகில உலகையும் அதோ கதியாக்கி அழிக்கவல்ல அணுகுண்டு பிறந்த யுகத்தில், அகில உலகையும் உய்விக்கும் அஹிம்சா வழியைக் காட்டிய காந்தி மகான் அவதரித்தார். எனவே, அத்தகைய உத்தமரின் ஜெயந்தி வைபவம் உலகமெங்கும் கொண்டாடப்பட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. குறிப்பாக, அணுகுண்டை உற்பத்தி செய்த அமெரிக்கா மகாத்மா காந்தி ஜெயந்தியை வெகு விமரிசையாகக் கொண்டாடியிருக்கிறது. மற்றும் அந்த அவதார புருஷருக்கு அமெரிக்காவில் ஒரு கோடி டாலர் செலவில் ஞாபகச் சின்னம் அமைக்கவும் முடிவு செய்திருக்கிறார்கள். அதன் சம்பந்தமான மசோதா அமெரிக்கா ஜனப் பிரதிநிதி சபையில் நிறைவேறி, ஜனாதிபதி ட்ருமனின் அங்கீகாரத்தையும் பெற்றுச் சட்டமாகியிருக்கிறது. அமெரிக்காவில் உருவாகப் போகும் காந்தி மகானின் ஞாபகச் சின்னம், அணுகுண்டு வழியிலிருந்து அமெரிக்காவையும் மற்ற வல்லரசுகளையும் திருப்பி அஹிம்சா மார்க்கத்தில் செலுத்தும் சக்தி வடிவாக இருந்து வரும் என்று நம்புகிறோம்.

தலைவரின் திக் விஜயம்


பாரத அன்னையின் அருந்தவப் புதல்வரும் இந்தியாவின் முடிசூடா மன்னருமான பண்டித ஜவாஹர்லால் நேருவை அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் அழைத்ததன் மூலம், அவர் சுதந்திர இந்தியாவினிடம் அமெரிக்காவுக்குள்ள மதிப்பையும் மரியாதையையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். அமெரிக்க ஜனாதிபதியின் அழைப்புக்கு இணங்க ஜவாஹர்லால்ஜி தமது அருமைப் புதல்வி ஸ்ரீமதி இந்திரா காந்தியுடன் அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார். அங்கு நமது மாபெரும் தலைவரை அமோகமாக வரவேற்பதற்கான ஏற்பாடுகளை அமெரிக்க சர்க்கார் செய்து வருகிறார்கள். அமெரிக்கா, கானடா பார்லிமெண்டுகளிலும் அவரது அறிவுரைகளைக் கேட்க ஏற்பாடாகியிருக்கிறது. செல்வத்திலும், ஜனநாயக முறையிலும், தொழில் திறனிலும் உலக நாடுகளுக்குள்ளே முதல் ஸ்தானம் வகிக்கும் அமெரிக்காவும், சத்திய நெறியிலும் ஆத்ம பலத்திலும் இணையற்று விளங்கும் இந்தியாவும் ஒத்துழைப்பதன் மூலம் உலகத்தில் சமாதானத்தை நிலைநிறுத்த முடியும்.

ஜவாஹர்லால்ஜியின் அமெரிக்கா விஜயம் மற்றொரு விதத்திலும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் அமெரிக்காவில் பிரிட்டிஷார் இந்தியாவுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார்கள். அத்தகைய துஷ்பிரசாரத்துக்காகக் கோடிக் கணக்கில் தொகையும் செலவழித்தார்கள். இப்போது அவர்களுடைய பிரசாரம் நின்றிருக்கிறது. ஆனால் அந்த ஸ்தானத்தை பாகிஸ்தான் சர்க்கார் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பண்டித ஜவாஹர்லால் நேருவின் விஜயம் காரணமாக அமெரிக்காவில் நடந்து வரும் பொய்ப் பிரசாரம் ஒழிவதற்கும் வழி பிறக்கும்.

அவனுக்கு அண்ணன்!

ஸிட்னி காட்டன் என்ற ஆகாசத் திருடன் ஹைதராபாத்தில் புரிந்த திருவிளையாடல்களை அதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது. ஒரு வேளை யாராவது மறந்திருந்தாலும் அவற்றை மீண்டும் ஞாபகப்படுத்தக்கூடிய சம்பவம் ஒன்று காஷ்மீரத்தில் நடந்திருக்கிறது. அங்கு ஐக்கிய நாடுகள் சபைக் கமிஷன் நியமித்துள்ள இராணுவ ஆலோசகரான லெப்டினன்ட் ஜெனரல் டெல்வாய் வசிப்பதற்காக காஷ்மீர் சர்க்கார் ஒரு பங்களாவைக் கொடுத்திருந்தனர். அந்த பங்களாவின் சொந்தக்காரரான சர்தார் எபன்டி "ஆஸாத் காஷ்மீர்" என்ற கொள்ளைக் கூட்டத்தினரின் சர்க்காரில் மந்திரியாக இருப்பதால், அந்த பங்களாவையும் அதிலுள்ள சொத்துக்களையும் காஷ்மீர சர்க்கார் பறிமுதல் செய்திருக்கிறார்கள். சர்தார் எபன்டியின் நகைகள் முதலியன மேற்படி பங்களாவிலுள்ள ஓர் அறையில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தன. அந்த விவரம் ஜெனரல் டெல்வாய்க்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் அவர் யாருக்கும் தெரியாமல் மேற்படி அறையை உடைத்து அதில் நகைகள் அடங்கிய ஏழு பெட்டிகளையும் இதர சாமான்களையும் விமானத்தில் எடுத்துக் கொண்டுபோய் சர்தார் எபன்டியினிடம் கொடுத்து விட்டார். ஜெனரல் டெல்வாய், ஸிட்னி காட்டனைப் போல அதிகாரப் பற்றற்ற தனி நபர் அல்ல. சர்வதேச ஸ்தாபனத்தின் உயர்தர அதிகாரி. அவர், காஷ்மீர் சர்க்கார் பூட்டி முத்திரை வைத்திருந்த அறையை உடைத்து உள்ளே சென்றது பெருங் குற்றம்; நகைகளை அப்புறப் படுத்தியது அதைவிடப் பெரிய குற்றம். ஐ. நா. சபையின் பெயருக்கு மிகவும் இழிவை உண்டாக்கியுள்ள ஜெனரல் டெல்வாய் விஷயத்தில், அந்தச் சபை என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

போர் விமானம்!



அமெரிக்கா ஜனாதிபதி ட்ரூமனின் அழைப்புக்கு இணங்க பண்டித ஜவாஹர்லால் நேரு அமெரிக்கா-வுக்குச் சென்றிருக்கிறார்.

குண்டாந்தடி வேண்டாம்! கும்பிட்டுக் கேளுங்கள்!

நுனி மரத்திலே உட்கார்ந்துகொண்டு ஒருவன் அடி மரத்தை வெட்டுகிறான். அவனைப் பார்த்து வழிப்போக்கன் ஒருவன், "அப்பனே! வெட்டாதே! வெட்டினால் மரத்தோடு நீயும் சேர்ந்து விழுவாய்!" என்று எச்சரிக்கை செய்கிறான். எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் வெட்டியவன் கிளையோடு கீழே விழுந்து காலை முறித்துக் கொள்கிறான். அவன் அதனால் ஏற்பட்ட கோபத்தில் எச்சரிக்கை செய்த வழிப்போக்கனைப் பார்த்து, "அட பாவி! உன் துக்கிரி வாக்கினால் சொன்னாய் அல்லவா? அதனாலேதான் நான் விழுந்து விட்டேன்!" என்று சொல்லக்கூடும். இப்படிச் சொல்வது ஓரளவு மனித சுபாவந்தான். ஆனால் அது சரியான மனப்பான்மை என்று சொல்ல முடியாது.

இதுபோலவே, காங்கிரஸ் நிர்வாகத்தாரும் காங்கிரஸ் மந்திரி சபையும் செய்யும் சில காரியங்களினால் பொது மக்களுக்கு அதிருப்தி வளர்ந்து வருகிறது என்று எச்சரிக்கை செய்பவர்களிடம் மேற்படி கனதனவான்களுக்குக் கடுங் கோபம் உண்டாகக் கூடும். எச்சரிக்கை செய்தவர்கள் சொன்னது போல் நடந்து விட்டால், "உன்னால்தான் இது நடந்தது!" என்று எரிந்து விழவுங் கூடும். இப்படி நேரலாம் என்பதை முன்னிட்டுச் சிலர் வழியோடு போகும்போது கண்ணை மூடிக்கொண்டே போவார்கள். "யார் எக்கேடு கெட்டால் என்ன? மரத்தின் மேல் ஏறியவன் கீழே விழுந்தாலென்ன? காலை முறித்துக்கொண்டால் என்ன? நம்முடைய வழியே நாம் போகலாம்!" என்று, குதிரைக்கு இரு கண்களுக்கும் பக்கவாட்டில் மூடி போட்டிருப்பதுபோல் போட்டுக் கொண்டு சிலர் வழியோடு போய்விடுவார்கள். வேறு சிலரால் அப்படி முடியாது. இருபுறமும் பார்த்துத்தான் ஆகவேண்டும். கீழே விழப் போகிறவனுக்கு எச்சரிக்கை கொடுத்துத்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்குத் தூக்கம் வராது.

தமிழ்நாட்டில் ஜில்லா போர்டு தேர்தல்கள் முடிந்து விட்டன. பொதுவில் காங்கிரஸுக்கு மகத்தான வெற்றிதான். ஒன்பது ஜில்லாக்களில் காங்கிரஸ்வாதிகள் ஜில்லா போர்டு தலைவர்களாக வந்து விட்டார்கள். ஆயினும், வோட்டுக்கள் விழுந்திருக்கும் விகிதாசாரத்தையும் காங்கிரஸுக்கு மொத்தம் கிடைத்துள்ள ஸ்தானங்களையும் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் சில உண்மைகள் புலனாகும்.

மூன்று வருஷத்துக்கு முன்னால் நடந்த சென்னைச் சட்ட சபைத் தேர்தலிலே பொதுஜனத் தொகுதிகளிலே காங்கிரஸின் சார்பாக நின்ற அபேட்சகர் ஒருவர்கூடத் தோல்வியடையவில்லை என்பதை இந்தச் சமயத்தில் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்தத் தேர்தலில் எதிரி அபேட்சகர்கள் மிகப் பெரும்பாலோர் தங்கள் ஜாமீன் தொகையை இழந்தார்கள். எதிரி அபேட்சகர்கள் எல்லாருக்கும் சேர்த்துத் தமிழ்நாட்டு வோட்டர்கள் கொடுத்த வோட்டுக்களின் தொகை மொத்த வோட்டுக்களில் 100-க்கு 15-க்குக் குறைவாகவேயிருந்தது.

சமீபத்தில் நடந்த ஜில்லா போர்டு தேர்தல்களிலோ மொத்தம் 548 ஸ்தானங்களில் 372 ஸ்தானங்களைத்தான் காங்கிரஸ் கைப்பற்ற முடிந்தது. 176 ஸ்தானங்களை இழந்து விட்டது.

இதை அபிவிருத்தி என்று சொல்ல முடியுமா? முடியாது. மூன்று வருஷத்துக்கு முன்பிருந்த அதே நிலைமை என்றாவது சொல்ல முடியுமா? அதுவும் சொல்ல முடியாது. நிச்சயமாகப் பின்னோக்கிச் சென்றிருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

மூன்று வருஷத்துக்கு முன்பு நடந்த சட்டசபைத் தேர்தலில் ஒரு ஸ்தானம் கூட விடாமல் கைப்பற்றினோம்.

அந்த மாகாண சட்டசபைத் தேர்தலில் வோட்டுக் கொடுத்த வோட்டர்களேதான் ஜில்லா போர்டு தேர்தல்களிலும் வோட்டுக் கொடுத்தவர்கள்.

ஆனால் ஜில்லா போர்டு தேர்தலில் ஏறக்குறைய நூற்றுக்கு முப்பது ஸ்தானங்களை இழந்துவிட்டோம்.

இதன் காரணம் என்னவென்று பார்க்க வேண்டாமா? இதே நிலைமை

அடுத்து வரும் மாகாண சட்டசபைத் தேர்தலில் ஏற்படாமலிருக்கப் பிரயத்தனம் செய்ய வேண்டாமா?

நல்லது; ஸ்தானங்களில் மூன்றுக்கு ஒன்று விதம் இழந்திருக்கிறோம். வோட்டுக்களின் விஷயம் என்ன?

தேர்தல் நடந்த இடங்களில் எல்லாம் விழுந்த மொத்த வோட்டுக்களைக் கணக்கிட்டு அலசி ஆராய்ந்து பார்த்தால் ஏறக்குறையப் பாதி வோட்டுக்கள் காங்கிரஸுக்கு விழுந்திருக்கின்றன.

பாக்கிப் பாதி வோட்டுக்கள் காங்கிரஸுக்கு எதிராக விழுந்திருக்கின்றன.

பாதி வோட்டுக்கள் காங்கிரஸுக்கு எதிராக விழுந்திருந்தால் பாதி ஸ்தானங்களும் போயிருக்க வேண்டுமே என்று கேட்கலாம்.

இது அவசியமில்லை.

எப்படியென்று பார்ப்போம்.

செங்கற்பட்டு, சேலம், வட ஆற்காடு முதலிய சில ஜில்லாக்களில் காங்கிரஸ் அபேட்சகருக்கு எதிராக இரண்டு அல்லது மூன்று பேர் நின்றிருக்கிறார்கள். ஒருவர் சுயேச்சை, ஒருவர் வன்னிகுலம், ஒருவர் சோஷலிஸ்ட்—இப்படி நின்றிருக்கிறார்கள்.

ஒரு தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகருக்கு 1800 வோட்டுக்கள் கிடைத்தன. சுயேச்சையாய் நின்றவருக்கு 1400 வோட்டுக்கள் கிடைத்தன. வன்னிகுல அபேட்சகருக்கு 1600 வோட்டுக்களும் சோஷலிஸ்டுக்கு 500 வோட்டுக்களும் கிடைத்தன. மொத்தம் காங்கிரஸுக்கு எதிராக 3500 வோட்டுக்கள் பதிவாயின. ஆனால் மூன்று பேருக்குப் பிரிந்து போனபடியால் காங்கிரஸ் அபேட்சகர் ஜயித்தார்.

இப்படியாகக் காங்கிரஸுக்கு விழுந்த வோட்டுக்களையும் எதிர் அபேட்சகர்களுக்கு விழுந்த வோட்டுக்களையும் சென்னை மாகாணம் முழுமைக்கும் சேர்த்துக் கணக்கிடும் போது காங்கிரஸுக்குப் பாதி வோட்டுக்களும் காங்கிரஸுக்கு எதிராகப் பாதி வோட்டுக்களும் விழுந்திருக்கின்றன.

இது முன்னேற்றமா? அபிவிருத்தியா? திருப்திகரமான நிலைமையா? காங்கிரஸ் வாதிகள் "மகத்தான வெற்றி" என்று சொல்லிக் குதூகலப்பட வேண்டிய நிலைமையா?

* * *

மாகாண சட்டசபைத் தேர்தல் வேறு. ஜில்லா போர்டு தேர்தல் வேறு என்பதை ஒத்துக்கொள்கிறோம். மாகாண சட்டசபைத் தேர்தலில் தேசத்தின் பொது நன்மை ஒன்றே வோட்டர்கள் முன்னால் உள்ள பிரச்னை. ஆனால் ஜில்லா போர்டு தேர்தலில் அந்தந்த அபேட்சகர்களுடைய குணநிசயங்கள். அந்தந்த ஜில்லா காங்கிரஸ் நிர்வாகத்திலுள்ள கோளாறுகள், விருப்பு வெறுப்புக்கள், உள் கலகங்கள், — எல்லாம் தலையிடுகின்றன. இதற்கெல்லாம் இடம் கொடுத்துப் பார்த்தாலும் நிலைமை திருப்திகரமில்லை என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸ் பக்தியும் செல்வாக்கும் பொது மக்களிடையில் குறைந்து வருகிறது என்பதைக் கண்ணில்லாத குருடர்களைத் தவிர மற்றவர்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இதன் காரணம் என்னவென்பதையும் பரிகாரம் என்னவென்பதையும் தேசநலத்தில் கவலை கொண்டவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இரண்டு காரணங்களை இங்கு நாம் முக்கியமாகக் குறிப்பிடுகிறோம்.

1. கனம் கோபால் ரெட்டியாரின் அநாவசிய வரி விதிப்புப் பயமுறுத்தல் திட்டங்களும் அலட்சியமான பேச்சுக்களும் நகரங்களில் பொது மக்களின் அதிருப்தியை வளர்க்கக் காரணமாயிருந்திருக்கின்றன.

2. சர்க்காரின் உணவு தானியக் கொள்முதல் திட்டங்கள் கிராமங்களில் அதிருப்தியை வளர்க்க முக்கிய காரணமாயிருந்திருக்கின்றன.

முதல் காரணத்தைப்பற்றி ஏற்கெனவே பலமுறை எழுதியாகி விட்டது. இரண்டாவது காரணத்தைப் பற்றிக் கொஞ்சம் பார்க்கலாம்.

* * *

தேசத்தில் தற்போது உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. சர்தார் வல்லபாய் பட்டேல் காந்தி ஜயந்திப் பிரசங்கத்தில் சொல்லியிருப்பதுபோல் பற்றாக்குறை 100-க்கு 7 பங்குதான். இந்த 100-க்கு 7 பங்கு பற்றாக்குறையை நிரப்புவதற்காகப் பல முறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளிலிருந்து நூறு கோடி ரூபாய்க்கு மேற்கொண்ட தானியங்கள் இறக்குமதியாகி வந்தன. இந்த இறக்குமதியை இரண்டு வருஷத்தில் நிறுத்திவிட வேண்டும் என்று இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். ரொம்ப சரி. பற்றாக்குறை

அளவுக்கு உணவைப் பெருக்கப் பெரு முயற்சியும் பிரசாரமும் செய்து வருகிறார்கள். அதுவும் சரி.

இதற்கிடையில், அதாவது பற்றாக் குறை நீடித்திருக்கும் வரையில், மக்கள் அனைவருக்கும் உணவு கிடைக்கும்படி செய்வதற்காகப் பங்கீட்டு முறை அனுசரிக்கப்பட்டு வருகிறது.

பங்கீட்டு முறையை அமுல் நடத்துவதற்காகக் கிராமங்களில் உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் கட்டாயக் கொள்முதல் முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

உணவு உற்பத்தி செய்பவன் தன் குடும்பத்துக்கும் அடுத்த வருஷ விவசாயத்துக்கும் வேண்டிய தானியத்தை வைத்துக் கொண்டு பாக்கி தானியத்தைச் சர்க்கார் அதிகாரிகளிடம் ஒப்புவித்துவிடும்படி கட்டாயப் படுத்தப் படுகிறான்.

அப்படிக் கட்டாயமாக விவசாயிகளிடம் வாங்கிச் சேகரிக்கும் தானியங்களையும் வெளி நாடுகளிலிருந்தோ வெளி மாகாணங்களிலிருந்தோ தருவிக்கும் தானியங்களையும் பங்கிடு செய்து சர்க்கார் விவசாயிகளல்லாத மற்ற ஜனங்களுக்கெல்லாம் கொடுக்கிறார்கள். பட்டணங்களில் வசிக்கும் உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், ஆலைத் தொழிலாளிகள், கூலிக்காரர்கள்,—மற்றும் ரூபாய் வருமானம் உள்ள அனைவருக்கும் மேற்படி தானியத்தை பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். இதற்குத்தான் ரேஷன் அல்லது பங்கீட்டு முறை என்று பெயர்.

ரேஷன் முறையை அமுல் நடத்துவதற்காக இப்போது அதிகாரிகள் கையாளும் கட்டாயக் கொள்முதல் முறை விவசாயிகளிடையில் பெரும் அதிருப்தியை விளைவித்து வருகிறது.

இந்த முறையில் இரண்டு பெரும் தீமைகள் இருக்கின்றன :—

(1) கட்டாயக் கொள்முதல் முறையானது கிராமத்து விவசாயிகளைச் சாதாரண சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் கொடுங்கோன்மைக்கும் அதிகார அமுலுக்கும் பயமுறுத்தல்களுக்கும் உள்ளாக்கி யிருக்கிறது.

முன்னர் பிரிட்டிஷ் யதேச்சாதிகார ஆட்சியின் கீழ் கிராமங்களில் உத்தியோகஸ்தர்களின் கொடுங்கோல் அமுல் எவ்வளவு இருந்ததோ அதைவிட இப்போது அதிகமாயிருக்கிறது.

கிராமாதிகாரிகள், ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், தாசில்தார்கள், கலெக்டர்கள் முதலியோரைப் பார்த்தால் விவசாயிகள் இப்போது யமனைக் கண்டதுபோல நடுங்குகிறார்கள்.

"கொண்டு வா, தானியத்தை! எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்? கொடுக்கிறாயா? குண்டாந் தடியை எடுக்கட்டுமா?" என்கிறார்கள்.

குண்டாந்தடி என்றால், உண்மையில் 'குண்டாந்தடி' அல்ல; குண்டாந் தடியைக் காட்டிலும் தொல்லை தரும் ஜபர்தஸ்து நடவடிக்கைகள்தான்.

விவசாயிகள் அதிகாரிகளைக் கண்டு பயந்து நடுங்கவும் லஞ்சம் கொடுத்துத் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்கவும் கட்டாயக் கொள் முதல் முறைகள் இடந் தருகின்றன.

ஆகையால் நாட்டுக்கு இன்றியமையாத உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகள் பலர், "காங்கிரஸ் ராஜ்யத்தைக் காட்டிலும் முன்பிருந்த பிரிட்டிஷ் ராஜ்யமே பரவாயில்லை!" என்று நினைக்க ஏதுவாகின்றனர்.

ஏழை விவசாயிகளும் சொற்ப குடித்தனக்காரர்களும் ஆங்கிலக் கல்வி இல்லாத அப்பாவி மிராசுதார்களும் இப்படியெல்லாம் கஷ்டப்படுகிறார்கள்.

பெரிய பணக்கார மிராசுதார்களும் செல்வாக்கு வாய்ந்தவர்களும் தப்பித்துக் கொள்கிறார்கள். அவர்களிடம் தங்கள் அதிகார அமுலைச் செலுத்த உத்தியோகஸ்தர்கள் பயப்படுகிறார்கள். அப்படி யாராவது கடும் நேர்மையுள்ள உத்தியோகஸ்தர் பாரபட்சமின்றிக் கொள்முதல் செய்ய வந்தால் மேலேயிருந்து அவருக்குத் தலையில் ஒரு குட்டுக் கிடைக்கிறது!

* * *

சென்ற வருஷத்தில் நடந்த ஒரு சம்பவம். ஒரு பிரபல காங்கிரஸ்வாதியான மிராசுதார் தானியத்தை ஏராளமாகச் சேர்த்து வைத்துக் கொண்டு கொள் முதலுக்குக் கொடுக்காம லிருந்தார். ஜில்லா உத்தியோகஸ்தர் தம்முடைய அதிகார அமுலைச் செலுத்திப் பலவந்தமாகத் தானியத்தைக் கொள் முதல் செய்துவிட்டார்!

பணக்கார மிராசுதார் மேலிடத்தில், அதாவது மந்திரிகளிடம் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தினார். அந்த அதிகாரிக்கு உடனே "நீர் செய்தது அதிகப் பிரசங்கித்தனம்; ஜனநாயக ஆட்சியில் இப்படி யதேச்சாதிகாரமாகக் காரியம் செய்யக் கூடாது; உடனே அந்த மிராசுதாரிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக்

கொள்ளவும்!'' என்று தாக்கீது வந்தது. அந்த உத்தியோகஸ்தர் நூற்றிலே ஒரு பேர்வழி. ''நான் தப்பு எதுவும் செய்யவில்லை; யதேச்சாதிகாரம் செய்யவில்லை; தப்புச் செய்தது மிராசுதார்; தானியத்தைப் போடாமல் சால்ஜாப்புச் சொன்னார்; சட்டப்படி நான் கொள்முதல் செய்தேன்; நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள முடியாது; மிராசுதார்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

மந்திரிகள் மறுபடியும் புனராலோசனை செய்து விஷயத்தை அப்படியே விட்டுவிட்டார்கள்.

எல்லா உத்தியோகஸ்தர்களும் இவ்விதமே நடந்துகொள்ள முடியுமா? தாட்சண்யமில்லாமல் பெரிய மனிதர்கள் விஷயத்தில் கண்டிப்பாக இருக்க முடியுமா? உத்தியோகம் போனால் போகட்டும் என்று தைரியமாக இருக்க முடியுமா? அப்புறம் ''லஞ்சம்'' என்பதாக ஒரு பயங்கரப் பிசாசு இருக்கிறதே? அதன் பிடியில் விழாமல் எல்லாரும் தப்பிக்கமுடியுமா?

நேர்மையான உத்தியோகஸ்தரின் பெயர் வெளியில் அடிபடாது; யாரும் அவரைப் பற்றிப் பேசமாட்டார்கள். லஞ்சம் வாங்கும் உத்தியோகஸ்தர் ஒருவர் இருந்தால் அவரால் எல்லா உத்தியோகஸ்தர்களுமே நிந்தைக்கு உள்ளாவார்கள். அந்த நிந்தையும் பழியும் காங்கிரஸ் சர்க்காரை ஓரளவு சேரத்தான் சேரும். காங்கிரஸின் நல்ல பெயரையும் செல்வாக்கையும் அந்தப் பழி பாதித்தே தீரும்.

2. கட்டாயக் கொள்முதல் முறையில் இன்னொரு பெரிய தீமை இருக்கிறது. அதுதான் மக்களின் ஒழுக்கத்துக்கு அதனால் விளையும் ஆபத்து.

கட்டாய தானியக் கொள்முதலில் சர்க்கார் நிர்ணயித்துக் கொடுக்கும் விலைக்கும், கள்ள மார்க்கெட்டில் தானியம் விற்கும் விலைக்கும் ஏராளமான வித்தியாசம் இருக்கிறது.

விவசாயிக்குச் சர்க்கார் கொடுக்கும் விலைக்கும் அதே நெல்லை அரிசியாக்கி அவர்கள் ரேஷன் கடையில் ஜனங்களுக்கு விற்கும் விலைக்கும் வித்தியாசம் நிரம்ப இருக்கிறது.

விவசாயியிடம் பதினைந்து ரூபாய்க்கு வாங்கும் நெல்லை அரிசியாக்கி ரேஷன் கடையில் இருபத்தைந்து ரூபாய்க்கு விற்கிறார்கள்.

அப்போது ஏழை விவசாயிகளுக்கு என்ன தோன்றுகிறது?

ஒரு மூட்டை நெல்லைக் கொடுக்காமல் வைத்திருந்து பிற்பாடு விற்றால் பத்து ரூபாய் அதிகம் கிடைக்குமே என்று தோன்றுகிறது.

அதிகப் பணத்துக்காகத் தானியத்தைப் பதுக்கத் தோன்றுகிறது. பதுக்கியதைக் 'கள்ள' மார்க்கெட்டில் விற்க வேண்டி வருகிறது. கண்டு பிடித்த உத்தியோகஸ்தனுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டி வருகிறது. முன்னதாகவே அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்துக் குறைவாகக் கணக்குக் காட்டி கொள்முதல் செய்யப் பண்ணலாம் என்ற தூண்டுதலும் ஏற்படுகிறது.

மனிதனுடைய ஒழுக்கம் பணத்தைக் காட்டிலும் பெரிது; பதவியைக் காட்டிலும் பெரிது; சுகபோகத்தைக் காட்டிலும் பெரிது; உயிரைக் காட்டிலும் ஒழுக்கமே பெரிது.

ஆயினும் கட்டாயக் கொள்முதல் முறையினால் கிராமத்து விவசாயிகளின் ஒழுக்கம் பறிபோகிறது; சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் நேர்மையும் பறிபோகிறது; காங்கிரஸ் சர்க்காரின் கௌரவமும் பறிபோகிறது.

பிரிட்டிஷ் சர்க்கார் ஆட்சியின் கீழ் இருந்ததைக் காட்டிலும் இப்போது நாட்டில் லஞ்சப்பேயின் தாண்டவம் அதிகமாகியிருக்கிறதென்றால், அதற்கு முக்கிய காரணம் கட்டாய தானியக் கொள்முதலேயாகும்.

இதெல்லாம் புது டில்லியிலிருந்து ஆட்சி நடத்தும் ஜவாஹர்லால்ஜி, சர்தார் வல்லபாய் பட்டேல் முதலியவர்களுக்குத் தெரிய முடியாது. ஆனால் இங்கே சென்னையிலிருந்து மாகாண ஆட்சி நடத்தும் மந்திரிகளுக்குத் தெரிந்துதானிருக்கும். தெரியாவிட்டாலும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொண்டு இந்தத் தீமையைப் போக்குவதற்குத் தக்க வழிகளைத் தேடவேண்டும்.

• • •

பங்கீட்டு முறையை அடியோடு எடுத்துவிட்டால் எல்லாத் தீமைகளும் ஒழிந்து போகும். அதைத்தான் காந்தி மகாத்மா சொன்னார். விவசாயிகளிடம் அவருக்கிருந்த விசேஷ அன்பினால் சொன்னார்; உயிரைக் காட்டிலும் ஒழுக்கமே பெரிது என்னும் அவருடைய நம்பிக்கை காரணமாகப் பங்கீட்டு முறையை ரத்து செய்யுங்கள் என்று சொன்னார்.

நம்முடைய மந்திரிகளும் தந்திரிகளும் உணவு நிபுணர்களும் உத்தி

யோகஸ்தர்களும் சேர்ந்து ஏகமனதாக "அது சாத்தியமில்லை" என்று சொல்லி விட்டார்கள்.

சரி; அப்படியே யிருக்கட்டும். இன்னும் சிலகாலத்துக்குப் பங்கீட்டு முறை அவசியம் என்றே வைத்துக் கொள்ளலாம்.

ஆயினும், அதிலுள்ள முக்கியமான தீமைகளை நீக்கும் வழியையாவது பார்க்கலாமல்லவா?

இந்த நோக்கத்துடனேயே, கட்டாயக் கொள்முதல் முறையை ஒழித்து விட்டு அதற்குப் பதிலாகக் குத்து மதிப்புக் கொள்முதல் முறையை (Levy system) அனுசரிக்கலாமென்று சில தேச பக்தர்கள் யோசனை சொல்லி வருகிறார்கள்.

கட்டாயக் கொள்முதல் முறையில் ஒரு விவசாயியின் வயலில் விளைந்தது இவ்வளவு, அதில் அவன் வைத்துக் கொள்ள வேண்டியது இவ்வளவு, அளந்து கொடுக்க வேண்டியது இவ்வளவு என்பதைச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நிர்ணயிக்க வேண்டும். அதன்படி விவசாயிகள் கொடுக்க வேண்டும். கொடுக்காவிட்டால் வீடு புகுந்து சோதனை போடுவார்கள்; மற்ற அதிகார அமுல்கள் தொடரும்.

குத்து மதிப்புக் கொள்முதல் முறையில், ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு பிர்க்காவிலும் நீர்வள நிலவளத்துக்குத் தகுந்தபடி ஏக்கராவுக்கு இவ்வளவு தானியம் கொடுக்க வேண்டும் என்று விதித்துவிட வேண்டியது. அதன்படி பெரிய மிராசுதார்கள், சின்ன விவசாயிகள் எல்லாரும் விகிதாசாரமாகக் கொடுத்துவிடவேண்டியது.

கொடுத்தது போகப் பாக்கி மிருந்திருக்கும் தானியத்தை அவரவர்கள் இஷ்டப்போல் விற்றுக் கொள்ளலாம்.

சரியான மதிப்புப் போட்டு ஏக்கராவுக்கு இவ்வளவு தானியம் என்று விதித்துவிட்டால், கொள்முதல் இப்போதைவிடக் குறைந்து விடாது.

ஆனால் அதிகார அமுல், பாரபட்சம், ஓரவஞ்சனை, லஞ்சக் கொடுமை இவையெல்லாம் இல்லாமற் போய்விடும்.

இப்போது நிலவரி வசூலாவதைப் போல் சுலபமாகவும் சிக்கல்கள் இல்லாமலும் கொள்முதல் நடந்துவிடும்.

காரியத்துக்குக் காரியம் ஆகும்; அநாவசியமான கஷ்டங்களும் புகார்களும் இல்லாமற் போகும்.

இதை ஆதரித்துத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் காரியக் கமிட்டி சமீபத்தில் தீர்மானம் செய்திருப்பதை அறிந்து மகிழ்கிறோம். இதிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகள் தேச நிலைமை பற்றி விழிப்படைந் திருக்கிறார்கள் என்று தெளிவாகிறது.

சென்னை மந்திரிகளும் நாட்டு நிலைமையை நன்கு அறிந்திருப்பார்கள் என்றே நம்புகிறோம். அவர்களும் கொள்முதல் முறையை மாற்றுவதற்குச் சாதகமாகவே இருப்பார்கள்.

ஆனால் விரோதமாக இருக்கக் கூடியவர்கள் யார்?

அதிகார வர்க்கத்தினர்தான்.

பிரிட்டிஷ் ஆட்சி மாறியபோதிலும் தாங்கள் சிறிதளவும் மாறாமல் கல்லுப் பிள்ளையாரா யிருக்கும் உத்தியோக வர்க்கத்தார் ஜனங்கள்மீது தங்கள் பிடிப்பைத் தளர்த்துவதற்குரிய எந்தச் சீர்திருத்தத்துக்கும் விரோதமாகவே இருப்பார்கள்.

"இப்போதுள்ள முறையை மாற்றினால் உடனே உலகம் தலைகீழாகிவிடும்; பஞ்சம் வரும்; பட்டினி வரும்; கலகம் வரும்; குழப்பம் வரும்!" என்றெல்லாம் சொல்வார்கள்.

சென்னையில் உள்ளதைக் காட்டிலும் டில்லியில் உத்தியோக வர்க்கத்தின் செல்வாக்கு அதிகமா யிருப்பதால் இந்திய அரசாங்கத்தாரும் கொள்முதல் முறையில் மேற்படி மாறுதல் செய்வதற்கு விரோதமா யிருக்கலாம்.

சென்னை மந்திரிகள் அந்த எதிர்ப்புகளையெல்லாம் பொருட்படுத்தாமல் பிடிவாதமா யிருந்து கொள்முதல் முறையில் இந்த மாறுதலை உடனே செய்ய வேண்டும்.

இந்த மாகாணத்தில் காங்கிரஸுக்கு ஏற்படும் நல்ல பெயரோ கெட்ட பெயரோ பொதுஜன மந்திரிகளைப் பாதிக்குமே தவிர அரசாங்க உத்தியோகஸ்தர்களைப் பாதியாது.

* * *

தேசத்தைக் காக்க வேண்டியவர்கள் உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகள். அவர்கள் மனது வைத்து அதிக தானியம் உற்பத்தி செய்து கொடுத்தால்தான் பாரத நாட்டின் பொருளாதாரம் தப்பிப் பிழைக்கும். எல்லாவித முன்னேற்றமும் ஏற்படும். அப்படி நாட்டின் ஜீவநாடியா யிருப்பவர்களைக் குண்டாந் தடி கொண்டு அடித்து விரட்ட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். அவர்களைக் கும்பிட்டு வேண்டிக்கொண்டு மற்றவர்களுக்கு வேண்டிய தானியத்தைச் சேகரிக்க வேண்டும்.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா. கி.

18 கிலாபத் கிளர்ச்சி

பாரத நாட்டின் சுதந்திரத்துக்காக மகாத்மா காந்தி ஆரம்பித்து நடத்திய முதலாவது பேரியக்கத்துக்கு ஒத்துழையாமை இயக்கம் என்று பெயர். இந்த இயக்கத்தின் வித்து 1919-ல் மகாத்மாவின் உள்ளத்தில் விதைக்கப் பட்டது. 1920-ல் அது முளைத்து வளர்ந்தது. அடுத்த 1921-ம் ஆண்டில் அந்த இயக்கம் மாபெரும் விருட்சமாகிப் பரவிப் படர்ந்து தழைத்தது.

ஒத்துழையாமை இயக்கத்துக்கு முக்கிய காரணங்களாக உதவியவை (1) பஞ்சாப் படுகொலை முதலிய கோர நிகழ்ச்சிகளும் (2) கிலாபத்துக்கு ஏற்பட்ட ஆபத்துமாகும்.

1919-ம் ஆண்டு முதல் 1921-ம் ஆண்டு வரையில் பாரத நாட்டின் சரித்திரத்தில் ஒரு மகோன்னதமான காலம். அந்த மூன்று வருஷத்திலும் இந்தியாவில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமைப் பட்டுச் சகோதர வாஞ்சையுடன் நடந்து கொண்டது போல் அதற்கு முன்னால் நடந்ததில்லை; இனிமேல் நடக்குமா என்றும் சொல்ல முடியாது. இத்தகைய ஹிந்து முஸ்லிம் சகோதரபாவத்துக்குக் காரணமாயிருந்தது கிலாபத்துக்கு வந்த ஆபத்துதான். கிலாபத்தைப் பற்றியும் அதற்கு வந்த ஆபத்தைப் பற்றியும் இப்போது தெரிந்து கொள்வோம்.

முதலாவது உலக மகா யுத்தத்தில் பிரிட்டனும் ஜெர்மனியும் போராடிக் கொண்டிருந்தபோது துருக்கி தேசம் ஜெர்மன் கட்சியைச் சேர்ந்தது. இதனால் இந்திய முஸ்லிம்கள் ஒரு சங்கடமான நிலைக்கு உள்ளானார்கள்.

துருக்கி சுல்தான் துருக்கி சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தி மட்டுமல்ல; உலக முழுவதிலும் வசித்த முஸ்லிம்களின் மத குரு என்ற பதவியையும் வகித்து வந்தார். இந்தக் குரு பீடத்துக்குக் கிலாபத் என்று பெயர். கிலாபத் பதவியில் இருப்பவர் 'கலீபா' என்று அழைக்கப் பட்டார்.

உலக முஸ்லிம்களின் குரு என்ற பதவியைத் துருக்கி சுல்தான் திறம்பட வகிப்பதற்கு அவர் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் சர்வாதிகார மன்னராகவும் இருக்க வேண்டும் என்றும், அப்போதுதான் குரு பீடத்தை நன்கு வகிக்க முடியும் என்றும் முஸ்லிம்கள் கருதினார்கள். அதோடு முஸ்லிம்களின் புண்ணிய க்ஷேத்திரங்கள் பலவும் அடங்கிய ஜஸிரதுல் அரப் என்னும் பிரதேசம் துருக்கி சுல்தான் ஆதிக்கத்தில் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்பினார்கள். 'ஜஸிரதுல் அரப்'பில் மெஸபொடோமியா, அரேபியா, ஸிரியா, பாலஸ்தீனம் - இவை சேர்ந்தவை.

பிரிட்டனுக்கு எதிர்க் கட்சியில் துருக்கி சேர்ந்தபோது இந்திய முஸ்லிம்கள் தங்கள் மத குருவை எதிர்த்து எப்படித் தாங்கள் யுத்தம் செய்ய முடியும் என்று வேதனைப் பட்டார்கள். யுத்த முடிவில் பிரிட்டன் ஜயித்தால் 'கலீபா'வின் கதி என்ன ஆகுமோ என்று கவலைப்பட்டார்கள். துருக்கி சுல்தானுடைய சாம்ராஜ்யம் பிடுங்கப்பட்டு விட்டால் அவர் 'கலீபா' பதவியை எப்படி வகிக்க முடியும்? 'ஜஸிரதுல் அரப்'பிலுள்ள முஸ்லிம் புண்ணிய க்ஷேத்திரங்களின் நிலைமை என்ன?—இந்தச் சந்தேகங்களையெல்லாம் யுத்த ஆரம்பத்தில் வெளிப்படையாக எழுதியதற்காகவே அலி சகோதரர்கள் பல வருஷ காலம் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

யுத்தம் ஒரு நெருக்கடியான நிலைமையை அடைந்திருந்தபோது அச்சமயம் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருந்த லாயிட் ஜார்ஜ் இந்திய முஸ்லிம்களுக்குச் சில வாக்குறுதிகளைக் கூறினார். "துருக்கி சுல்தானுடைய அதிகாரத்துக்காவது, கலீபா பீடத்துக்காவது எந்தவிதப் பாதகமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வோம்" என்று சொன்னார். "சின்ன ஆசியா, திரேஸ் என்னும் பிரசித்தி பெற்ற செழிப்பான பிரதேசங்களையெல்லாம் துருக்கி சாம்ராஜ்யத்திலிருந்து

அபகரிக்கும் எண்ணம் எங்களுக்குக் கிடையாது'' என்று சொன்னார். இந்த வாக்குறுதிகளை நம்பியே இந்திய முஸ்லிம்களில் பெரும்பாலோர் யுத்த முயற்சிகளில் ஒத்துழைத்தார்கள்.

ஆனால் முதலாவது உலக யுத்தம் 1918-ம் ஆண்டின் இறுதியில் முடிந்ததோ, இல்லையோ, லாயிட் ஜார்ஜின் வாக்குறுதிகளைப்பற்றிப் பிரஸ்தாபமே இல்லை. அந்த வாக்குறுதிகள் காற்றிலே பறக்க விட்டுவிடப்படும் என்று தோன்றியது. இந்த விஷயம் 1919-ம் வருஷம் முழுவதிலும் இந்திய முஸ்லிம் தலைவர்களின் மனதைக் கலக்கிக் கொண்டிருந்தது. சின்ன ஆசியாவில் துருக்கியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த ஸிரியா, பாலஸ்தீன் தேசங்களைப் பிரான்ஸும் பிரிட்டனும் கைப்பற்றித் தங்கள் மேலதிகாரத்தை ஏற்படுத்திக் கொண்டன. திரேஸ் மாகாணம் கிரீஸுக்குக் கொடுக்கப்பட்டது. துருக்கி சுல்தான் ஒரு கைதியைப்போல நடத்தப்படலானார். வெற்றி பெற்ற நேசக் கட்சியார் நியமித்த கமிஷன் துருக்கியை ஆட்சி செய்யத் தொடங்கியது.

இந்தச் செய்திகள் எல்லாம் வர வர இந்திய முஸ்லிம்களின் கொதிப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது. 'கிலாபத்' பீடத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக இந்திய முஸ்லீம்கள் ஒரு பெரும் போராட்டம் நடத்த விரும்பினார்கள். ஆனால் எந்த விதத்தில் அந்தப் போராட்டத்தை நடத்துவதென்று விளங்கவில்லை. இதைப் பற்றித் தீர்மானிப்பதற்காக அடிக்கடி முஸ்லிம் தலைவர்களின் மகாநாடுகள் நடந்தன. 1919-ம் வருஷக் கடைசியில் அலகாபாத்தில் நடந்த முஸ்லிம் தலைவர்களின் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டு மகாத்மா காந்தி போயிருந்தார். முஸ்லிம் தலைவர்கள் ஆத்திரமாகவும் ஆவேசமாகவும் பேசுவதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார்: கடைசியில் அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டபோது, ''பிரிட்டிஷ் சர்க்காருடன் எத்தனையோ விதங்களில் நீங்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைத்து வருகிறீர்கள். அப்படி ஒத்துழைத்துக் கொண்டே சர்க்காருடன் போர் நடத்துவதைப் பற்றிப் பேசுவது பொருத்தமில்லை. முதலில் பிரிட்டிஷ் சர்க்காரோடு ஒத்துழைப்பதை நிறுத்த வேண்டும்'' என்றார் காந்திஜி. இந்தப் பேச்சின் போதுதான் மகாத்மா 'நான் கோ ஆபரேஷன்' என்ற வார்த்தையை முதன் முதலில் உபயோகித்தார். அங்கே கூடியிருந்த முஸ்லிம்களும் மகாத்மாவின் யோசனையை ஒப்புக்கொண்டு பிரிட்டிஷ் சர்க்காரோடு படிப்படியாக ஒத்துழைப்பை நிறுத்த வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஆனால் ஒத்துழையாமை இயக்கம் குறிப்பான திட்டங்களுடன் அப்போது உருவாகவில்லை.



கணவன்:—என்ன, இன்னும் டிபன் ஆகவில்லையா? சரி, நான் ஹோட்டலுக்குப் போகிறேன்.

மனைவி:—இன்னும் ஒரு பத்து நிமிஷம் இருங்கள்.

கணவன்:—ஏன், அதற்குள் தயாராகி விடுமா?

மனைவி:—இல்லை; நானும் டிரஸ் பண்ணிக் கொண்டு உங்களோடு வந்து விடுவேன்.

அமிருதசரஸ் காங்கிரசுக்குப் பிறகு மௌலானா முகம்மது அலியும் இன்னும் சில முஸ்லிம் தலைவர்களும் இங்கிலாந்துக்குத் தூது சென்றார்கள். கிலாபத் சம்பந்தமாகவும் முஸ்லிம் புண்ணிய க்ஷேத்திரங்கள் சம்பந்தமாகவும் லாயிட் ஜார்ஜ் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றித்தரவேண்டுமென்று பிரிட்டிஷ் மந்திரிகளிடம் அவர்கள் மன்றாடினார்கள். அவர்களுடைய கோரிக்கை பலிக்கவில்லை. சமாதான ஏற்பாடுகள் இங்கிலாந்தின் கையில் மட்டுமில்லையென்றும் ஜயித்த கட்சியைச் சேர்ந்த மற்ற தேசங்களின் அபிப்பிராயத்தைப் பொறுத்தே முடிவு செய்ய வேண்டுமென்றும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் கூறினார்கள். லாயிட் ஜார்ஜின் வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கப் போவதில்லையென்பது ஒருவாறு நன்கு தெரிந்துவிட்டது.

இதையறிந்த இந்தியாவிலிருந்த முஸ்லிம் தலைவர்கள் 1920 மார்ச்சு மாதம் 19-ந் தேதியைத் தேசிய துக்க தினமாகப் பாவித்துத் தேசமெங்கும் கூட்டங்கள்

நடத்த வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அந்தத் துக்க தினக் கூட்டங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று இந்திய சர்க்கார் எச்சரிக்கை செய்தார்கள். இப்படி முஸ்லிம்களின் மனது கொதித்துக் கொண்டிருந்த நிலையில் மகாத்மா காந்தி முன் வந்து ஓர் அறிக்கை விடுத்தார். இந்திய முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு இணங்கத் துருக்கி சம்பந்தமான சமாதான உடன்படிக்கை ஏற்படாவிடில் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்து நடத்தத் தாம் சித்தமாயிருப்பதாக அந்த அறிக்கையில் மகாத்மா காந்தி தெரிவித்திருந்தார்.

அந்த நிலையில் இந்திய முஸ்லிம்கள் ஒரு முகமாக மகாத்மாவைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொள்ள முன் வந்தார்கள். முஸ்லிம்களுக்கு மகாத்மாவின் அஹிம்சைக் கொள்கையில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் மகாத்மாவின் சொல்லுக்கிணங்க அஹிம்சையைக் கைக்கொள்ளவும் இசைந்தார்கள். மசூதிகளில் கூடிய மாபெரும் முஸ்லிம் கூட்டங்களில் 'வந்தேமாதரம்!' 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்ற கோஷங்கள் அந்த நாளில் எழுந்தன. மகாத்மாவிடம் நன்றி தெரிவித்துக் கொள்வதற்காகப் பல கிலாபத் கூட்டங்களில் பசுவதையை முஸ்லிம்கள் நிறுத்திவிட வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேறின!

இதற்கிடையில் பஞ்சாப் கொடுமைகளைப் பற்றி விசாரிப்பதற்குக் காங்கிரஸ் நியமித்திருந்த கமிட்டியின் அறிக்கை மார்ச் 25-ந் தேதி வெளியாயிற்று. அதில் ஸர் மைக்கேல் ஓட்வியரின் கொடுங்கோல் ஆட்சியில் பஞ்சாப்பில் நடந்த அக்கிரமங்களைப் பற்றித் திட்டமான சாட்சியங்களுடன் விவரங்கள் வெளியாயின. பஞ்சாப் கொடுமைகளைப் பற்றி யெல்லாம் முதன் முதலில் அப்போதுதான் தேச மக்கள் திட்டமான விவரங்களை அறிந்தார்கள். மக்களின் உள்ளம் எப்படிக் கொதித்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

1919-ம் வருஷத்தில் ஏப்ரல் மாதம் 6-ந் தேதி முதல் 13-ந் தேதி வரையில் நடந்த சம்பவங்களின் ஞாபகார்த்தமாக இந்த வருஷம் (1920) ஏப்ரல் 6ந் தேதி முதல் 13ந் தேதி வரையில் தேசியவாரம் கொண்டாடப் பட்டது. இந்தக் கொண்டாட்டங்களில் நாடெங்கும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து ஈடுபட்டார்கள். "வந்தே மாதரம்" "அல்லாஹோ அக்பர்" "மகாத்மா காந்திக்கு ஜே" என்ற மூன்று கோஷங்களும் சேர்ந்து வானளாவ ஒலித்தன. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தாங்கள் ஒரு தாயின் வயிற்றில் பிறந்த இரத்த சகோதரர்கள் என்று எண்ணி அந்தக் காலத்தில் நடந்து கொண்டார்கள்.

அடுத்த மே மாதத்தில் சமாதான உடன்படிக்கை விவரங்கள் வெளியாயின. அந்தச் செய்தியை வெளியிட்ட வைஸ்ராய் லார்ட் செம்ஸ்போர்டு, "சமாதான உடன்படிக்கை நிபந்தனைகள் இந்திய முஸ்லிம்களுக்கு மனத் துன்பத்தை உண்டாக்கக் கூடியது இயற்கை தான். ஆயினும் அவர்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்!" என்று ஆறுதல் கூறவும் முன் வந்தார். ஆனால் முஸ்லிம்கள் பொறுமையைக் கடைப் பிடிக்கத் தயாராயில்லை.

எரிகிற தீயில் எண்ணெய் விட்டது போல, அதே மாதத்தில் இன்னொரு சம்பவமும் கூடச் சேர்ந்தது. பஞ்சாப் கொடுமைகளைப் பற்றி விசாரிப்பதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் லார்ட் ஹண்டரின் தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்திருந்தார்கள் அல்லவா? அந்தக் கமிட்டியின் அறிக்கையும் வெளியாயிற்று. எதிர்பார்த்தது போலவே ஹண்டர் கமிட்டி அறிக்கை பஞ்சாப் கொடுமைகளைப் பற்றிப் பூசி மெழுகிவிட முயற்சி செய்தது.

சில அதிகாரிகள் அவசியத்தைக் காட்டிலும் அதிகாரத்தைக் கொஞ்சம் அதிகமாக உபயோகித்து விட்டார்கள் என்று மட்டும் சொல்லி, வருங் காலத்துக்கு இராணுவச் சட்ட அமுல் நடத்தும்



"இவர் ரொம்பப் படிச்சவருங்க. பெரிய பெரிய பரீட்சையெல்லாம் பாஸ் பண்ணியிருக்கிறார்."

"ஓஹோ, அப்படியா! அவர் இப்போது என்ன செய்கிறார்?"

"பஸ் ஸ்டாண்டிலே பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்!"

விதிகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று ஹண்டர் கமிட்டி சிபார்சு செய்தது. கொடுமை செய்த அதிகாரிகளில் ஜெனரல் டையர் மட்டும் வேலையினின்று அனுப்பப்பட்டார். ஆனால் அவரைப் பற்றியும் மாண்டேகு, "டையர் தாம் கடமையென்று கருதியதையே செய்தார்!" என்று முதுகிலே தட்டிக் கொடுத்தார். பஞ்சாபிலிருந்த ஐரோப்பியர்களோ தங்கத்தினாலே ஒரு பட்டாக் கத்தி செய்து ஜெனரல் டையருக்குப் பரிசு வழங்கினார்கள்!

இந்த நிலைமையில் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் உருவாகிக் கொண்டு வந்தது. அந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

1. பிரிட்டிஷ் சர்க்கார் கொடுத்த ராவ் பகதூர், ஸர் முதலிய பட்டங்களை விட்டு விட வேண்டும்.

2. சர்க்கார் சட்டப்படி அமைத்துள்ள சட்ட சபைகளைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

3. சர்க்கார் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் படிக்கும் மாணவர்கள் அந்தக் கல்வி ஸ்தாபனங்களை விட்டு வெளியேற வேண்டும்.

4. சர்க்கார் கோர்ட்டுகளைப் பொது மக்களும் வக்கீல்களும் பகிஷ்கரித்து விட வேண்டும்.

5. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தங்கள் உத்தியோகங்களை விட்டு வெளியேற வேண்டும்.

6. பொது ஜனங்கள் சர்க்காருக்கு எந்த விதமான வரியும் கொடுக்காமல் நிறுத்தி விட வேண்டும்.


மேற்கூறிய திட்டங்களில் முதல் நான்கு படிகளை உடனே அனுசரிக்க வேண்டும்; ஐந்தாவது ஆறாவது படிகளைக் கடைசியாக அமுலுக்குக் கொண்டு வர வேண்டும்.

மேற்கூறிய எல்லாத் திட்டங்களுக்கும் அடிப்படையாக இருக்க வேண்டியவை சத்தியமும் அஹிம்சையும்.

மே மாதக் கடைசியில் பம்பாயில் கிலாபத் கமிட்டி கூடி மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தைப் பரிபூரணமாக ஏற்றுக்கொண்டது. மே மாதம் 30-ந் தேதி காசியில் கூடிய அகில இந்தியக் கமிட்டி கூட்டத்தில் அவ்வளவு ஒருமுகமான அபிப்பிராயம் வெளியாகவில்லை. ஏனெனில், சில காங்கிரஸ் தலைவர்கள் கிலாபத் இயக்கத்தைச் சுயராஜ்ய இயக்கத்தோடு சேர்க்க விரும்பவில்லை. காந்தி மகாத்மாவின் ஒத்துழையாமைத் திட்டத்தில் சில அம்சங்களையும் அவர்கள் ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. எனவே, நீண்ட விவாதத்துக்குப் பிறகு, ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றித் தீர்மானிப்பதற்காகச் செப்டம்பர் மாதத்தில் கல்கத்தாவில் விசேஷ காங்கிரஸ் கூட்டுவது என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால் விசேஷ காங்கிரஸ் கூடும் வரையில் காத்திருப்பதற்குத் தேச மக்கள் தயாராயில்லை. முக்கியமாக, முஸ்லிம்கள் உடனே இயக்கத்தை ஆரம்பித்துவிட விரும்பினார்கள். இந்த நிலைமையை அறிந்த மகாத்மா அலகாபாத்தில் ஜூன் மாதம் 2-ந் தேதி எல்லாக் கட்சித் தலைவர்களும் அடங்கிய மகாநாடு ஒன்றைக் கூட்டினார். இந்த மகாநாட்டில் ஒத்துழையாமை இயக்கம் ஒப்புக்கொள்ளப்பட்டது.

விசேஷ காங்கிரஸ் கூடும் வரையில் காத்திராமல் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்துவிட வேண்டும் என்று மகாத்மா காந்தியும் அவருடைய ஐந்து முஸ்லிம் சகாக்களும் தீர்மானித்தார்கள். ஆகஸ்டு 1-ந் தேதி இயக்கத்தை ஆரம்பிப்பது என்று நாளும் குறிப்பிட்டார்கள்.



" இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே!
இயந்திரங்கள் வகுத்திடுவீரே!"

என்ற பாரதியாரின் வாக்கைக் கடைப்பிடிக்கும் பொருட்டு ஸ்ரீ சி. ஆர். ராமகிருஷ்ணன் B Sc. அமெரிக்காவுக்குச் சென்று திரும்பி வந்திருக்கிறார். நவீன விவசாய இயந்திரங்களின் நுட்பங்களையும் அந்த இயந்திரங்களை வகுக்கும் வகைகளையும் இயக்கும் வகைகளையும் தெரிந்துகொண்டு வந்திருக்கிறார். சமீபத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியாரின் புதல்வர் ஸ்ரீ ராமகிருஷ்ணன், ஸர் பி. டி. ராஜன் அவர்களின் மாப்பிள்ளை. நாட்டுக்கு இப்போது மிக அவசியமாயிருக்கும் விவசாய அபிவிருத்திக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணன் அமெரிக்காவில் அடைந்து வந்திருக்கும் ஆற்றலும் பயிற்சியும் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

வாழ்க பெண்குலம்!

மகாத்மாஜி தேசத்துக்காகவும் சமூகத்துக்காகவும் எத்தனையோ அருந்தொண்டுகள் ஆற்றியிருக்கிறார். அவற்றில் பெண் குலத்துக்கு அவர் ஆற்றிய ஒப்பற்ற தொண்டை யாரும் மறக்கவே முடியாது.

சமூகத்தில் ஒரு பெரும் பகுதி அஞ்ஞான இருளில் மூழ்கிக் கிடப்பது தேசத்துக்குப் பெரும் ஆபத்து என்று காந்தி மகான் கருதினார். பெண் மக்களுடைய அஞ்ஞான இருளைப் போக்கி, சமூகத்தில் அவர்களுக்குச் சிறப்பையும் அந்தஸ்தையும் கொடுப்பதற்காக அவர் அரும்பாடுபட்டார். தேச விடுதலையுடன் பெண்கள் விடுதலையையும் ஒரு லட்சியமாகக் கொண்டு உழைத்தார்.

பெண்கள் முன்னேற்றத்தை மகாத்மாஜி எவ்வளவு முக்கியமானதாகக் கருதினார் என்பதற்கு, நிர்மாணத் திட்டத்தில் உள்ள பதினாறு அம்சங்களில் அதையும் ஒன்றாகச் சேர்த்திருப்பதே போதிய சான்றாகும்.

மகாத்மாஜியின் சலியாத உழைப்பால் பெண்குலம் ஓரளவு விழிப்படைந்தது. சுதந்திர இயக்கத்தில் கலந்து கொண்டு இந்தியப் பெண்குலம் அருந்தொண்டாற்றிப் புகழ்பெற்றது. தேசம் விடுதலையடைந்த பிறகு அதிகார பீடத்திலும் அமர்ந்து ஆட்சி செலுத்தத் தொடங்கியிருக்கிறது. கவர்னராகவும் மந்திரியாகவும் ஸ்தானாதிபதியாகவும் பல உன்னதமான பதவிகளைத் திறம்பட வகித்து நடத்தி வருகிறது.


இது பாராட்டத்தக்க விஷயந்தான். ஆனால், பெண்கள் முன்னேற்றம் அத்துடன் முடிவடைந்து விட்டதாகச் சொல்ல முடியுமா? கிராமங்களிலும் பட்டணங்களிலும் உள்ள கோடிக்கணக்கான பெண் மக்கள் இன்னும் அறியாமையில் மூழ்கிக் கிடப்பது நமக்குத் தெரியாத விஷயம் அல்ல. அவற்றைப் போக்குவது சுலபமான விஷயமும் அல்ல. தனிப்பட்ட மனிதர்களுடைய சக்திக்கும் ஸ்தாபனங்களுடைய சக்திக்கும் அது புறம்பானது. ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்களால்தான் அது முடியும். இத்தனை வருஷ காலமும் அந்நிய அரசாங்கம் ஆட்சி நடத்தி வந்தது. அவர்களுக்கு இந்தியப் பெண் மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதில் அக்கறை இருக்க நியாயம் இல்லை. ஆனால், இப்போது மாகாணங்களிலும் மத்திய சர்க்காரிலும் ஆட்சி நம்முடைய கைக்கு மாறியிருக்கும்போது, அவர்களுக்கு இதில் சிரத்தை உண்டாவது இயல்புதானே?

பெண்கள் அபிவிருத்திக்காக சென்னை சர்க்கார் ஒரு ஏழு வருஷத் திட்டம் வகுத்து, அதற்கு முதற்படியாக மாதர் நல இலாகா ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த இலாகாவுக்கு மாகாணத்தில் உள்ள பல முக்கிய நகரங்களில் கிளைச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றின் முக்கிய வேலைகள் இரண்டு. (1) எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பது. (2) எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு அவர்களுக்குத் தெரிந்த கல்வி மூலம் பொதுக் கல்வியைக் கற்றுக் கொடுப்பது. உதாரணமாக, குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதவையாக விளங்கும் சமையல், குழந்தைப்பேறு, சிசு சம்ரட்சணை, முதல் உதவி, மருத்துவம், தையல், நூற்பு, நெசவு முதலியவை கற்றுக் கொடுக்கப் படுகிறது.

சேவை இல்லத்தில் பெண்கள் கூடை முடையும் காட்சி



இதன் மூலம் பெண் மக்கள் பலர் ஜாதிமத வித்தியாசம் எதுவும் இல்லாமல் ஒருவருடனொருவர் நெருங்கிப் பழகுவதற்கு ஒரு அருமையான சந்தர்ப்பம் கிடைக்



சேவை இல்லத்தில் செய்யப்பட்ட ஒரு கைப் பையைப் பிரதம மந்திரி பார்வையிடுகிறார்

கிறது. இத்தகைய கிளைச்சங்கங்கள் ஏறக் குறைய 220 தற்போது சென்னை மாகாணத்தில் இருக்கின்றன. பெரும்பாலும் ஏழை மக்கள் வசிக்கும் பகுதிகளிலேயே இந்தச் சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஏழை மக்களிடையே கல்வியறிவையும் பொது அறிவையும் பரப்புவதுதான் இந்தச் சங்கங்களின் முக்கிய நோக்கமாகும்.

இதைத் தவிர வேறொரு முக்கியமான பணியையும் மாதர் நல இலாகா செய்து வருகிறது.

அநாதைகள், திக்கற்றவர்களாகக் கைவிடப் பட்டவர்கள், விதவைகள் முதலியவர்களைக் காப்பாற்றிக் கை தூக்கி விடுவதற்காக சேவை இல்லம் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறது. இங்கு அவர்களுக்கு முதலில் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அப்புறம் அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு உதவியாக இருக்கக் கூடிய முறையில் ஏதாவது ஒரு தொழில் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மொத்தம் மூன்று வருஷப் படிப்பு. காந்திஜியின் சுயதேவைப் பூர்த்தியை அடிப்படையாக வைத்து இது நடத்தப்படுகிறது. சமையல், துணி துவைப்பது முதலிய எல்லா வேலைகளையும் முறை வாரியாக ஒவ்வொருவரும் செய்தாகவேண்டும். பொதுவாக, இல்லத்தின் நிர்வாகம் முழுவதையும் அவர்களே ஏற்று நடத்த வேண்டும். படிப்பு முடித்ததும் அவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்க மாதர் நல இலாகா முயற்சி செய்கிறது. தற்போது இத்தகைய சேவை இல்லம் சென்னையில் மாத்திரம் இருக்கிறது. விரைவில் தமிழ் நாட்டிலும் ஆந்திரதேசத்திலும் இரு இல்லங்கள் ஏற்படுத்தப்படுமாம்.

மாதர் நல இலாகா பத்திரிகைகள் மூலமும் தொண்டாற்றி வருகிறது. தமிழில் அது நடத்தும் பத்திரிகைக்கு சௌபாக்கியம் என்ற அழகான பெயர் சூட்டப் பட்டிருக்கிறது. இது ஒரு மாத வெளியீடு. பெண்மக்கள் விரும்பிப் படிக்கக்கூடிய முறையில் இது ரசமாகவும் அழகாகவும் நடத்தப் பட்டுவருகிறது. 'கிளாப் பேச்சு' என்ற தலைப்பில் ஒவ்வொரு இதழிலும் எழுதப்படும் அரசியல் குறிப்புகள் மிக்க சுவையாக இருக்கின்றன. புரட்டாசி மாத இதழில் இஞ்சித் தொக்கு, கத்தரிக்காய்த் தொக்கு, சுதேசி 'டாபி' முதலியவற்றைச் செய்யும் விதம் மிக 'ருசிகரமாக' எழுதப்பட்டிருக்கிறது. இதைத்தவிர, சிறு கதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் வைத்தியக் குறிப்புகளுக்கும் பஞ்சம் இல்லை. மொத்தத்தில், பெண்களுடைய அறிவை வளர்ப்பதுடன் அவர்களுக்குச் சிறந்த பொழுது போக்காகவும் விளங்குகிறது 'சௌபாக்கியம்.'

*   *   *

இவ்விதம் மாதர் நல இலாகா பற்பல வகைகளிலும் பெண்களுக்குத் தொண்டாற்றி வருகிறது. இந்த இலாகாவுக்கு இப்போது தலைவராக விளங்கும் ஸ்ரீமதி பாரிஜாதம் நாயுடு அவர்கள் பாரதநாட்டின்

சேவை இல்லத்துப் பெண் மக்கள் நூல் நூற்கும் காட்சி





வருடாந்திரக் கொண்டாட்ட விழாவில் ஒரு நிகழ்ச்சி. புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருப்பவர்தான் மாதர் நல இலாகாத் தலைவர் ஸ்ரீமதி பாரிஜாதம் நாயுடு.

புராதனப் பண்பாட்டில் பூரண நம்பிக்கையுள்ளவர். சமூக சேவை செய்யப் போவதாகச் சொல்லிக்கொண்டு அதற்கு முதற்படியாகத் தலைமயிரைக் கத்திரித்துக்கொண்டு விளம்பும் நவ நாகரிகப் பெண்கள் இனத்தைச் சேர்ந்தவர் அல்ல. இவருடைய நிர்வாகத்திலும் மேற்பார்வையிலும் ராயபுரத்தில் நடக்கும் சேவை இல்லத்தின் ஆண்டுவிழா சமீபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சேவை இல்லத்தில் சேர்ந்திருக்கும் அநாதைப் பெண்களும் குழந்தைகளும் எவ்வளவு உயர்ந்த முறையில் பழக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மந்திரிகளும் பத்திரிகாசிரியர்களும் கண்டு மகிழ்ந்தனர். சேவை இல்லத்துப் பெண்கள் கையினால் செய்த பல பொருள்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. அது மட்டுமல்லாமல் அந்தப் பெண்கள் வாழ்க்கையை நல்ல முறையில் ஆனந்தமாய்க் கழிப்பதற்குரிய ஆடல் பாடல் நாடகம் முதலிய துறைகளிலும் அவர்களுக்குப் போதிய பயிற்சியளிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து அனைவரும் பாராட்டினார்கள்.

மாதர் நல இலாகாவும் சேவை இல்லமும் நாளுக்கு நாள் நல்ல பணி செய்து ஓங்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

அட்டைப்பட விளக்கம்

விரிந்து பரந்த ஹிந்துஸ்தானம் முழுவதையும் ஒரு குடை நிழலில் ஆண்ட சக்கரவர்த்தி விக்கிரமாதித்யன் விசார சாகரத்தில் மூழ்கியிருப்பதைப் பார்த்து அவனுடைய பட்டமகிஷி ஏது சொன்னாள் என்றால்: "கோமானே! தங்களுடைய கீர்த்தி ஏழு உலகங்களிலும் பரவியிருக்கிறது. தங்களுக்குக் கிட்டாத சுகபோகம் எதுவும் இல்லை. தங்களிடம் இல்லாத செல்வம் பொக்கிஷத்திலும் கிடையாது. அப்படியிருக்க, தாங்கள் சோகமுற்றிருப்பதேன்?"

இவ்விதம் கூறிய தன்னுடைய பட்டமகிஷியைப் பார்த்து விக்கிரமாதித்யன் சொல்வான்: "பிரியே! நீ கூறியது யாவும் உண்மைதான்! விஸ்தாரமான சாம்ராஜ்யமும் அஷ்டைசுவரியங்களும் நவநிதியங்களும் கடல் போன்ற சேனையும் மதி மந்திரிகளும் பக்தியுள்ள பிரஜைகளும் நீயும் எனக்கு வாய்த்திருக்கிறீர்கள். ஆனாலும் கவி காளிதாஸனுடைய சாகுந்தல நாடகத்தில் ஒரே ஒரு வரிக்கு இவ்வளவும் சமமாகுமா? காளிதாஸன் பெற்றிருக்கும் கவிதைச் செல்வத்தை நான் அடையவில்லையே? இதை நினைத்துத்தான் துக்கிக்கிறேன்!"



இதற்கு மறுமொழியாகச் சக்கரவர்த்தினி ஏது கூறினாள் என்றால்: "பிரபோ! காளிதாஸன் கவிதை புனையும் ஆற்றலைப் பெற்றிருக்கிறான் என்பது உண்மைதான். ஆனால் அந்தக் கவிதையை அநுபவிக்கும் ஆற்றலைத் தாங்கள் அன்றோ பெற்றிருக்கிறீர்கள்? காளிதாஸனைவிடத் தாங்கள் அல்லவா பாக்கியசாலி!"

ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னால் உஜ்ஜயினியை ஆண்ட சந்திரகுப்த விக்கிரமாதித்யன் என்ன பாக்கியத்தைச் செய்திருந்தானோ அதை இன்றைய உலக ரஸிகர்கள் அனைவரும் பெற்றிருக்கிறார்கள். காளிதாஸனுடைய சாகுந்தல நாடகத்தின் ஒரு வரிக்கு இந்த உலகமெல்லாம் ஈடாகாது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

முனிவர் ஆசிரமத்தில் வளர்ந்த சகுந்தலைக்கும் அரசகுலத்தில் உதித்த துஷ்யந்தனுக்கும் ஏற்பட்ட அற்புதமான காதல் கதையைக் காளிதாஸன் மனக் கண்ணால் பார்த்து நாடகமாகக் கற்பனை செய்யும் சித்திரம் இந்தக் கல்கி இதழின் அட்டையை அலங்கரிக்கிறது. ஓவியக் கலைஞர் 'சந்திரா' தீட்டிய இந்த அருமையான சித்திரம் இதை விடப் பல மடங்கு பெரிய அளவில் எட்டயபுரம் பாரதி மண்டபத்தை அழகு செய்து வருகிறது. எட்டயபுரத்துப் பாரதி விழாவின்போது உணவு மந்திரி கனம் பேரா விக்டோரியா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நான்கு உலக மகா கவிகளின் படங்களில் இது ஒன்று.

சென்ற வாரத்தில் சென்னையில் கோலாகலமாக நடைபெற்ற காந்தி ஜயந்திக் கொண்டாட்டங்களின் மத்தியில் கவிதா ரஸிகர்கள் ஒரு நாள் கூடி மகாகவி காளிதாஸனுடைய தினத்தைக் கொண்டாடினார்கள். நாமும் அக்கொண்டாட்டத்தில் சேர்ந்து இந்த அட்டைச் சித்திரத்தை வெளியிட்டிருக்கிறோம்.

கம்பர், ஷேக்ஸ்பியர், டாகூர் என்னும் மற்ற மூன்று மகா கவிகளின் படங்களும் அவ்வப்போது "கல்கி" அட்டைச் சித்திரங்களாக வெளியாகும்.



இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வரும் தேதியில் கீழ்க்கண்டவர்கள் இந்தியப் பிரஜைகளாகக் கருதப்படுவார்கள். எனினும் பிரஜா உரிமை சம்பந்தமாக சாசுவதமான சட்டம் இயற்றும் பொறுப்பு இனிமேல் ஏற்படப் போகும் இந்தியா பார்லிமெண்டுக்கு விடப்பட்டிருக்கிறது:

14. பிரஜா உரிமை: தனி நபரின் சுதந்திரம்

இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வருமுன் இந்தியாவில் சாசுவதமாக ஸ்தாபித்தவர், இந்தியாவில் பிறந்தவர், இந்தியாவில் பிறந்த தாய் அல்லது தகப்பனாரை உடையவர், ஐந்து வருஷங்களுக்குக் குறையாமல் இந்த நாட்டில் வசித்தவர்,—இவர்கள் எல்லாரும் இந்தியப் பிரஜையாகக் கருதப்படுவார்கள்.

எனினும், இவர்களில் யாராவது தாங்களாக வலுவில் அன்னிய நாட்டின் பிரஜா உரிமையைப் பெற்றிருக்கும் பட்சத்தில், அத்தகையோர் இந்தியாவின் பிரஜையாக இருப்பதற்குத் தகுதியற்றவர்களாவர்.

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடியேறியவர்களும் இந்தியப் பிரஜைகளாகக் கருதப்படுவார்கள். ஆனால், அவர்களோ, அவர்களுடைய தாய் அல்லது தந்தையரோ அல்லது அவர்களுடைய பாட்டன்மாரோ ஏற்கெனவே பிரிக்கப்படாத இந்தியாவில் பிறந்தவர்களாக இருக்க வேண்டும்.

1948 ஜூலை மாதம் 19-ம் தேதிக்கு முன் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடியேறியவர்கள், குடியேறிய தினத்திலிருந்து இந்தியாவிலேயே வசித்திருப்பார்களாயின் அவர்கள் இந்தியப் பிரஜையாகவே கருதப்படுவார்கள்.

ஆனால் மேற்படி தேதியிலோ அல்லது அதற்குப் பின்னரோ இந்தியாவில் குடியேறியவர்கள், இந்திய சர்க்கார் நியமித்த சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் இந்தத் திட்டம் அமுலுக்கு வருமுன் தான் இந்தியப் பிரஜை என்று பதிவு செய்து கொண்டிருக்க வேண்டும்.

அவ்வாறு இந்தியப் பிரஜை என்று பதிவு செய்து கொள்வதற்காக மேற்படி அதிகாரியிடம் விண்ணப்பம் செய்து கொள்வோர், விண்ணப்பம் செய்து கொள்வதற்கு முன்னதாகக் குறைந்த பட்சம் ஆறு மாதமாவது இந்தியாவில் வசித்திருக்க வேண்டும்.

1947 மார்ச்சு மாதம் முதல் தேதிக்குப் பிறகு இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குக் குடியேறியவர்கள், இந்தியப் பிரஜையாகக் கருதப்பட மாட்டார்கள்.

எனினும், அவ்வாறு குடியேறியவர்கள் மீண்டும் இந்தியாவில் வந்து சாசுவதமாய் ஸ்தாபிதமாக 'பர்மிட்' பெற்றுக் கொண்டு வந்தால், அத்தகையோர் இந்தியப் பிரஜைகளாகக் கருதப்படுவார்கள். ஆனால், அவர்கள் முதலில் மேலே குறிப்பிட்டவாறு சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் விண்ணப்பம் செய்துதான் இந்தியப் பிரஜை என்று பதிவு செய்துகொள்ள வேண்டும்.

வெளிநாடுகளில் தற்காலிகமாக வசிப்பவர்கள் அந்தந்த நாட்டிலுள்ள இந்திய ஸ்தானீகர் போன்ற இந்திய சர்க்கார் பிரதிநிதிகளிடம், தாங்கள் இந்தியப் பிரஜைகள் என்று இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்போ அல்லது பின்னரோ பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பிரஜா உரிமை அளிக்கவோ அல்லது அந்த உரிமையை ரத்து செய்யவோ பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு. பிரஜா உரிமை சம்பந்தமாக எவ்வித சட்டமும் இயற்றப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய சர்க்கார் நிர்வாக இனங்கள்: தற்காப்பு, தரைப்படை, கடற்படை, ஆகாயப் படை, போர்த்தளவாடங்கள், அணுசக்தி, வெளி நாடுகளிலிருந்து கடன்

குசலப் பிரச்னம்!



வாங்குதல், கப்பல் போக்குவரத்து, சுரங்கச் செல்வம், கைத்தொழில்கள் முதலிய இனங்கள் இந்திய சர்க்காரின் நேர் நிர்வாகத்தில் இருந்து வரும்.

காசி ஹிந்து சர்வகலாசாலை, அலிகார் மூஸ்லிம் சர்வகலாசாலை, டில்லி சர்வகலாசாலை இவைகளும் இந்திய சர்க்காரின் நிர்வாகத்தில் இருந்துவரும்.

மற்றெந்தக் கல்வி ஸ்தாபனங்களையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று பிரகடனம் செய்து, அவற்றை இந்திய சர்க்காரின் நிர்வாகத்துக்குக் கொண்டுவரப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு.

தந்தி தபால், வானொலி நிலையம், கரன்ஸி, இன்ஷூரன்ஸ் முதலிய மற்றும் பல இனங்களும் இந்திய சர்க்காரின் நிர்வாகத்தில் இருந்துவரும்.

சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகளை அமைப்பதும் நிர்வகிப்பதும் இந்திய சர்க்காரின் அதிகாரத்துக்கு உட்பட்டவை.

ஷெட்யூல் வகுப்பினருக்குச் சலுகை: ஷெட்யூல் வகுப்பினருக்கும் ஷெட்யூல் மலைவாசிகளுக்கும் இந்தியா பார்லிமெண்டிலும் மாகாண அசெம்பிளிகளிலும் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படும். எத்தனை ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதென்பது மேற்படி வகுப்பாரின் ஜனத்தொகை விகிதாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும்.

பார்லிமெண்டில் ஆங்கிலோ இந்தியர்களின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளுக்கு மேற்படாமல் நியமிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் இருப்பதுபோல், மாகாண சட்டசபையிலும் மேற்படி சமூகத்தின் சார்பில் இரண்டு ஆங்கிலோ இந்தியர்களை நியமிக்கக் கவர்னருக்கு அதிகாரம் உண்டு.

ஆனால், ஷெட்யூல் வகுப்பினருக்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைத்தல், ஆங்கிலோ இந்தியப் பிரதிநிதிகளை நியமித்தல் முதலியன, இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து பத்து வருஷங்களுக்கு மாத்திரமே அமுலில் இருக்கும்.

தனி நபரின் சுதந்திரம்: யார் கைது செய்யப்பட்டாலும் அவர் எதற்காகக் கைது செய்யப்பட்டார் என்பதைக் காலம் கடத்தாமல் சீக்கிரமாக அவருக்கு அதிகாரிகள் அறிவிக்கவேண்டும். அவர் இஷ்டப்படி வக்கீலைக் கலந்து கொள்ளவும் உரிமை அளிக்கவேண்டும்.

எந்த நபராயினும், கைது செய்யப்பட்ட இருபத்து நாலு மணி நேரத்துக்குள்ளாக அவரை ஒரு மாஜிஸ்திரேட்டின் முன்னிலையில் ஆஜர் செய்யவேண்டும். மாஜிஸ்திரேட்டின் அனுமதி பெறாமல் எவரையும் இருபத்துநாலு மணிக்கு மேல் காவலில் வைத்திருக்கக் கூடாது.

எனினும், அன்னியப் பிரஜை, விசாரணையின்றி காவலில் வைக்க அதிகாரம் அளிக்கும் சட்டத்தின் கீழ் கைதியானவர் முதலியோர் விஷயத்தில் மேற்படி விதிகளை அனுஷ்டிக்க வேண்டிய அவசியமில்லை.

ஹைகோர்ட் நீதிபதிகளோ அல்லது மேற்படி நீதிபதிகளாக இருக்கக்கூடிய யோக்கியதாம்சங்கள் உடையவர்களோ அடங்கிய ஆலோசனை போர்டாரின் அனுமதியின்றி எவரையும் மூன்று மாதங்களுக்கு மேல் காவலில் வைத்திருக்கக் கூடாது.

எனினும், பார்லிமெண்டு சட்டத்தின் கீழ் கைதியானவர்களை அந்தக் கெடுவுக்கு மேலும் காவலில் வைக்கலாம்.

எந்த நபரையும் அதிக பட்சம் எவ்வளவு காலம் காவலில் வைத்திருக்கலாம் என்று சட்டம் செய்யப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு. மேலே குறிப்பிட்ட ஆலோசனை போர்டார் கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நிர்ணயிக்கவும் பார்லிமெண்டுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.



என்ன அவசரம்?

"ஸார், சட்டை தைத்த கூலி பாக்கி தரவில்லையே! ரொம்ப நாளாகிறதே!"

"இன்னும் சட்டைத் துணி வாங்கின தற்கே பணம் தரவில்லையே, அப்பா! அதற் குள் நீ உன் பாக்கிக்கு அவசரப்படுகிறாயே!"

★

அப்படியா?

வக்கீல் :—என்னுடைய பீஸ் நாலாயிரம் ரூபாய் ஆகிறது......

கட்சிக்காரர் :—அடேயப்பா! இந்தப் பணத்துக்கு ஒரு புது வீடு கட்டிவிடலாமே!

வக்கீல் :—ஆமாம்; நானும் வீடுதான் கட்டிக்கொள்ளப் போகிறேன்.

★

ஆஸ்பத்திரியில்!

விஸிட்டர் (வியாதியஸ்தரின் நண்பர்) :—தினமும் உனக்கு இங்கே கஷ்டமாகத்தான் இருக்கும்; இல்லையா?

வியாதியஸ்தர் :—அதெல்லாம் ஒன்று மில்லை; வாரத்துக்கு ஒரு தடவைதானே இங்கே 'விஸிட்டர்'கள் வருகிறார்கள்!

★

என்ன கஷ்டம்!

சங்கீதக் கச்சேரியில் ஒருவர் :—ஏன் ஸார்! அவன் பாடும்போது எதற்காகக் கண்ணை மூடிக்கொள்கிறான்?

மற்றொருவர் :—சபையில் உள்ளவர்கள் கஷ்டப்படுவதைத் தன் கண்ணால் பார்க்கக் கூடாது என்பதற்காகத்தான்!

வாஸ்தவம்!

டிராம் கண்டக்டர் :—ஸார், நீங்கள் டவு னிலே போகணும்னு சொன்ன தெருவிலே, நெருப்புப் பிடிச்சிக்கிட்டு அங்கனை வீடும் எரிஞ்சு தரை மட்டமாய்ப் போயிடுச்சாம்!

பிரயாணி :—சரிதான்; இந்த டிராம் அங்கே போய்ச் சேருவதற்குள்ளே, அந்த வீடுகளையெல்லாம் புதிதாகவே கட்டிவிட மாட்டார்களா?

★

ஓஹோ!

"நீங்கள் கடிகாரம் வாங்கினீர்களே, அது நன்றாய் ஓடிக்கொண்டிருக்கிறதா?"



"பிரமாதமாகப் போகிறது; நாற்பது நிமிஷத்தில் ஆகிறதற்குள்ளே இதிலே ஒரு மணி ஆகிவிடுகிறது!"

★

அது இல்லே?

பையன் (உபாத்தியாயரிடம்) :—ஸார்! எங்கள் பாட்டி.........!

உபாத்தியாயர் (கோபத்துடன்) :—அடே என்னடா? எத்தனை தரம் பாட்டி போய் விட்டாள் என்று சொல்லி லீவு வாங்க லாம்னு பார்க்கிறாய்?

பையன் :—அதில்லே ஸார்! எனக்கு ஜுரம் என்று என் பாட்டி சொன்னாள், ஸார்!

ஸ்ரீ தியாகராஜ கைங்கரியம்

மயிலாப்பூரில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் திருநாமத்துடன் ஒரு சங்கீத மண்டபம் கட்டுவதற்கு ஸ்ரீ தியாகராஜ சங்கீத வித்வத் சமாஜத்தார் பெருமுயற்சி தொடங்கியிருக்கிறார்கள். இம்மாதம் 4உ கனம் பக்தவத்ஸலம் அவர்கள் கைங்கரியக் கச்சேரிகளை ஆரம்பித்து வைத்தார். 8உ ஸ்ரீமதி எம். எல். வஸந்த குமாரி, 9உ ஸ்ரீ ஜி. என். பி, 10உ ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர், 12உ ஸ்ரீ மகாராஜபுரம் விசுவநாதய்யர், 15உ ஸ்ரீ பரூர் சுந்தரமய்யர், 16உ ஸ்ரீ கோபிநாத் கோஷ்டி— ஆகிய கச்சேரிகள் நடைபெறுகின்றன. ஸ்ரீ தியாகராஜரின் பக்த கோஷ்டிகள் பூரண ஆதரவு அளிக்கக் கோருகிறோம்.

மழையில்லாமல் இடி!

ரஜனி

கொழும்பு, செப். 25

இலங்கை இந்தியர்களுக்கு முற்றிலும் எதிர்பாராத விதமாக ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அதைக் கண்டு இந்தியர் சமூகமே அதிர்ச்சியடைந்திருக்கிறது. ஒரு நொடியில் இந்தியர் அனைவரையும் அரசியல் அனாதைகளாக்கி அவர்களுடைய வோட்டுரிமையைப் பறிக்கவும், பார்லிமென்டில் இந்தியர்களுக்குப் பிரதிநிதித்துவமே இல்லாமற் செய்யவும் இரண்டு திருத்த மசோதாக்களைப் பிரதமமந்திரி சேனநாயகா ஜனப்பிரதிநிதி சபையில் சமர்ப்பித்திருக்கிறார். அவர் இது மாதிரி மசோதாக்களைக் கொண்டு வரப் போவது கடைசி நிமிஷம் வரையில் ஒருவருக்கும் தெரியாது! எனவே இது மழையில்லாமல் இடி இடித்த கதையாக இருக்கிறது!

முதலாவது மசோதாவில் பிறவியினாலும் பதிவு செய்து கொண்டதாலும் இலங்கையர்களாயிருப்பவர்கள் மட்டும்தான் வோட்டர்களாயிருக்கலாமென்றும், பார்லிமென்டு மெம்பர்களாகத் தெரிவு செய்யப்படலாமென்றும் கூறப்பட்டுள்ளது. இது வரையில் ஐந்து வருஷங்களுக்கு அதிகமாக இலங்கையில் வசித்த இந்தியர்களுக்கும், கல்வியறிவு யோக்கியதாம்சம், வருமான யோக்கியதாம்சம் முதலியவைகளையுடைய இந்தியர்களுக்கும் வோட்டுரிமை இருந்தது. இதனால் அவர்கள் தங்கள் சொந்தப் பிரதிநிதிகளைப் பார்லிமென்டுக்குத் தேர்ந்தெடுத்து அனுப்ப முடிந்தது. இந்த உரிமையைப் புதிய மசோதா அடியோடு பறிப்பதாக இருக்கிறது.

இந்தியர் பிரஜா உரிமைச் சட்டத்தின் அசாத்தியமான, அவமானகரமான நிபந்தனைகளைத் திருத்தும்வரை அந்தச் சட்டத்தைப் பகிஷ்கரிப்பதென்றும் அதன்படி இலங்கையர்களாக ஒருவரும் பதிவு செய்து கொள்ளக்கூடாதென்றும் இலங்கை இந்திய காங்கிரஸ் அதனுடைய சென்ற மகாநாட்டில் தீர்மானித்திருக்கிறது. எனவே, ஒரு சில பெரிய இந்திய வியாபாரிகளைத் தவிர, பெரும்பாலான இந்தியர்கள் பிரஜா உரிமைச் சட்டத்தை ஏற்கப் போவதில்லை. அதன்படி தங்களை இலங்கையர்களாகப் பதிவு செய்து கொள்ளப் போவதுமில்லை. காங்கிரஸ் ஆக்ஞைப்படி நடப்பவர்களை வாக்காளர் ஜாபிதாவிலிருந்து நீக்கப் போவதாகப் பயமுறுத்தவும், பிரஜாவுரிமைச் சட்ட பகிஷ்காரத் தீர்மானத்தை வாபஸ் வாங்காவிட்டால் இந்தியர் கதி அதோ கதிதானென்று காங்கிரஸைப் பயமுறுத்தவுமே புதிய மசோதாவைப் பிரதமமந்திரி கொண்டு வந்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ கே. ராஜலிங்கம் நேற்றிரவு விடுத்திருக்கும் ஒரு அறிக்கையில், இந்தியர் பிரஜா உரிமைச் சட்டம் அக்கிரமமானது என்பதற்காகவே காங்கிரஸ் அதைப் பகிஷ்கரித்ததென்றும், வாக்குரிமையைப் பறித்து விடுவோமென்று பிரதமர் இப்பொழுது பயமுறுத்துவதற்காக இந்தியர்கள் அநீதிக்கு அடிபணியப் போவதில்லையென்றும் தெரிவித்திருக்கிறார்.

சோல்பரி அரசியல் திட்டம் அமுலுக்கு வருமுன் நியமித்த தேர்தல் தொகுதி நிர்ணயக் கமிஷன் பார்லிமென்டில் இந்தியர்களுக்கு ஆறு ஸ்தானங்களாவது கிடைக்கும்படி தொகுதிகளைப் பிரித்தது. அந்த ஆறு தொகுதிகளிலும் இந்திய அபேட்சகர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றார்கள். 1951-ம் ஆண்டுக்குள் இன்னொரு தொகுதி நிர்ணயக் கமிஷனை நியமிக்கப் பிரதம மந்திரி சேனநாயகா இரண்டாவது மசோதாவில் வழி செய்திருக்கிறார். முதல் மசோதாவின்படி இந்தியர்களுடைய வாக்குரிமையைப் பறித்து, இரண்டாவது மசோதாவின்படி தேர்தல் தொகுதிகளையும் மாற்றியமைப்பதின் மூலம் பார்லிமென்டில் இந்தியர்களுக்குப் பிரதிநிதித்துவமே இல்லாமற் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது'

விமோசனம் கிடைக்கலாம்

ரப்பர் விலை குறைந்ததன் காரணமாக இலங்கை ரப்பர் தோட்டங்களில் வேலை செய்த ஆயிரக்கணக்கான இந்தியத் தொழிலாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டதும் பாக்கி யுள்ளவர்களுக்கு நியாயமான சம்பளம் கொடுக்கும் சட்டத்தை அரசாங்கம் ரத்து செய்ததும் நமது இலங்கைக் கடிதத்தில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளன. ஸ்டர்லிங் மதிப்பு குறைந்ததன் காரணமாக ரப்பரின் விலை மறுபடியும் உயர்ந்து வருவதால், விலக்கப்பட்ட தொழிலாளரை மீண்

ளும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் நியாயமான சம்பளம் கொடுக்கும் சட்டத்தைத் திரும்பவும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ராஜலிங்கம் தொழில் மந்திரிக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கிறார். தொழில் மந்திரியும் நியாயமான சம்பளம் கொடுக்கும் சட்டத்தை முன்போல் திரும்ப அமுல் நடத்தலாமா என்பதைப் பற்றி விசாரித்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படி லேபர் கமிஷனருக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார். எனவே, கூடிய சீக்கிரத்தில் ரப்பர் தோட்ட இந்தியத் தொழிலாளருக்கு விமோசனம் ஏற்படலாம்.

ஆலயப் பிரவேசச் சட்டம்

இந்தியாவைப் பின்பற்றிக் கூடிய சீக்கிரம் இலங்கையிலும் ஹரிஜன ஆலயப் பிரவேசச் சட்டம் அமுலுக்கு வரப்போகிறது. இலங்கையிலுள்ள எல்லா ஹிந்து ஆலயங்களும் தனிப்பட்டவர்களின் சொந்தமாயிருப்பதுடன், பல ஆலயங்களின் நிர்வாகம் ஊழலாகவுமிருந்து வருவதால் அவைகளைப் பற்றிப் பொதுஜனங்கள் நீண்டகாலமாகவே புகார் செய்து வந்தார்கள். பௌத்த ஆலய பரிபாலனச் சட்டத்துக்கு இணங்க பௌத்த ஆலய நிர்வாகம் பப்ளிக் டிரஸ்டியின் மேற்பார்வையிலிருக்கிறது. அதே போல இந்து ஆலயங்களுக்கும் ஒரு சட்டம் இயற்றவேண்டுமென்று இந்து மதப் பிரமுகர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அதன் பயனாக இவ்வாரம் உள்நாட்டு மந்திரி பார்லிமெண்டின் இரு சபைகளையும் சேர்ந்த இந்து அங்கத்தினர்களின் மகாநாடு ஒன்றைக் கூட்டினார். இந்து ஆலயங்களுக்குச் சென்னை மாகாணத்திலிருப்பதைப் போன்ற தேவஸ்தான பரிபாலனச் சட்டமொன்று வேண்டுமென்றும், அந்தச் சட்டத்தில் ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேச உரிமையளிப்பது, ஆடு கோழிகள் பலியிடப்படுவதைத் தடுப்பது முதலிய ஷரத்துகளும் சேர்க்கப்பட வேண்டுமென்றும் மகாநாட்டில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. பொதுஜன அபிப்பிராயத்தை விசாரித்தறிந்து எம்மாதிரிச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்பதைப் பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்க ஸ்ரீ கே. ராஜலிங்கம், ஸ்ரீ எஸ். தொண்டமான் ஆகிய இரு இந்தியர்கள் உட்பட ஏழு இந்து அங்கத்தினர்கள் கொண்ட ஒரு விசேஷக் கமிட்டியை மந்திரி நியமித்திருக்கிறார்.

நகை ஆசை

எஸ். ஜே.

"இதோ பாருங்கோ, உங்களைத் தானே?" என்ற குரல் காற்காலிக்குப் பின்னாலிருந்து கேட்டது. சர்வேச்வரன் திரும்பிப் பார்த்தான்.

"என்னைப் பார்த்தால் எப்படி யிருக்கிறது? பொய் சொல்லாமல் சொல்லணும்!" என்று கேட்டுக் கொண்டே கையில் காப்பியுடன் வந்தாள் பவானி.

"நிஜத்தைச் சொன்னால் நீ கோபித்துக் கொள்வாயே!" என்று விளையாட்டுக்காக ஒரு பொய் சொன்னான் ஈசுவரன்.

உண்மையில் பவானி அந்தச் சாதாரண நூல் புடவையைக் கட்டிக் கொண்டுங்கூட அப்ஸரஸ் போலக் காட்சியளித்தாள். அவளுக்கு அழகளித்தது கேவலம் ஒரு நூல் புடவையல்ல: மசக்கைக்குப் பின்னர் ஏற்படும் சரீர மலர்ச்சிதான். பழைய இலைகளை உதிர்த்து விட்டுப் பூத்துக் குலுங்கும் ஒரு பழமரம்போலத் தோன்றினாள் பவானி. கர்ப்ப பாரத்தினால் அவளுடைய சரீரம் பழங்களின் பாரத்தினால் வளையும் மாமரத்தின் கிளை போல வளைந்து கொடுத்தது.

சில நிமிஷங்கள் கண் கொட்டாமல் பெண்மையின் அழகைப் பார்த்து வியந்து கொண்டிருந்தான் சர்வேச்வரன்.

"எனக்குப் பட்டுப்புடவை கட்டிக் கொள்ளணும், வைரத்தோடு போட்டுக் கொள்ளணும் என்றெல்லாம் ஆசை கிடையாது. ஒரே ஒரு சின்ன ஆசை. கையில் போட்டிருக்கிறேன் பாருங்கோ, பித்தளை வளை—இதை முன்னாடி கழட்டி எறிந்துவிட்டு அசல் பொன் வளை ஒன்று போட்டுக் கொள்ளணும். உங்கள் சம்பாத்தியம் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் நான் இதுவரை வாய்விட்டு ஒன்றும் கேட்டது கிடையாது. பார்க்கிறவர்களெல்லாம் பரிகாசம் பண்ணுவது போலத் தோன்றுகிறது......என்ன!" என்று சொல்லி நிறுத்தினாள் பவானி.

உண்மையில் பவானி வாய் திறந்து ஒரு நகைக்காகவோ, புடவைக்காகவோ அவனிடம் கெஞ்சியது கிடையாது. இப்போது கெஞ்சுங் குரலில் கர்ப்பிணியாக நின்றுகொண்டு அவள் கேட்கும்போது அவனால் மறுத்துக் கூற இயலவில்லை.

"நீங்கள் கொஞ்ச நாட்களுக்கு முன்னால் உங்களுக்குப் போனஸ் பணம் கிட்டத்தட்ட நூற்றைம்பது ரூபாய் வருமென்று சொன்னேளே, அது ஞாபகம் வந்தது. இல்லாவிட்டால் இதைக்கூடக் கேட்டிருக்கமாட்டேன்" என்று மேலும் கூறினாள் பவானி.

சர்வேச்வரன் முகத்திலிருந்த மகிழ்ச்சி அவள் போனஸ் பணத்தைப் பற்றிக் கூறியவுடனே மறைந்து போயிற்று. அந்தப் பணம் அத்தனையும் கிண்டி ரேஸில் குட்டிச்சுவராய்ப் போன கதை அவளுக்கு எப்படித் தெரியும்? அந்தப் பணம் வருவதற்கு முன்னாடியாவது இவள் கேட்டிருக்கக் கூடாதா? இதுவரை ஒன்றுகூடக் கேட்காதவள் இப்போது கேட்கிறாளே! அவளுடைய சிறு விருப்பத்தைக்கூடப் பூர்த்தி செய்ய இயலாமல் அத்தனை பணமும் பாழாய்ப் போய் விட்டதே!

பெருகிவந்த கண்ணீரை ரொம்ப ரொம்ப சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான் சர்வேச்வரன்.

பவானி தன் பேச்சைத் தொடர்ந்தாள்: "நேற்று ஒரு பெரிய மனுஷான் வீட்டிலே கொலுவுக்குக் கூப்பிட்டிருந்தார்கள். அவர் வீட்டுப் பெண் என் கைவளையைப் பார்த்துவிட்டு நாலு பேர் எதிரில் துடுக்காக, 'பித்தளை வளைபோல இருக்கே, தங்கமாக்கும்னு நினைச்சுட்டேன்' என்று சொல்லிற்று. எனக்கு அங்கேயே பிராணனை விட்டுடலாம் போல இருந்தது!"

பவானியின் கண்களில் முத்துப்போல் இரு பெரிய கண்ணீர்த் துளிகள் தேங்கி நின்றன.

"உங்கள் போனஸ் பணத்தில் எனக்கு ஒரு ஜோடித் தங்க வளை மட்டும் வாங்கிக் கொடுத்து விடுங்கள். பிறகு என் ஆயுசுக்கும் நான் உங்களை வேறு ஒன்றுக்கும் தொந்தரவு செய்ய மாட்டேன்" என்று தன் கோரிக்கையை முடித்தாள் பவானி.

"இது என்ன பிரமாதம்? இன்னும் ஒரு வாரத்தில் நீ கேட்கும் வளையலை வாங்கித்தருகிறேன். போதுமா?" என்று குரலில் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு பதிலளித்தான் சர்வேச்வரன்.

அந்தப் பேதையின் கண்கள் நன்றியறிதலால் மலர்ந்தன. அந்த இதழ்க் கடைகளில் ஒரு புன்னகை அரும்பிற்று. அவள் புன்னகைக்காக ஒரு தங்க வளைதானா கொடுக்கலாம், புவனத்தையே கொடுக்கலாமே என்று எண்ணினான் அவன்.

★

சர்வேச்வரன் பவானி சென்ற பிறகு யோசனையில் ஆழ்ந்தான். பணத்திற்கு எங்கே போவது? யார் ஒரு ஏழைக்

குமாஸ்தாவை நம்பி நூற்றைம்பது ரூபாய் கடன் கொடுப்பார்கள்? வரும் சம்பளமோ சாப்பாட்டுக்கே போதாது. என்றும் கேட்காத பவானி இன்று கேட்கிறாளே! அவளுக்கு இல்லை என்று சொல்வது? உண்மையை எடுத்துச் சொன்னால் பவானி மறுபடியும் பிடிவாதம் பிடிக்கக்கூடிய பெண்ணல்ல. குதிரைப் பந்தயத்தில் பணம் போயிற்று என்று சொன்னால் பவானி கணவனிடம் தன் அனுதாபத்தைக் காட்டி ஆறுதல் கூறுவாளேயன்றிக் கோபித்துக்கொள்ள மாட்டாள். ஏழ்மையின் கொடிய வெப்பத்தை இதுவரை அவன் உணராமலிருந்திருக்கிறான் என்றால் பவானியின் இனிய மொழிகளே அதற்குக் காரணம்.

ஒரு ஜோடிப் பொன் வளையல்; அதை எப்படியாவது அடைந்தாக வேண்டும். ஆனால் அது இயலாது என்று சர்வேச்வரனுக்குத் தெரியும்.



இந்தத் தர்மசங்கடமான நிலையிலிருந்து விடுபட ஒரே ஒரு வழிதான் உண்டு. தன் உயிருக்கு உயிரான மனைவியை ஏமாற்ற வேண்டும். ரோல்ட் கோல்ட் வளை ஒன்றை வாங்கிக் கொடுத்துப் பொய் சொல்லவேண்டும். தன்னையே நம்பி, தன்னை உயிருக்கு மேலாக நேசிக்கும் மனைவியிடம் அவன் முகப் கோணாமலிருக்க வேண்டி அவன் பொய் சொல்ல வேண்டும். வேறு வழியே இல்லை. பின்னால் அவள் உண்மையை அறிந்துகொண்டு விட்டால் என்ன செய்வது? இப்போதைக்கு அவள் உண்மையை அறிய மாட்டாள். தான் அசல் தங்கவளையொன்றை வாங்கிக் கொடுத்துவிட்டுப் பிறகு உண்மையைச் சொல்லிவிடலாம். உண்மையான தங்க வளையை அடைந்த பின் அவள் தன்னை ஏமாற்றியதற்காக வருத்தமடைய மாட்டாள்.

சர்வேச்வரன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

★

பவானிக்கு அந்த வளையைப் பார்த்ததும் சொல்ல முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது. வளையலையும் கணவனையும் மாறி மாறிப் பார்த்தாள். "உங்கள் பணத்தை இப்படிச் செலவு செய்யச் சொன்னேனே என்று என்மேல் கோபமா?" என்று கேட்டாள்.

"கோபமா? அசடே! என்னால் இன்னும் நிறைய நகை செய்து போட முடியவில்லையே என்று மனசுக்குள் புழுங்குகிறேன். இது ஒரு பிரமாதமா?"

துக்கத்தினால் அவன் குரல் கம்மிற்று. நம்மை முழு மனதுடன் நம்புபவர்களை ஏமாற்றுவது நமக்கே எவ்வளவு துக்கமளிக்கிறது!

"இந்த வளை போட்டுக் கொண்ட பின் என்னைப் பார்த்தால் எப்படியிருக்கிறது?" என்று கேட்டாள் பவானி.

"அப்ஸரஸ் வளை போட்டுக் கொண்டால் எப்படி இருக்குமோ அப்படி



"ஏனப்பா, இந்த நீதி—நிர்வாகப் பிரிவினை நம்மை எந்த விதத்தில் பாதிக்கும்?"

"இனிமேல் நம்மைக் கைது செய்வதில் போலீசாரும் நமக்குக் கடுமையான தண்டனை விதிப்பதில் நீதிபதிகளும் போட்டி போடுவார்கள். அவ்வளவுதான்!"

இருக்கிறது!" என்று பலவந்தமாகப் புன்னகையை வரவழைத்துக் கொண்டே சொன்னான் சர்வேச்வரன். பிறகு, "ஆனால் எல்லா நகைகளையும் விட உயர்ந்த நகை ஒன்று உன்னிடம் இருக்கிறது. அதுதான் புன்னகை!" என்றான் அவன்.

இந்தப் புகழ் மொழியைக் கேட்டவுடன் புதியதோர் புன்னகை மலர்ந்தது பவானியின் முகத்தில்.

பவானிக்குப் புது வளை போட்டுக் கொண்டபோது ஏற்பட்ட மகிழ்ச்சியை விடப் பன்மடங்கு மகிழ்ச்சி ஏற்பட்டது ஒரு அழகிய ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தபோது.

"இதுதான் என் உண்மையான செல்வம்" என்று குழந்தையை உச்சி முகர்ந்து முத்தமிட்டாள்.

சர்வேச்வரனும் புதிதாய்த் தந்தையான பெருமிதத்துடன் விளங்கினான்.

பவானி, குழந்தையைப் பார்க்கும் போது தான் உயிருக்கு மேலாக நேசிக்கும் ஒரு ஆத்மாவின் ஞாபகம் வருவதாகச் சொன்னாள்.

சர்வேச்வரன், குழந்தையைப் பார்க்கும்போது தன் உயிரினுமினிய மற்றொரு ஆத்மாவின் ஞாபகம் வருவதாகச் சொன்னான்

இருவரும் அந்த ஆத்மாக்களின் பெயர்களைக் கூற மறந்துச் சிரித்தார்கள்!

சில மாதங்கள் இனிது சென்றன. சர்வேச்வரன் தம்பதிகள் மகிழ்ச்சியின் எல்லைக் கோட்டில் நின்றார்கள். அந்த எல்லைக் கோட்டைத் தாண்டினால் துன்பமேயல்லவா?

அந்தத் துன்பமும் விரைவில் வந்து சேர்ந்தது.

"குழந்தைக்கு மாந்தம். செய்யாத வைத்தியமில்லை; வேண்டாத தெய்வமுமில்லை. வந்த சம்பளமெல்லாம் குழந்தைக்கே செலவாயிற்று. இப்போது குழந்தையின் உடம்பைப் பற்றிக் கவலைப்பட்டது போக, இனி வைத்தியம் செய்யப் பணத்திற்கு என்ன செய்வது, எங்கே போவது என்ற கவலை தம்பதிகளுக்கு அதிகமாயிற்று.

ஊரிலேயே பெரிய டாக்டர் ஒருவர். ரொம்பக் கைராசிக்காரராம். அவர் தொட்ட மாத்திரத்தில் எல்லாப் பிணிகளும் நீங்குமாம். தன்வந்திரியின் அவதாரம் என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் பச்சை நோட்டைக் கண்ணில் காட்டினாலொழியத் திரும்பியும் பார்க்க மாட்டாராம். அவர் குழந்தை வைத்தியத்தில் தலைசிறந்தவராம். ரொம்ப சரி; அவரை உடனே அழைத்துவர வேண்டியதுதான். ஆனால் பணத்திற்கு என்ன செய்வது?

சர்வேச்வரன் சோர்ந்து நின்றான். பவானியும் சோர்ந்து நின்றாள். அவள் முகத்தில் திடீரென்று ஒரு பிரகாசம் தோன்றியது.

"இதோ பாருங்கள், பகவான் வழி செய்துவிட்டார்: பணக் கவலை தீர்ந்துவிடும்" என்று அந்தத் துக்கத்திலும் குதூகலத்துடன் சொன்னாள் பவானி.

சர்வேச்வரனுக்கும் அந்த வார்த்தைகள் கொஞ்சம் ஆறுதலாக இருந்தன. பவானி எங்கேயோ பணம் சேர்த்து வைத்திருக்கிறாள், இப்போதுதான் அவளுக்குத் திடீரென்று ஞாபகம் வந்திருக்கிறது போலும் என்று அவன் எண்ணிக் கொண்டான்.

"என் குழந்தை பிழைத்தால் போதும்: வேறு ஒன்றுமே எனக்கு வேண்டாம். நீங்கள் வாங்கிக் கொடுத்த என் கை வளையை உடனே ஏதாவது ஒரு பாங்கில் வைத்துப் பணம் வாங்கி வாருங்கள்!" என்றாள் பவானி. அதில் தாய்மையின் தியாக உணர்ச்சி ததும்பிற்று.

சர்வேச்வரனோ ஸ்தம்பித்து நின்றான்!

உங்கள் பாதுகாப்புக்காக

ஸாது தையல் நூல்



இப்போது *புதிய* பாக்கிங்கில் வருகிறது

★ அசல் ஸாது தையல் நூல் என்பதற்கு அத்தாட்சியான இந்த 3 அடையாளங்களும் இருக்கிறதா என்று கவனித்து வாங்குங்கள்.

1. மேல் அட்டையும், உள் குழாயும் அழகிய மெல்லிய பச்சை வர்ணத்தில் இருக்கும்.

2. 'ஸாது'வின் படம் சிகப்பும், பச்சையும் சேர்ந்த இரு—வர்ணப் படமாக அச்சடிக்கப்பட்டிருக்கும்.

3. கோஹினூர் மில்ஸ் கோ. லிட். என்னும் பெயர், மத்தியிலுள்ள மெல்லிய பச்சைக் குழாயின்மேல் தெளிவாக அச்சடிக்கப்பட்டிருக்கும்.

★ போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள் ★ இந்த அடையாளங்கள் இல்லாத எதையும் போலிகள் என்று கண்டுகொள்ளுங்கள்

ஸாது தையல் நூல் இவர்களால் மட்டுமே தயாரிக்கப்படுகிறது


கோஹினூர் மில்ஸ் கோ. லிமிடெட்

ஏஜண்டுகள்.

இல்லிக் இண்டஸ்ட்ரீஸ் லிட்.

நூல் விற்பனைக்குப் பிரத்தியேக ஏஜண்டுகள்

நகல்சந்த் லல்லுசந்த் லிட்.



மூன்றாம் அத்தியாயம்

முதல் பிரவேசம்

அச்சமயம் பீஜகுப்தனும் சித்திரலேகாவும் ஒரே ஆசனத்தில் அமர்ந்திருந்தனர். வாயிற்காப்போனின் குரலைக் கேட்டதும் சித்திரலேகா எழுந்து பக்கத்திலிருந்த வேறொரு ஆசனத்தில் தனியாக அமர்ந்தாள். பீஜகுப்தன் பக்கத்திலிருந்த பணிப் பெண்ணைப் பார்த்து, "அதிதிகளை இங்கேயே வரச் சொல்லு" என்று கட்டளையிட்டான். பிறகு பக்கத்திலிருந்த பழரஸக் கோப்பையைக் காலி செய்தான்.

"இந்த அர்த்த ராத்திரியில் அதிதி யார் வரப்போகிறார்கள்?" என்று சிந்தனையில் ஆழ்ந்தான் பீஜகுப்தன். அதே சமயம் சுவேதாங்கனை அழைத்துக் கொண்டு ரத்னாம்பரர் பீஜகுப்தனின் விடுதியில் நுழைந்தார். ரத்னாம்பரரைப் பார்த்ததும் பீஜகுப்தன் எழுந்து வணங்கினான். சித்திரலேகாவும் தலை வணங்கினாள்.

இன்ப விடுதியை ஒரு முறை சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்த பிறகு ரத்னாம்பரரின் கண்கள் சித்திரலேகாவின் மீது நிலைத்தன. ரத்னாம்பரர் சிறிது நேரம் சென்றதும் மௌனத்தைக் கலைத்து, "நகரத்தின் இணையற்ற அழகியும் பரிசுத்தத்துக்குப் பெயர்போனவளுமான நடனமாது இந்த நடுநிசி வேளையில் பீஜகுப்தனின் இன்ப விடுதியில் தங்கியிருப்பது ஆச்சரியத்தை அல்லவா விளைவிக்கிறது?" என்று சொல்லியவண்ணம் பக்கத்தில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தார். சுவேதாங்கன் அவருக்குப் பக்கத்தில் போய் நின்றான்.

"இந்த அகாலத்தில் அடியேன் கிருஹத்துக்கு மகாப்பிரபு எழுந்தருளிய காரணம் யாதோ?" என்று ரத்னாம்பரரை மிகவும் வினயமான குரலில் பீஜகுப்தன் கேட்டான்.

ரத்னாம்பரர் சிரித்தார். "பீஜகுப்தா! உன்னிடம் ஒளிவின்றிச் சகல விவரங்களையும் சொல்லத்தான் வந்திருக்கிறேன். இதோ நிற்கிறானே இந்தச் சிஷ்யன், இவன் இன்று என்னிடம் 'பாவம் என்றால் என்ன?' என்று ஒரு பெரிய கேள்வியைத் தூக்கிப் போட்டு விட்டான். அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும் சக்தி எனக்கில்லை. ஆகவே நீ எனக்கு ஒரு சிறு ஒத்தாசை செய்ய வேண்டும். நீ என் சிஷ்யனாக இருந்திருக்கிறாய். நான் உன்னிடம் அதற்கென்று யாதொரு விதமான குருதக்ஷிணையும் இதுகாறும் பெற்றுக் கொள்ளவில்லையென்பதும் உனக்குத் தெரியும். பாவத்தைக் காண்பதற்குப் பிரும்மசாரியின் குடிசை ஏற்றதல்ல. சுகபோகங்கள் அனைத்தும் நிறைந்த உலகத்தில்தான் பாவத்தைச் சுலபமாகக் காண முடியும். ஆகவே உன் மாளிகை, உன் சமூகம் இவற்றைப் பற்றிச் சுவேதாங்கன் முதலில்

நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். நான் இவனை உன்னிடம் கொண்டு வந்து விடுவதற்கு இதுதான் முக்கிய காரணம். நீ இவனை ஊழியனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

"மகாப்பிரபுவின் உத்தரவைச் சிரமேற் கொள்ள தாசன் காத்திருக்கிறேன்" என்று கூறி, பீஜகுப்தன் தலை வணங்கினான்.

"நல்லது, நான் போய் வருகிறேன். ஒரு காரியம் முடிந்தது. சுவேதாங்கா! நீயும் ஒரு விஷயத்தை மட்டும் நன்றாக ஞாபகம் வைத்துக் கொள். பீஜகுப்தன் உன்னுடைய எசமானன்; நீ அவனுடைய ஊழியன். உன் இஷ்டப்படி முதலில் நீ இந்த ஐசுவரியத்தை அனுபவிக்கலாம். பிறகு பாவத்தைத் தேட முயற்சிக்கலாம். நன்மையும் தீமையும் இந்த உலகத்திலே உன் எதிரே கல்லும் மணலும் போலக் கலந்தும் கட்டியுமாகத்தான் வரும். உனக்கு மட்டும் நன்மை பயப்பதாக இராமல் உலகத்துக்கும் நன்மை பயப்பதாக இருக்கும் பொருள் எதுவோ அதுதான் உயர்ந்த பொருள். பீஜகுப்தா! உன்னிடம் இன்னொரு விஷயமும் சொல்ல வேண்டும். சுவேதாங்கனிடம் ஏதாவது குற்றங் குறைகள் இருப்பின் தாராள மனதுடன் மன்னிக்க வேண்டியது உன் பொறுப்பு. இன்னும் இவன் அறியாப் பாலகன்தான்; உலக ஞானம் அவ்வளவாகப் போதாது. இப்பொழுதுதான் முதன் முதலாக இந்தப் பரந்த உலகில் காலடி எடுத்து வைக்கிறான்."

இதைச் சொல்லி முடித்ததும் ரத்னாம்பரர் பீஜகுப்தனின் இன்ப விடுதியிலிருந்து வெளியேறினார்.


ரத்னாம்பரர் வெளியே சென்றதும் பீஜகுப்தன் சுவேதாங்கனை ஏற இறங்கத் தலையிலிருந்து கால் வரை ஒரு முறை பார்த்தான். "உன் பெயர் என்ன? சுவேதாங்கனா? இன்று முதல் நீ என் ஊழியன்; அப்படித்தானே?" என்று கேட்டான். அவன் முகத்தில் இலேசான ஏளனம் கலந்த புன் சிரிப்புப் படர்ந்தது. பிறகு சித்திரலேகாவைச் சுட்டிக் காட்டி, "சுவேதாங்கா! இவள் யார் என்று தெரியுமா?" என்று கேட்டான்.

மிக மிக நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டு, நடு நிசியிலும் தீபாலங்காரங்களினால் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசிக்கும் அந்த இன்ப விடுதியில், மனமோகன ரூபத்தோடு திவ்ய அலங்கார பூஷிதையாய் உட்கார்ந்திருந்த சித்திரலேகாவைக் காணும் பொழுது சுவேதாங்கனின் கண்கள் கூசின. "தெரியாது" என்று ஒரே வார்த்தையில் மிகவும் வினயமாகப் பதில் அளித்தான்.

"அப்படியானால் கேள்! இவள் பெயர் சித்திரலேகா. இவள் பாடலிபுத்திரத்தின் இணையற்ற அழகு வாய்ந்த நடனமாது. ஆயினும் என் மனைவிக்குச் சமானமானவள். ஆகவே இவள் உன் எசமானியும் கூட!" என்று சொல்லி, பீஜகுப்தன் 'கட கட' வென்று நகைத்தான்.

"உனக்கு ஆச்சரியமாயிருக்கலாம். ஆனால் ஆச்சரியப்படுவதற்கு இதில் ஒன்றும் இல்லை. இங்கே பழகப் பழக நீ எல்லாவற்றையும் புரிந்து கொண்டு விடலாம். இந்தா, இந்தக் கோப்பையில் உள்ள பழரஸத்தை உன் எசமானியம்மாளிடம் கொடு!" என்று சொல்லி, 'கமகம' என்று வாசனை வீசும் பழரஸம் வைத்திருந்த தங்கக் கிண்ணத்தை எடுத்துச் சுவேதாங்கனின் கையில் கொடுத்தான்.

சுவேதாங்கன் அந்தக் கிண்ணத்தை வாங்கிச் சித்திரலேகாவிடம் நீட்டினான். கிண்ணத்தை வாங்கும்பொழுது சித்திரலேகாவின் கை சுவேதாங்கனின் கையைத் தீண்டி விட்டது. இந்த ஸ்பரிசத்தினால் சுவேதாங்கனின் உரோமங்கள் சிலிர்த்தன;




உடல் முழுதும் ஒரு முறை வியர்த்து விட்டது. சித்திரலேகா சுவேதாங்கனைப் பார்த்து, "இந்த அற்புதமான உலகில் முதல் தடவையாகப் பிரவேசிக்கும் உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!" என்று சொன்னாள். அடுத்த கணம் அவன் கையிலிருந்த பழரசக் கிண்ணம் காலியாயிருந்தது.

அதே சமயம் வாயிற்காப்போன், "நித்திரைக்கு நேரமாகிவிட்டது" என்று உரக்கக் கூவினான்.

சித்திரலேகாவைப் பார்த்து, "இங்கேயே இருக்கிறாயா, அல்லது உன் மாளிகைக்குப் போகப் போகிறாயா?" என்று கேட்டான் பீஜகுப்தன். சித்திரலேகா உடனே எழுந்து நின்றாள். "என் மாளிகைக்குப் போவதுதான் உத்தமம். ஆனால் நான் தனிமையில் போக முடியாது போலிருக்கிறதே!" என்று சொல்லியவாறு வாசற்பக்கம் அடி எடுத்து வைத்தாள். அவள் கால்கள் தடுமாறின.

வேலைக்காரி உள்ளே நுழைந்தாள். பீஜகுப்தன் எழுந்து நின்று, "ஆம், இந்த வேளையில் தனிமையில் போவது முடியாத காரியந்தான்!" என்றான்.

பீஜகுப்தன் சிறிது நேரம் யோசனை செய்துவிட்டுச் சுவேதாங்கனைப் பார்த்து, "வாசலில் ரதம் நிற்கிறது. அதில் அழைத்துக் கொண்டுபோய் உன் எசமானியை அவளுடைய வீட்டில் விட்டுவிட்டு வா! அதற்குள் உன் படுக்கைக்கு வேண்டிய ஏற்பாடுகள் முடிந்துவிடும்" என்றான்.



சுவேதாங்கன் சித்திரலேகாவுடன் புறப்பட்டுப் போய்விட்டான்.

• • •

குமாரகிரி யோகி!

"யோகியா? ஆம், யோகிதான். ஏனென்றால் அவன் உலகத்தை முற்றிலும் வெறுத்தவன். ஏன் தெரியுமா? வேறொரு கற்பனை உலகத்தை அடைவதற்காக. அந்தக் கற்பனை உலகம் சகல சுகபோகங்களும் நிரம்பியதாக இருக்கும் என்பது அவனுடைய நினைப்பு. கோலாகலமும் ஜனக்கும்பலும் நிறைந்த இந்த உலகம் அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆகவேதான் இந்த உலகத்தை வெறுத்து அமைதியை நாடுவதற்காக அவன் நிர்மானுஷ்யமான கானகத்தைத் தேர்ந்தெடுத்திருந்தான்.

யோகி குமாரகிரியிடத்தில் மாபெரும் சக்திகள் பல குடிகொண்டிருந்தன. ஆனால் அந்தச் சக்திகளைச் சேகரிப்பதில் அவனுக்கு எவ்வளவு நம்பிக்கையும் உற்சாகமும் இருந்ததோ, அவ்வளவு நம்பிக்கையும் உற்சாகமும் அவற்றைப் பிரயோகிப்பதில் இல்லை. எப்பொழுதும் அவனுடைய மனம் தனிமையையே நாடியது; தனிமையிலேயே நிலைத்தது; தனிமையிலேதான் அவன் ஒருமைப்பட்ட உள்ளத்துடன் யோகாப்பியாசங்களும் செய்ய முடிந்தது. அவன் தன் உடலை எப்படி யெப்படியெல்லாமோ வாட்டினான்; வதக்கினான். யோகத் தீயில் அவனுடைய உடல் பற்றி எரிந்தது. ஆனால் உள்ளத்திலே காத்துவந்த இணையற்ற இன்பத்தின் கற்பனை ஊற்று அந்த எரிச்சலைத் தணித்தது; குளிரச் செய்தது.

யோகி குமாரகிரி சுகபுருஷன். சதா சர்வகாலமும் தியானத்திலும் நிஷ்டையிலும் ஆழ்ந்திருப்பதுதான் அவனுடைய வேலை. அவனது உள்ளத்திலே ஆசைகள் எழுந்ததும் இல்லை; பின்னர் அவை நிராசையாக மாறி மனக்கிலேசத்தை உண்டு பண்ணியதும் இல்லை. குமாரகிரி மற்ற கடமைகளை மறந்து மெய்யறிவு பெறுவதொன்றையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தான். பேரின்பக் கற்பனையில் தான் எத்தனை திருப்தி! நரகம் என்பதையே அறியாத மனிதன் நரகத்தைத் தணித்துக் கொண்டபின் ஏற்படும் திருப்தியை எவ்வாறு உணர்வான்? சுகத்தையே



இன்ஸ்பெக்டர்:—பையா! உன் பெயர் என்ன?

பையன்:—எந்தப் பெயர் ஸார்? அம்மா வைத்த பெயரா? அப்பா வைத்த பெயரா? தாத்தா வைத்த பெயரா?

இன்ஸ்பெக்டர்:—பள்ளிக்கூடத்தில் உன்னைக் கூப்பிடுகிற பெயரைச் சொல்லு?

பையன்:—இரட்டை வால், ஸார்!

அனுபவித்துத் திளைத்தவனுக்குத் தூக்கத்தின் பெருமை எங்கே தெரியப் போகிறது?

துயரம் என்பதையே கண்டறியாத மாசு மறுவற்ற உள்ளத்தைக் கற்பனை உலகத்துக்கு இட்டுச் செல்லுவது மிகவும் சுலபம். யோகி குமாரகிரி அடிக்கடி தன்னை மறந்து நிஷ்டையில் உட்கார்ந்து விடுவது உண்டு. அப்படி உட்கார்ந்து விட்டால் மணிக் கணக்கு, நாள் கணக்குத்தான்......!

ஆகவே குமாரகிரி யோகிதானே?

மதுபாலன் யோகி குமாரகிரியின் சிஷ்யன். மதுபாலனுக்குத் தனது குரு குமாரகிரியின் சக்திகளைப் பற்றி நன்றாகத் தெரியும். அவற்றை நினைத்து நினைத்து அவன் மிகவும் வியப்புறுவான்.

"பிரபோ! புலனடக்கத்தின் லட்சியம் என்ன?" என்று கேட்டான் மதுபாலன்.

தனது சிஷ்யனின் கேள்வியைக் கேட்டதும் குமாரகிரி நிமிர்ந்து உட்கார்ந்து, "சாந்தம்! சாந்தம்! அந்தச் சாந்தத்தின் மூலம் உண்டாகும் ஆனந்தம்!" என்று ரத்தினச் சுருக்கமாகப் பதில் அளித்தான்.

"பிரபோ, உலகத்தின் உண்மைப் போக்கு என்ன?" என்று மறுபடியும் மதுபாலன் ஒரு கேள்வியைக் கேட்டான்.

"வெளித் தோற்றத்துக்கு மாறுதலைப் போலவும், உள்ளே ஊடுருவி நோக்கும் பொழுது ஒரே சூன்யம் போலவும் தோன்றுகிறதே, அதுதான்! 'சூன்யமாவது, மாறுதலாவது? இதென்ன விசித்திரமாயிருக்கிறதே!' என்று உனக்கு வியப்பாயிருக்கிறதல்லவா? 'இந்த இரண்டும் எப்படி ஒன்றாக முடியும்?' என்றும் கேட்கத் தோன்றுகிறதல்லவா? அப்படித் தோன்றுவது இயல்புதான். ஆனால் இந்த நிலைமைதான் மெய்ஞானத்தின் கடைசிப் படியாகும். உலகம் என்பது என்ன? வெறும் சூன்யம். மாறுதல் என்று சொல்லுகிறேனே, அது சூன்யத்தின் திருவிளையாடல். என்ன, புரிகிறதா?" என்றான் குமாரகிரி.

மதுபாலனுக்கு அவனுடைய பதில் திருப்தி அளிக்கவில்லை. "பிரபோ, உலகம் சூன்யமானது என்று கூறுகிறீர்களே அதுதான் எனக்குத் தெளிவாகவில்லை. கண்களுக்கெதிரே காணப்படும் பொருள் எப்படிச் சூன்யமாக இருக்க முடியும்?" என்று கேட்டான்.

குமாரகிரி இலேசாகச் சிரித்தான். பிறகு, "இந்த இடத்தில்தான் யோகம் தேவைப்படுகிறது. யோகி கண்களை மூடிக் கொண்டு விட்டால் அகண்டமான வெறும் சூன்யத்தைத் தவிர வேறொன்றையும் காண்பதில்லை. அந்தச் சூன்யத்தில் சுகம் துக்கம், விருப்பு-வெறுப்பு, இரவு-பகல், பிரம்மம்-மாயை அனைத்தும் மறைந்து விடுகின்றன. அந்தப் பிரகாசமான சூன்யத்தில் யோகி கடமாடுகிறான்; அதிலேயே லயித்தும் விடுகிறான். இம்மாதிரி சூன்யத்தில் கற்பனை வாழ்வை மறந்து சிறிது நேரம் லயித்து விடுவதைத்தான் யோகம் என்கிறோம். பரம்பொருளுடன் கூடிய சூன்யத்தில் எப்பொழுதுமே லயித்து விடுவதைத்தான் 'முக்தி' என்று சொல்லுகிறோம். யோகியானவன் சரீரத்துடன் முக்தியை அனுபவிக்கிறான்" என்றான்.

இதைக் கேட்டதும் மதுபாலனுக்குத் தன் குருவின்மீதுள்ள பக்தியும் சிரத்தையும் பன்மடங்காகப் பெருகியது. அவன் கண்களில் நீர் மல்க, குமாரகிரியின் காலடிகளிலே விழுந்து பணிந்தான். குருநாதனின் விசாலமான கூரிய அறிவையும், சீரிய ஒழுக்கத்தையும் எண்ணி வியந்தான். அதே சமயத்தில் குரு ரத்னாம்பர், தமது சிஷ்யன் விசாலதேவனை அழைத்துக் கொண்டு குமாரகிரியின் குடிசைக்குள்ளே கம்பீரமாக நுழைந்தார்.

(தொடரும்)

அவன் கண்ட அன்னை

விந்தன்

"பூலோகத்தில் பெண்ணாய்ப் பிறந்து நான் அனுபவிக்க வேண்டியவற்றையெல்லாம் அனுபவித்து விட்டேண்டி, அம்மா! கடைசியாக ஒரே ஒரு ஆசை இருக்கிறது. அந்த ஆசை ஞானசிராமனுக்குக் கல்யாணம் செய்து வைத்துக் கண்ணுக் கழகாகப் பார்க்க வேண்டுமென்பதுதான்!" என்று அலமேலு அம்மாள் தன் ஒரே மகனைப் பற்றித் தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் அடிக்கடி சொல்லிக் கொள்வாள்.

ஞானசிராமனோ தனக்குத் தெரிந்த அரை குறையான உலகானுபவத்தைக் கொண்டு, தன்னுடைய தாயார் உயிரோடு இருக்கும் வரை, தான் கல்யாணம் செய்து கொள்வது தனக்கும் கெடுதல், தன்னைத் தேடி வருபவளுக்கும் கெடுதல் என்ற விபரீதமான முடிவுக்கு வந்திருந்தான்.

இந்த முடிவை அவன் தாயாரிடமும் நாசுக்காகத் தெரிவித்தான். "என்னுடைய நன்மை எனக்குப் பெரிதல்ல, அம்மா! உன்னுடைய நன்மைதான் எனக்குப் பெரிது. உன்மீது கொண்டிருக்கும் அன்பில் இன்னொருத்தி பங்கு கொள்ள வருவதை நான் விரும்பவில்லை, அம்மா!" என்றான்.

"நன்றாயிருக்குடா, நீ சொல்வது! நான் இன்று போவேனோ, நாளை போவேனோ? நான் ஒரு சதமா, உனக்கு?—அதெல்லாம் முடியாது; உனக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைத்துவிட்டுத்தான் நான் கண்ணை மூடுவேனாக்கும்!" என்று பிடிவாதம் பிடித்தாள் தாயார்.



ஞானசிராமனின் பாடு தர்ம சங்கடமாகப் போய்விட்டது. அவன் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் கல்யாணத்துக்கு ஒருவாறு சம்மதித்தான். அதன் பயனாக வைஜயந்தி அவனுக்கு மனைவியாக வந்து வாய்த்தாள்.

ஏறக்குறைய மூன்று மாத காலம் அவர்களுடைய மண வாழ்க்கையில் குறை யொன்றும் தெரியவில்லை; அப்படியே தெரிந்தாலும் அது குறையாகத் தோன்றவில்லை. அதற்குள் அலமேலு அம்மாள், தான் ஏற்கெனவே சபதம் எடுத்துக் கொண்டிருந்தபடி கண்ணை மூடிவிட்டிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். அதுதான் நடக்கவில்லை!

அவளுடைய வயது வளர்ந்துகொண்டே வந்தது; அதற்கேற்றாற்போல் வம்பும் வளர்ந்து கொண்டே வந்தது.

★

"பேபி, பேபி!"

இது 'வைஜயந்தி' என்பதற்குப் பதிலாக ஞானசிராமன் தன் மனைவிக்கு வைத்திருந்த செல்லப் பெயர். இந்தப் பெயரைச் சொல்லி அவன் தன் மனைவியை அன்புடன் அழைத்தால் போதும்—வந்தது மோசம்; "அது என்னடா, 'பேபி, பேபி!'—நாய்க்குட்டியைக் கூப்பிடுகிற மாதிரி கூப்பிடுகிறாயே!" என்பாள் அலமேலு அம்மாள்.

வைஜயந்தி பதிலுக்கு ஏதாவது சொல்லி, வம்பை வளர்க்காமலிருக்க வேண்டுமே என்ற கவலையுடன் ஞானசிராமன் தன் மனைவியின் முகத்தைப் பார்ப்பான்.

அவளுக்கோ, உலகத்தைப் பார்த்துச் சிரிக்கத் தெரிந்திருந்தது. ஏன், தன்னையே பார்த்துச் சிரிக்கவும் தெரிந்திருந்தது. ஆகவே, அவள் தனக்கு வரும் கோபத்தைச் சிரிப்பாக மாற்றிக் கொண்டு, "தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை!" என்பாள்.

சாயந்திர வேளையில் வைஜயந்தி தன்னை அலங்கரித்துக் கொண்டால் ஞானசிராமனின் அன்னைக்கு ஏனோ பிடிக்கவே பிடிக்காது. "அகமுடையானின் மனதைக் கெடுப்பதற்கு இதெல்லாம் என்ன வேஷம்?" என்று கேட்டு, அவள் முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொள்வாள்.

"இது என்ன அபத்தம்! கண்டால் காததூரத்தில் நிற்கும்படி அவள் இருக்க வேண்டுமா, என்ன!" என்று தனக்குள் எண்ணி வருந்தியவனாய், ஞானசிராமன் தன் மனைவியைப் பார்ப்பான்.

அவள், "தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை!"

என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு அழுத்தலாக இருப்பாள்.

இரவிலும் இந்த வம்பு நிற்பதில்லை. படுக்கை அறையில் இருக்கும் கணவனுக்கு மனைவி பால் கொண்டு போனால், "வெயிற் காலத்தில்கூட இருவருக்கும் உள்ளே என்னடா படுக்கை? வெளியே சற்றுக் காற்றோட்டப் படுத்துக் கொண்டால் என்ன?" என்று அவள் எதையோ நினைத்துக் கொண்டு இரைவாள்.

இந்த ரஸாபாசமான விஷயம் ஜானகிராமனின் காதில் நாராசம்போல் விழும். அவன், "அட கடவுளே! இது என்ன வெட்கக் கேடு!" என்று தலையில் அடித்துக் கொண்டே தன் மனைவியைப் பார்ப்பான்.

"தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை!" என்பாள் அவள் ஒரு கவலையுமில்லாமல்.

மற்ற நாட்களிலாவது அலமேலு அம்மாள் சும்மா இருப்பாள் என்கிறீர்களா?— அதுவும் கிடையாது. அவர்களுடைய அறைக்கு அருகே நின்று கொண்டு அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கவனிப்பாள். அவர்களோ அவள் எதிர்பார்க்கிறபடி ஒன்றும் பேச மாட்டார்கள். அலமேலு அம்மாள் நின்று நின்று, கேட்டுக் கேட்டு அலுத்துப் போவாள். கடைசியில் "விடிய விடிய என்னடா பேச்சு! அவளுக்குத்தான் வேறே வேலை கிடையாது. பொழுது விடிந்ததும் நீ வேலைக்குப் போக வேண்டாமோ? ஓயாமல் ஒழியாமல் இப்படிப் பேசிக்கொண்டே யிருந்தால் உடம்பு தான் என்னத்துக்கு ஆகும்?" என்று அக்கறையுடன் இரைந்துவிட்டு ஏமாற்றத்துடன் சென்று படுத்துக் கொள்வாள்.

ஜானகிராமனுக்கோ ஒன்றும் புரியாது. அவன் மனோதத்துவத்தில் இறங்கித் தன்னுடைய தாயாரைப்பற்றி ஆராய்ச்சி செய்வான். ஆராய்ச்சியின் முடிவில் தன் அருமை அன்னை இளம் பிராயத்திலேயே கணவனை இழந்து விட்டதுதான் மேலே குறிப்பிட்ட வம்புகளுக்கெல்லாம் காரணம் என்று தோன்றும். இருந்தாலும் வைஜயந்தி சொல்வது போல, "தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை" அல்லவா!

*

ஜானகிராமனுக்கும் வைஜயந்திக்கும் தாங்கள் கல்யாணமாவதற்கு முன்னால் தனித் தனியே இருந்து வாழ்ந்த உலகம் பழைய உலகமாகவும், கல்யாணம் செய்து கொண்டு இருவரும் சேர்ந்து வாழும் உலகம் புதிய உலகமாகவும் தோன்றிற்று. தாங்கள் கண்ட புதிய உலகத்தைப் பற்றி அவர்கள் என்னவெல்லாமோ பேச வேண்டுமென்று துடியாய்த் துடித்தார்கள். அதற்கு ஔவைப் பிராட்டியாராலும் ஆசாரிய புருஷர்களாலும் புகழப்பட்ட 'அன்னை' எவ்வளவுக் கெவ்வளவு இடையூறாயிருந்தாளோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய ஆவல் அதிகரித்தது.

ஒரு நாள் மாலை ஜானகிராமன் பொழுதோடு வீட்டுக்கு வந்தான். அவனுக்குக் காப்பி கொடுத்த பிறகு, "எங்கேயாவது சென்று சிறிது நேரம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தால் தேவலையே!" என்றாள் வைஜயந்தி.

இதை அவள் சாதாரணமாகத்தான் சொன்னாள். இருந்தாலும் ஜானகிராம



ளின் உள்ளத்தை அது என்னவோ செய்தது. அவன் அவளைப் பரிதாபத்துடன் பார்த்தான். பிறகு, "கடற்கரைக்காவது சென்று சிறிது நேரம் இருந்துவிட்டு வருவோமா?" என்றான்.

"எனக்கு ஆட்சேபணையில்லை; ஆனால் உங்கள் தாயார்......"

"அவளிடம் உண்மையைச் சொல்ல வேண்டாமே!"

"பின் பொய்யா சொல்லுவீர்கள்?"

"ஆமாம்; அவள் தானே நம்மைப் பொய் சொல்லச் சொல்கிறாள்?"

"சரி; என்ன பொய் சொல்லுவீர்கள்?"

"இப்பொழுதுதான் எங்கே பார்த்தாலும் நவராத்திரி விழா நடக்கிறதே! யாரோ ஒருவன் கொலுவுக்கு அழைத்திருப்பதாகச் சொன்னால் போகிறது!"

இதைச் சொல்லி அவன் வாயைக்கூட மூடவில்லை; "காரியம் ஒன்றும் நடக்காவிட்டாலும் இந்த வீட்டில் பேச்சுக்குக் குறைவில்லை!" என்று இரைந்து கொண்டே அலமேலு அம்மாள் உள்ளே வந்தாள்.

ஜானகிராமன் 'திருதிரு' வென்று விழித்துக் கொண்டே, "ஒன்றுமில்லை, அம்மா! நண்பன் ஒருவன் எங்களை நவராத்திரி விழாவுக்கு அழைத்திருக்கிறான்......" என்று ஆரம்பித்தான்.

"அதற்கு ஒரு வயசுப் பெண்ணை அழைத்துக் கொண்டு நீ தனியாகப் போகப் போகிறாயா?"

"ஆமாம், அம்மா! ஒரு மணி நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்துவிடுகிறோம்."

"சரி, சரி; ஜாக்கிரதையாகப் போய் விட்டு வா; சீக்கிரமாகத் திரும்பி வந்து விடு!" என்றாள் தாயார். ஜானகிராமன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

★

சிறிது நேரத்துக்கெல்லாம் இருவரும் கடற்கரைக்குக் கிளம்பினர். கவிந்து வந்த இருளிலும் அவர்களுடைய மனம் ஏனோ தனிமையை நாடிற்று. உயிர்பெற்ற நிழல் படங்களைப்போல உருமாறி விட்ட அவர்கள், கடற்கரையோரமாக வெகு தூரம் நடந்தனர். கடைசியில் ஒரு கட்டுமரத்துக்குக் கீழே உட்கார்ந்தனர்.

"எனக்கு நல்ல அம்மா வந்து வாய்த்தாள்!" என்றான் ஜானகிராமன் அலுப்புடன்.

"அப்படிச் சொல்லாதீர்கள்; தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை!" என்றாள் வைஜயந்தி.

இருவரும் 'கலகல' வென்று நகைத்தனர்.

அதற்குள் ஒருவன் எங்கிருந்தோ வந்து அவர்களுக்கு அருகே கிடந்த கட்டுமரத்தின் மேல் உட்கார்ந்தான். உட்கார்ந்தவன் சும்மா இருக்கவும் இல்லை;

"காத லாகினேன் — கண்ணே!
காத லாகினேன்!"

என்று கரக் கம்பம் சிரக் கம்பம் எல்லாம் செய்து, ரொம்ப ரொம்ப சுவாரஸ்யமாகப் பாட ஆரம்பித்து விட்டான்.

"ஐயோ, பாவம்! இவன் என்னத்துக்கு இப்படி உருகித் தொலைக்கிறான்!" என்று வைஜயந்தி அனுதாபத்துடன் சொன்னாள்.



"நம்முடைய கஷ்ட காலந்தான்!" என்று வெறுப்புடன் சொல்லிக்கொண்டே, அந்த இடத்தை விட்டு எழுந்து நடந்தான் ஜானகிராமன்.

வைஜயந்தி அவனைத் தொடர்ந்து சென்றாள். அடுத்தாற்போலிருந்த ஒரு மணல் மேட்டுக்குக் கீழே இருவரும் 'ஜம்' என்று உட்கார்ந்தனர்.

"காதல் மனிதர்களைப் பைத்தியக்காரர்களாக்கிவிடுகிறது என்கிறார்களே, அது என் அம்மாவைக்கூட விடவில்லை பார்த்தாயா?" என்றான் ஜானகிராமன்.

"உஸ்......தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை!" என்று சொல்லி, அவன் வாயைப் பொத்தினாள் வைஜயந்தி.

அதே சமயத்தில் 'டூப்ளிகேட் இங்கிலீஷ்'காரர்களைப் போல் விளங்கிய கலாசாலை மாணவர்கள் இருவர் — இல்லை, இல்லை; கலாசாலை 'மைனர்'கள் இருவர்— ஒருவர் தோளின்மேல் ஒருவர் லாகவமாகக் கையைப் போட்டுக் கொண்டு அவர்களை நோக்கி வந்தனர்.

அவர்களில் ஒருவன் வைஜயந்தியைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டே, "எப்படி?" என்றான்.

இன்னொருவன், "இருட்டில் எல்லாமே பிரமாதம்தானே!" என்று சொல்லிவிட்டுக் கையிலிருந்த சிகரெட்டை ஓர் இழுப்பு இழுத்துப் புகையைக் குபுகுபு வென்று விட்டான்.

இந்த விமர்சனத்துக்குப் பிறகு இருவரும் தங்களுக்குத் தெரிந்த 'இங்கிலீஷ் ட்யூன்' ஒன்றைச் சீட்டி யடித்துப் பாட ஆரம்பித்தனர்.

பாட்டு முடிந்ததும் ஜானகிராமனுக்கும் வைஜயந்திக்கும் இடையே இருந்த இடைவெளியைச் சுட்டிக் காட்டி, "இப்படிப் போவோமா?" என்றான் ஒருவன்.

"ஓ. போவோமே!" என்றான் இன்னொருவன்.

ஜானகிராமன் அவர்களை வெறுப்புடன் நோக்கினான். அவசியமானால் பாதரட்சையிலிருந்து பட்டுக் குஞ்சம் கட்டிய விளக்குமாறு வரை ருசி பார்ப்பதற்குத் தயாராயிருந்த அந்த 'மைனர்'கள் அதை லட்சியம் செய்யவில்லை; இருவருக்கும் நடுவே புகுந்து சென்றனர். சிறிது தூரம் சென்ற பிறகு மீண்டும் திரும்பி இருவருக்கும் நடுவே வந்தனர்.

இந்தத் திருவிளையாடலின் காரணமாகத் தன் கணவன் பொறுமையை இழக்காமலிருக்கவேண்டுமே என்பதற்காக, "இது என்ன சங்கடம்? எழுந்து போவோம், வாருங்கள்!" என்றாள் வைஜயந்தி.



தம்பதிகள் இருவரும் மீண்டும் தனிமையை நாடி நடந்தனர். அவர்களுக்குப் பின்னால் 'கலுக்' என்று சிரிக்கும் சத்தம் கேட்டது. சிரித்தவர்கள் வேறு யாருமில்லை; 'டூப்ளிகேட் இங்கிலீஷ்'காரர்கள் தான்!

ஜானகிராமனுக்கு ஆத்திரம் அளவு கடந்து போகவே, சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. "ஒரு வேளை அம்மா இவர்களை அனுப்பியிருப்பாளோ!" என்றான் அவன்.

அவளோ, "தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை!" என்றாள் வழக்கம் போல.

"சரி, சரி; அந்தக் கோயிலுக்கே போய்த் தொலைவோம், வா!" என்றான் ஜானகிராமன் எரிச்சலுடன்.

இருவரும் நேரே பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தனர். கலாசாலை 'மைனர்'களும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்


...ர். இரண்டு மூன்று முறை அவர்களைத் திரும்பிப் பார்த்த ஜானகிராமன், அப்புறம் திரும்பிப் பார்க்கவேயில்லை.

*

ஜானகிராமன் பஸ் ஸ்டாண்டை அடைவதற்கும் பஸ் வந்து நிற்பதற்கும் சரியாயிருந்தது. தம்பதிகள் இருவரும் பஸ்ஸில் ஏறினார்கள். தங்களைத் தொடர்ந்து வந்த 'மைனர்'களை மட்டந் தட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன், "கர்மசிரத்தையுடன் இவ்வளவு தூரம் வந்து எங்களைப் பஸ்ஸில் ஏற்றி விடுகிறீர்களே, ரொம்ப சந்தோஷம்; ரொம்ப வந்தனம்!" என்று சொல்லிக் கொண்டே ஜானகிராமன் திரும்பினான்.

"நீங்களா, அத்திம்பேரே! இருட்டில் உங்களை நான் கவனிக்கவேயில்லை; யாரோ என்று பார்த்தேன் — மன்னிக்கணும்" என்று அசடு வழியச் சொன்னான் அந்த 'மைனர்'களில் ஒருவன்.

பிரம்ம குலம்


5 9 1949

உபாத்தியாயர்களே!

தானது அக்டோபர் மாதம் 3-ந் தேதி மாயூரத்தில் நடந்த ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாட்டுக்கு மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அனுப்பிய ஸ்ரீமுகம்.

அவ்வளவுதான்; அடுத்தவன் கையிலிருந்த சிகரெட் துண்டை வீசி எறிந்துவிட்டுக் கம்பி நீட்டி விட்டான்.

"வைஜயந்தி! இங்கே வந்து உன் தம்பியின் அழகைக் கொஞ்சம் பாரேன்!" என்றான் ஜானகிராமன்.

அவள் எதிர்பாராத விதமாகத் தம்பியைக் கண்டதும் ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

ஜானகிராமன் மைத்துனன் கையைப் பலவந்தமாகப் பிடித்து இழுத்து, அவனைப் பஸ்ஸில் உட்கார வைத்தான்.

அசடு வழியும் தம்பியின் முகம் அக்காவின் அனுதாபத்தைப் பெற்றது. அவள் பேச்சை மாற்ற எண்ணி, "நீ எங்கே வந்தாய்? எப்போது வந்தாய்?" என்று கேட்டாள்.

"அப்பாவின் நண்பர் ஒருவரின் வீடு இங்கே இருக்கிறது, அக்கா! அவருடைய மகனுக்கு இன்று காலை கல்யாணம். அப்பா அதற்கு என்னை அனுப்பி வைத்திருந்தார். அப்படியே உன்னையும் பார்த்துவிட்டு வரச் சொன்னார். என்னுடன் இருந்தானே, அவன் என் நண்பன். அவனைக் கல்யாண வீட்டில் பார்த்தேன். அவனும் நானும் சாயந்திரம் உங்கள் வீட்டுக்கு வந்தோம். நீங்கள் நவராத்திரி விழாவுக்குப் போயிருப்பதாகச் சொன்னார்கள். சிறிது நேரம் கடற்கரையில் இருந்துவிட்டு வரலாம் என்று இங்கே வந்தேன். வந்த இடத்தில்தான் இந்த அசம்பாவிதம் நடந்து விட்டது. என்னை மன்னித்து விடு, அக்கா!" என்றான் அவன்.

ஜானகிராமனின் மனம் இரங்கிவிட்டது. "இதற்குத்தான் தன் மனைவியைத் தவிர மற்றவர்களையெல்லாம் சகோதரிகளாகப் பாவிக்க வேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்" என்றான் அவன்.

அதற்குள் அவர்கள் இறங்க வேண்டிய இடத்தில் பஸ் வந்து நின்றது. மூவரும் இறங்கி வீட்டை அடைந்தனர்.

"அழகாய்த்தாண்டா இருக்கு, நீ அவனை அழைத்துக் கொண்டு இப்படித் தன்னந்தனியாகத் திரிந்து வருவது! அவனுக்குத்தான் வெட்கமில்லையென்றால் உனக்காவது இருக்க வேண்டாமோ!" என்றாள் அன்னை.

"அம்மா! உன்னை அன்னையாகப் பெற்ற எனக்கு வெட்கம் ஒரு கேடா, அம்மா!" என்றான் ஜானகிராமன்.

"உன்......தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை!" என்றாள் வைஜயந்தி.

ஐம்பது இளவரசர்கள்

ரா.நா.

4. சகோதரர்கள் துரோகம்

அரக்கனின் அரண்மனையைவிட்டு ஹாரான் நாட்டிற்குப் புறப்பட்ட சில நாட்களுக்கெல்லாம் கடோதரன் தன் சகோதரர்களிடம் தான் யார் என்னும் உண்மையைத் தெரிவித்தான். தான் ஸமாரியாவில் வளர்ந்தது, தன் தந்தையிடம் அன்னியன்போல் வந்து சேர்ந்தது முதலியவற்றையெல்லாம் தெரிவித்தான். தன்னை இனிச் சகோதரன் போல் பாவிக்கும்படி மற்ற இளவரசர்களை வேண்டிக் கொண்டான். அவர்களும் அவ்வாறே செய்வதாகச் சம்மதித்தனர்.

ஆனால் மனதிற்குள் அவர்களுக்குப் பொறாமை ஏற்பட்டது. சமீபத்தில் கடோதரன் புரிந்த வீரச் செயல்களால் தங்கள் தந்தை அவனிடம் அதிகப் பிரியமாகவும் நம்பிக்கையுடனும் இருப்பார் என்று அசூயைப் பட்டனர். தங்கள் உயிரைக் காப்பாற்றியதற்காக அவனுக்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாக அவனிடம் கோபம் கொண்டனர். அவனை எப்படியாவது கொன்று விடுவதற்குத் திட்டமிட்டனர். திட்டமிட்ட இரவே கடோதரன் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது அவனைத் தாக்கினர். அவன் ஞாபகமிழந்து கிடந்ததால் இறந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு தங்கள் இருப்பிடம் சேர்ந்தனர். கடோதரனை வைத்துக்கொண்டு தேரீபரம் இளவரசி அழுது கொண்டிருந்தாள். கடோதரனை இவ்வாறு விட்டுவிட்டு மற்ற இளவரசர்கள் மீண்டும் ஹாரான் நாட்டிற்குத் தங்கள் பிரயாணத்தைத் தொடங்கினர். மறு நாள் தங்கள் தந்தையிடம் அவர்கள் போய்ச் சேர்ந்தனர்.



"இதுவரை எங்கே சென்றிருந்தீர்கள்?" என அவர்கள் தந்தை கேட்டதற்கு, கரிய அரக்கனிடம் பிடிபட்டது, கடோதரன் காப்பாற்றியது பற்றி அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. அருகாமையிலுள்ள பல நகரங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்ததாகக் கூறினர்.

* * *

தேரீபரம் இளவரசி தன் கணவன் இறந்துவிட்டதாக எண்ணி அழுது கொண்டிருந்தாள். ஆனால் அவன் மூச்சு விடுவதுபோல் காணவே அருகிலுள்ள ஒரு நகருக்கு ஓடி ஒரு வைத்தியனை அழைத்து வரச் சென்றாள். சீக்கிரத்தில் ஒரு வைத்தியனை அழைத்துக்கொண்டு தன் மூகாமுக்கு வந்தாள். ஆனால் அங்கே கடோதரனைக் காணவில்லை.

ஏதோ காட்டு மிருகம் தன் கணவனை இழுத்துச் சென்றிருக்க வேண்டுமென எண்ணி இளவரசி துக்கம் தாங்காமல் புரண்டு புரண்டு அழுதாள். இந்தப் பரிதாப நிலையைக் கண்ட வைத்தியன் இளவரசியைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றான். இளவரசிக்கு வேண்டிய உபசாரம் செய்து அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டு அவள் யார், எந்த ஊர் என்ற விவரங்களைக் கேட்டான். இளவரசியும் தன் துயரக் கதையைச் சொன்னாள். இளவரசியின் கதையைக் கேட்ட வைத்தியன் கூறினான்:

"அன்புக்குரிய அம்மணி! நீ துயரத்திற்கு இரையாகி விடலாகாது. உன் கணவனைத் தாக்கியவர்களைத் தண்டிக்க வேண்டியது உன் கடமை. ஹாரான் மன்னனிடம் சென்று கடோதரனை அவனுடைய சகோதரர்கள் எவ்வளவு கொடுமையாக நடத்தினர் என்பதைச் சொல்லு. அவன் நிச்சயமாக

நியாயம் வழங்குவான். நானே உன்னை அங்கு அழைத்துச் செல்லுகிறேன்."

வைத்தியனின் உதவிக்காக இளவரசி நன்றி செலுத்தினாள். தனக்குத் துணையாக வருவதாயிருந்தால் அவன் யோசனைப்படி ஹரான் நாட்டுக்குப் புறப்படுவதாகக் கூறினாள். அடுத்த நாளே ஒட்டகைகள் மீது ஏறிக்கொண்டு ஹரான் நாட்டிற்குப் புறப்பட்டனர்.



ஹரான் நாட்டை அடைந்தவுடன் அங்கே ஒரு சத்திரத்தில் தங்கி அரண்மனை பற்றிய தகவல்களை விசாரித்தனர். கடோதரன் காணாமற்போனதுபற்றி மன்னர் துயரப்படுவதாகவும் கடோதரனின் தாயார் தன் புதல்வனைப் பற்றிய தகவல் தெரியாததால் ஸமாரியாவை விட்டு ஹரானுக்கு வந்திருப்பதாகவும் அறிந்தனர்.


இதைக் கேட்டவுடன் மன்னனைச் சந்திப்பதைவிட, கடோதரனின் தாயாரைப் பார்ப்பதே நல்லது என்று முடிவு செய்தனர். தேரீபரம் இளவரசியை ஹரான் இளவரசர்கள் பார்த்தால் ஆபத்து என அறிந்து வைத்தியன் மட்டும் கடோதரனின் தாயைச் சந்திப்பதென்று முடிவு செய்து அரண்மனையை நோக்கி நடந்து சென்றான். வழியில் சில பெண்கள் குதிரை மீது வருவதையும், அவர்களைச் சுற்றிக் காலாட்படைகள் வருவதையும் வைத்தியன் கண்டான். அந்தப் பெண்மணிகளில் ஒருத்தி ஆடம்பரமான உடை உடுத்தியிருந்ததால் அவள் யார் என்று கேட்டான். அவள்தான் பிரோஸ் ராணி எனவும், காணாமற்போன தன் மகன் கடோதரன் திரும்பி வரவேண்டும் எனப் பிரார்த்திப்பதற்காக அவள் மசூதிக்குச் செல்லுகிறாள் எனவும் அறிந்தான்.

தான் காண விரும்பிய பெண்மணியைக் கண்முன் கண்டதும் வைத்தியன் சந்தோஷமடைந்தான். ராணியைச் சுற்றி ஜன நெருக்கம் அதிகமாயிருந்தது. அவளைக் கண்டு பேசுவது சுலபமாகத் தோன்றவில்லை. என்ன செய்வது என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தான். அப்போது ராணியின் அடிமைகளில் ஒருவன் அந்தப் பக்கம் வந்தான். வைத்தியன் அவனை அழைத்து, "கடோதரனைப் பற்றிய தகவல் எனக்குத் தெரியும். இதை ராணியிடம் நான் சொல்ல வேண்டும். நீ என்னை அவளிடம் அழைத்துக் கொண்டு போகிறாயா?" என்று கேட்டான். இதைக் கேட்டு அந்த அடிமை ஆச்சரியமடைந்தான். மசூதியிலிருந்து திரும்பும்போது தன்னுடன் வந்தால் ராணியை வைத்தியன் சந்திக்க ஏற்பாடு செய்வதாக அந்த அடிமை தெரிவித்தான்.

அவ்வாறே வைத்தியன் அரண்மனைக்குச் சென்றான். அடிமை அவனை ராணியிடம் அழைத்துச் சென்றான். ராணியும் ஆவலுடன் தன் மகனைப் பற்றிய விவரங்களைக் கேட்டாள். கடோதரனுக்கும் அவன் சகோதரர்களுக்கும் ஏற்பட்ட சச்சரவைப் பற்றித் தேரீபரம் இளவரசி தன்னிடம் கூறியவைகளை அப்படியே வைத்தியன் ராணியிடம் கூறினான். பிரம்மாண்டமான கறுப்பு அரக்கனைத் தன் மகன் எதிர்த்து வெற்றி பெற்றதைக் கேட்டு அவள் உள்ளம் பூரித்தாள். ஆனால், கடைசியில் கடோதரனை அவனுடைய சகோதரர்கள் தாக்கியதைப் பற்றி வைத்தியன் கூறியதைக் கேட்டபோது ராணி மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தாள். மூர்ச்சை தெளிந்து எழுந்தவுடன்

வைத்தியன் தான் தேரிபரம் இளவரசியைச் சந்தித்ததையும், பின்னர் கடோதரன் காணாமற் போனதையும் தெரிவித்தான்.

வைத்தியன் பேசி முடித்ததும் ராணி கூறினாள்: "உன் அன்புக்கும் உதவிக்கும் தக்க கைம்மாறு செய்கிறேன். நீ தேரிபரம் இளவரசியிடம் சென்று ஹாரான் மன்னர் சிக்கிரத்தில் உன்னைத் தம் மருமகளாக ஏற்று உபசரிப்பார் என்று தெரிவிக்க வேண்டும்!" என்றாள்.




வைத்தியன் விடைபெற்றுச் சென்றவுடன் ராணி துக்கம் தாங்க மாட்டாமல் அழுதாள். ஏனெனில் இனித் தன் மகனைக் காணப்போவதேயில்லை என்று அவள் எண்ணினாள். இவ்வாறு அழுது கொண்டிருக்கையில் அவன் இருக்குமிடத்திற்கு ஹாரான் மன்னன் வந்தான். ராணி தான் கேள்விப்பட்ட விவரங்களைத் தன் கணவனிடம் கூறினாள். தன்னுடைய புதல்வர்கள் செய்த கொடூரச் செயலைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் அரசனுக்கு அளவு கடந்த கோபம் உண்டாயிற்று. சகோதரப் பற்று கொஞ்சம் கூட இல்லாத அவர்களுக்கு என்ன தண்டனை விதிப்பது என்று யோசித்தான். கடைசியில் அவர்களுக்கு மரண தண்டனை விதிப்பதுதான் தகுதி என்று கருதினான். உடனே தன் பிரதம மந்திரியை அழைத்து, நாற்பத்தொன்பது இளவரசர்களையும் கைது செய்து கொலையாளிகளை அடைக்கும் கோட்டைக்குள் தள்ளச் சொன்னான். அவ்வாறே அவர்கள் கோட்டைக்குள் அடைக்கப்பட்டார்கள். (தொடரும்)

ஏமாற்று வித்தை!

ராஜீ

விந்திய மலைக்கு அருகில் ஒரு பெரிய காடு இருந்தது. அந்தக் காட்டில் அரசமரத்துப் பிள்ளையார் ஒருவர் இருந்தார். வருஷத்திற்கு ஒரு முறை மிருகங்களெல்லாம் சேர்ந்து பிள்ளையாருக்குப் பத்து நாள் உற்சவம் கொண்டாடும். அவ் விழாவுக்குப் பல விதமான வேடிக்கைகள் வரும். அந்த வேடிக்கைகளுக்குள்ளே மெழுகுப் பொம்மைக் காட்சிதான் பிரமாதமாயிருக்கும். அந்தக் காட்சியை ஒரு நரி காட்டி வந்தது. அந்த மெழுகுப் பொம்மைகள் எல்லாம் பார்ப்பதற்கு உயிருள்ள மிருகங்களைப் போலவே தோன்றும். மெழுகினால் செய்யப்பட்ட ஒரு யானைக் குட்டி ஐந்து நிமிஷத்திற்கு ஒரு தரம் நிஜ யானையைப் போலத் துதிக்கையை மேலும் கீழுமாக ஆட்டிக் காட்டும். விதம் விதமான வர்ண மெழுகினால் செய்யப்பட்ட மயில் நிஜ மயிலைப் போலவே தோகையை விரித்து ஆடும். மெழுகுப் புலி அடிக்கடி தன் வாயைத் திறந்து கூர்மையான பற்களினால் வேடிக்கை பார்க்கவரும் மிருகங்களைப் பயமுறுத்



னும். நல்ல கறுப்பு மெழுகினால் செய்யப்பட்ட கரடி அடிக்கடி இரண்டு காலினால் நின்று வேடிக்கையாக ஆட்டம் போடும்.

இந்த ஆச்சரியமான மெழுகுப் பொம்மைகளைப் பார்ப்பதற்கு மிருகங்கள் கூட்டம் கூட்டமாக வந்தன. இதனால் நரியினுடைய பணப் பெட்டி நிறைந்து வழிந்துகொண்டே இருந்தது. நரி மிகவும் சாமர்த்தியக்கார நரி. இலவசமாக எந்த மிருகத்தையும் அது உள்ளே அனுமதிப்பதில்லை. அப்படியிருக்கும்போது டிக்கெட் இல்லாமல் உள்ளே வந்திருந்த எறும்பையும் சிலந்திப் பூச்சியையும் தேனீயையும் கண்டால் அது சும்மா விடுமா? "ஏ, எறும்பே! சிலந்திப் பூச்சியே! நீங்கள் இருவரும் அந்தத் தேனீயுடன் இப்பொழுதே வெளியே போகாவிட்டால் உங்களையெல்லாம் என்ன பண்ணுகிறேன், பார்!" என்று அது கத்திற்று.

"நரியாரே, கோபித்துக்கொள்ளாதீர்கள்! நாங்கள் மூவரும் உங்களுடைய ஏமாற்று வித்தையைப் பார்க்க வரவில்லை. நீங்கள் வருவதற்கு முன்பாகவே நாங்கள் இங்கே தான் வசித்து வருகிறோம்" என்று அவை பதில் அளித்தன.

"அதெல்லாம் முடியாது! நீங்கள் இலவசமாக உள்ளே இருப்பதுமல்லாமல் ஏமாற்று வித்தை காண்பிக்கிறேன் என்று சொல்கிறீர்கள்!" என்று எரிந்து விழுந்தது நரி.

அவ்வளவுதான்; "ஏ, நரியே! உன்னுடைய ஏமாற்று வித்தை இப்பொழுது வெளியாகப் போகிறது, பார்!" என்று சொல்லிக்கொண்டே தேனீ, புலிப் பொம்மையிடம் சென்றது. சிலந்திப் பூச்சி கரடிப் பொம்மையை நெருங்கிற்று. எறும்பு யானைக் குட்டியிடம் ஓடிற்று. வேடிக்கை பார்க்க வந்திருந்த மிருகங்களெல்லாம் என்ன நடக்கப் போகிறதோ என்ற ஆவலுடன், அவற்றை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தன.

தேனீ, புலிப் பொம்மையின் மூக்கில் தன் முழு பலத்தையும் சேர்த்துக் கொட்டிற்று; புலிப் பொம்மை வலி பொறுக்க முடியாமல் வாலினால் அடித்துக் கொண்டு பயங்கரமாகக் கத்திற்று. சிலந்திப் பூச்சி பொம்மைக் கரடியின் மூக்கின் அருகில் பல முறை சுற்றிச் சுற்றி வரவே, அது 'அச்...... அச்......!' என்று தும்மிற்று. அதே சமயத்தில் எறும்பு ஓடோடியும் சென்று யானைக் குட்டியின் காதில் நுழையவே, அது உரக்கக் கத்திக் கொண்டேகீழே விழுந்து புரள ஆரம்பித்தது. அப்பொழுது கொட்டகைக்குள் ஒளிந்துகொண்டிருந்த ஒரு சிறிய பாம்பு பயந்து ஓட ஆரம்பித்தது. மயில் பொம்மை தன்னை மறந்து, அதை "விட்டேனா, பார்!" என்று துரத்திக்கொண்டு சென்றது.


இந்தக் காட்சியைக் கண்ட மிருகங்கள் எல்லாம் ஆச்சரியம் அடைந்தன. இவ்வளவு நாள் நரியினால் காண்பிக்கப்பட்டவையெல்லாம் மெழுகுப் பொம்மைகள் அல்லவென்றும், நிஜ மிருகங்களின் மீது மெழுகைத் தடவி, நரி தங்களை ஏமாற்றியிருக்கிறது என்றும் அவை தெரிந்து கொண்டன.

பாவம், நரியாருக்கு அன்றுடன் வரும்படியெல்லாம் போயிற்று!

அதிசயக் கணக்கு!

மூன்று இலக்கம் உள்ள ஏதாவது ஒரு எண்ணை எழுதுங்கள். உதாரணமாக,	856
அதை மாற்றி எழுதுங்கள்	658
பெரிய தொகையிலிருந்து சிறிய தொகையைக் கழித்தால் கிடைக்கும் விடை	198
அதையும் மாற்றி எழுதி இரண்டையும் கூட்டுங்கள்	891
	1089

1089-ஐ 9-ஆல் வகுத்துப் பாருங்கள். மீதியில்லாமல் சரியாக வகுக்க முடியும். இந்தமாதிரி எந்தத் தொகையையும் எழுதி வகுத்துப் பார்க்கலாம்.



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி

269. அகதிகளை ஆதரித்த காரியந்தான்.

இலங்கைக்கு அணை கட்ட வேண்டியிருக்கிறது. கனவு உலகத்துக்கு கொஞ்சம் நம்மை இழுத்துச் செல்கிறார் கவிஞர்.

கனவு உலகத்தில் அளவுகோல் ஒன்றுக்கு ஆயிரமாய் நீண்டு விடுகிறது. அதனால் நமக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. நீளட்டும். வேண்டிய மட்டும்!

கல்லுகள் வேண்டும்; துரிதமாகவும் கட்ட வேண்டும்! வானரங்கள் எப்படிச் சாதிக்கின்றன, பார்க்கலாம்.

ஒரு தனித்த குரங்கைப் பார்க்கிறோம். காலினால் ஒரு மலையை உருட்டிக் கொண்டு வருகிறது. கைகளைத் தூக்கி வேறொரு மலையைத் தாங்கிக் கொண்டு நடக்கிறது. இதோடு நிற்கவில்லை காரியம்.

காலிடை ஒருமலை
  உருட்டிக், கைகளின்
மேலுடை மலையினைத்
  தாங்கி, விண்தொடும்
சூலுடை மழைமுகில்
  சூழ்ந்து சுற்றிய
வாலிடை ஒருமலை
  ஈர்த்து வந்ததால்.

[விண் தொடும் சூலுடை மழை முகில் சூழ்ந்து சுற்றிய: வானத்தைத் தொடும்படியான நீர் செறிந்த மழை மேகத்தையும் சேர்த்து (வாலால்) சூழ்ந்து சுற்றிய; வாலிடை ஒரு மலை ஈர்த்து வந்ததால்: வாலிலுள்ள மூன்றாவது மலையையும் இழுத்துக் கொண்டு வந்தது.

குறிப்பு:—மலைகள் காலால் உருளுகின்றன. கைக்கு மேலே நிற்கின்றன. வாலால் சுற்றி இழுக்கப்படுகின்றன. அப்படியானால் குரங்குகளின் உருவம் எப்படியிருக்கும்!]

இனித் தச்சனாகிய நளன் செய்கிற காரியத்தைப் பார்க்கலாம்.

• •
•

தூண்டுக் கற்கள் கொண்டு சுவர் எழுப்புவதைப் பார்த்திருக்கிறோம் நாம். அனுபவம் முதிர்ந்த கொத்தனார் சுவர்ப்பக்கம் நின்று கல்லுகளைப் பொருத்தி வைக்கிறார்.

கல்லுகள் பலவிதக் கோணல்களோடும் முடிச்சுகளோடும் இருக்கின்றன. ஒரு ஆள் தூக்குகிற கல்லும் உண்டு. இரண்டு ஆள் தூக்குகிற கல்லும் உண்டு. மூன்று ஆள் தூக்குகிற கல்லும் உண்டு. அவைகளை ஆங்காங்கு பொருத்தி வைத்து விடுகிறார். சில வேளை நாலு பேர் சேர்ந்து காவடி கட்டித் தூக்கிக் கொண்டு வருவார்கள் ஒரு பாறாங் கல்லை. அந்தக் கல்லையும் ஒரு லாகவத்துடன் வீசி வாங்கி ஒரு தொண்டியில் பதிய வைத்து விடுகிறார், அந்தப் பாறாங்கல் சிறிதும் அசையாதபடி நன்றாய் உட்கார்ந்து கொள்ளுகிறது சுவராக. இதை எல்லாம் பார்க்க வியப்பாய் இருக்கிறது; வெகு ரஸமாயும் இருக்கிறது;

கொத்தனார் காரியம் இங்கே இருக்கட்டும். இனி;

பஞ்சத்தினாலோ, அரசர்கள் செய்கிற கொடுமையினாலோ திரளான ஜனங்கள் நாட்டை விட்டு வெளியேறி விடுகிறார்கள். அத்தகைய அகதிகள், பல ஊர்கள் வழியாக வருகிறார்கள். ஆங்காங்குள்ள அரசர்கள் ஏதோ சில நாள் அவர்களுக்கு அன்னமிட்டுப் பிறகு அவர்களைக் கடத்தி விடுகிறார்கள்.

இந்த விதமாகப் பல அரசர்களை அடைந்து கடைசியாகத் திருவெண்ணை நல்லூருக்கு வருகிறார்கள் அகதிகள்.

அங்கே சடையப்ப வள்ளல் அரசனாய் இருக்கிறார். விஸ்தாரமான நிலங்களைத் திருத்தி வாய்க்கால் வசதிகளும் ஏரி வசதிகளும் செய்து கொண்டிருக்கிறார்.

முதலில் அகதிகளாய் நூறு பேர் வந்தார்கள். அவர்கள் பயிரிடுவதற்கு ஒரு பண்ணையைக் கொடுத்தார் மறுநாள் இருநூறு பேர் வந்தார்கள். அவர்களுக்குத் தக்கபடி வேறொரு பண்ணையைக் கொடுத்தார். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார் கம்பர்

மூன்றாம் நாள் [illegible] ஆறு பேர் வந்து விட்டார்கள். இவர்களை எப்படிச்

சமாளிக்கப் போகிறார் வள்ளல், என்று யோசிக்கிறார் கம்பர்.

அதையும் வள்ளல் சமாளிக்கிறார். புதிதாக வெட்டிய குளம் ஒன்று இருக்கிறது. அதற்கு விஸ்தாரமான நன்செயும் இருக்கிறது. ஆகவே நானூறு பேருக்கும் வேலை செய்ய இடம் இருக்கிறது.

அத்தனை பேருக்கும் அன்னம் அளித்தது என்பது மாத்திரம் அல்லாமல் நித்தியமான ஜீவனத்துக்கும் வழி ஏற்பட்டு விட்டது!

கம்பர் அடைந்த அதிசயத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

• • •

இனி, சேது பந்தனத்துக்கு வரலாம்.

ஒரு பெரிய மலைச் சிகரம். அதன் உச்சியில் விரிந்து படர்ந்த மேகம் உட்கார்ந்திருக்கிறது.

அந்த மலையை வேரோடு பறித்து அப்படியே தூக்கிக்கொண்டு வந்தது ஒரு ஆத்திரப்பட்ட குரங்கு.

தாங்கி வந்த மலையை நளன் அருகில் வந்து அவனுடைய சௌகரியம் பார்த்துக் கொடுப்பதற்கு பொறுமை இல்லை. கொஞ்ச தூரத்தில் இருந்தே வீசி எறிந்துவிட்டது. மிக மிஞ்சிய வேகத்துடனேயே வீசி எறிந்தது.

அந்த வேகத்தைத் தெரிந்த நளன், வந்த வேகத்தைப் பக்குவமாகக் குறைத்து வெகு லாகவமாக மலையை ஏந்தி அணைக்கட்டில் பொருத்தி வைத்து விட்டான். நன்றாய்ப் பொருந்தி உட்கார்ந்து கொண்டது மலை. கட்டுமானத்தில் யாதொரு சிதைவும் இல்லை.

> மஞ்சினில் நிகழ்தரு
> மலையை மாக்குரங்(கு)
> எஞ்சுறக் கடிதெடுத்(து)
> எறிய வே, நளன்
> விஞ்சையில் தாங்கினன் :
> சடையன் வெண்ணெயில்
> தஞ்சமென் றோர்களைத்
> தாங்கும் தன்மைபோல்.

[மஞ்சினில் நிகழ் தரும் மலையை : மேகத்தைச் சிகரத்தில் தாங்கி விளங்கும் ஒரு பெரிய மலையை. மாக் குரங்கு எஞ்சுறக் கடிது எடுத்து எறியவே : ஒரு பெரிய முரட்டுக் குரங்கானது வேண்டாத வேகத்தோடு எடுத்து வீசவும்; எஞ்சுறக் கடிது : வேண்டாத வேகமானது மலையை அப்புறத்தும் கொண்டு போகும்படி; எறிய : வீச; நளன் விஞ்சையில் தாங்கினன் : நளன் அதி அற்புதமான லாகவத்தோடு வாங்கிக் கொண்டு கட்டிடத்தில் பொருத்தினான்.

எது போல்? சடையன் வெண்ணெயில் : சடையப்ப வள்ளல் தன் ஊரான திரு வெண்ணெய் நல்லூரில்; தஞ்சம் என்றோர்களைத் தாங்கும் தன்மை போல் : அகதியாக வந்தவர்களைக் காப்பாற்றும் திறம் போல.]

அரபிக் கதைகளை அனுபவிப்பதற்காக மனோரதத்தில் ஏறுவார்களே அவர்கள், சேதுபந்தனத்தை அபாரமாய் அனுபவிப்பார்கள்.

இதிகாசத்தில் ஒரு அழகிய அங்கமாய் விளங்குவது இத்தகைய வர்ணனை.


கம்பர் கைத்திறத்தை அணை கட்டுவதிலும் அற்புதமாய்க் காட்டுகிறார்.

மறந்துட்டேன்!

நோயாளி:—அடிக்கடி ஞாபக மறதி ஏற்படுதுங்க...!

டாக்டர்:—என்ன ஏற்படுது என்று சொன்னீங்க?

நோயாளி:—அதுதான் தெரியல்லீங்க! மறந்துட்டேனுங்க!





மனைவி:—(பரபரப்புடன்) என்ன! உங்களுக்குச் சங்கதி தெரியுமோன்னோ?...

கணவர் (பரவசமாக):—என்னைப் பார்த்து நல்ல கேள்வி கேட்டாய்! நான் சங்கதி போடுகிறதிலே நிபுணன் என்று உலகமெல்லாம் தெரியுமே?

முதல் கிழவர்:—நேற்று என்ன காற்று அடிக்குது பார்த்தேளா? சென்னை அப்படியே பிச்சிண்டு போயிடுத்து...!

இரண்டாவது கிழவர்:—ஆமாம், ஆமாம். நேற்று அடித்த காற்றிலே பல்லுக் கிட்டிப் போய்விட்டது!



செவ்வந்திப்பூ சிங்காரி



வேம்பு

மணி நாலுக்கு மேலாகி விட்டது. சிங்காரியை இன்னும் காணவில்லை. வழக்கமாக மூன்று மணிக்கே வந்து 'அம்மா' என்று கதவை இடித்துச் சிரித்துச்சிரித்துப் பேசி அந்த அரை மணி நேரத்தை ஐந்து நிமிஷம் போல் எண்ணச் செய்து போகும் அவளை இன்னும் காணவில்லை. பெண் சுகுணா 'இன்றைக்குச் சினிமாவுக்குப் போக வேண்டும், பூத்தோட்டத்தையே தலையில் வைத்துக் கொள்ளப் போகிறே'னென்று குதித்துக் கொண்டிருந்தாள். வாசலுக்கும் உள்ளுக்குமாக சிங்காரியைக் காணவில்லையே என்று அலைந்து கொண்டிருந்தாள்.

சிங்காரி என்றால் எங்களுக்கெல்லாம் உயிர். சிரித்துப்பேசும் சுபாவமும் 'அம்மா' என்ற குரலில் ஒலித்துக் கனியும் அன்பும் அவளை எங்கள் குடும்பத்தில் ஒருத்தியாகவே எண்ணச் செய்து விட்டது.

செவ்வந்திப்பூ பூக்கும் நாட்களில் உதிரியாகவும், மாலையாகவும் கட்டிக் கூடையை அவள் இடையில் சுமந்து வரும் அழகொன்றே போதும். அதனாலேயே செவ்வந்திப்பூ சிங்காரி என்று அழைக்க ஆரம்பித்து விட்டாள் சுகுணா. சுகுணா அப்பொழுது ஐந்து வயதுக் குழந்தை. செவ்வந்திப்பூ வாங்கித் தந்தால்தான் ஆச்சு என்று பிடிவாதம் பிடித்தாள். சிங்காரிக்கு என்ன தோன்றியதோ என்னவோ, அவள் கூடையில் அப்பொழுது பூ எல்லாம் தீர்ந்து விட்டது. நேரே வீட்டுக்குப் போய்த் தோட்டத்துச் செடிகளிலிருந்த மீதியிருந்ததையும் பறித்துக் கொண்டு வந்து சுகுணாவிடம் கொடுத்தாள்.

அந்த நாளிலிருந்து ஒரு வருஷமாகச் சிங்காரி வராத நாளில்லை. மணி மூன்றடித்ததும் அவள் குரல் கேட்பது போக அன்று ஐந்து வரையில் காணோமே என எண்ணிக் கொண்டிருந்தோம்.

அப்பொழுதுதான் சிங்காரி என்னிடம் தான் வளர்ந்த கதையையும் வாழ்ந்த கதையையும் மனம் விட்டு ஒரு நாள் உருக்கமாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.

2

சிங்காரியின் தகப்பனார் சாமிநாத நாயக்கர் கொத்து வேலை செய்பவர். பாலாற்று 'சலசல' ஓசையை அடுத்துள்ள பாலூரில், சாமிநாத நாயக்கரைத் தெரியாதவர்களே கிடையாது. வீடு கட்டும் வேலை அந்தச் சுற்று வட்டாரத்தில் எங்கு நடப்பதானாலும் சாமிநாதன் இல்லாமல் கடைகால் ஒரு அங்குலம்கூட எழும்பாது.

சிங்காரியைப் பெற்று ஏழாண்டு வளர்த்து அவள் தாயார் இறந்தாள். சாமிநாத நாயக்கருக்குத் தம் மகளை வளர்ப்பதோடு, வயிற்றுக்கு உணவு ஆக்கும் பெரும் பாரமும் தலையில் விழுந்தது. காலையில் எழுந்ததும் அநேகமாக எட்டு எட்டரைக்குள்ளாக வேலைக்குப் போக வேண்டியிருக்கும். சிங்காரி எழுந்து, இருள் மறையும் அந்த விடி வேளையில் மண் குடத்துடன் பாலாற்றுக்குப் போய் ஊற்றுத் தோண்டி நீர் மொண்டு வீடு வருவாள். இதற்குள் அவள் தந்தை அடுப்பு மூட்டி வைத்திருப்பார். அதிலிருந்து இலையில் சோறு விழும் வரையில் இருவரும் சக்கரமாகச் சுழல்வார்கள். மகளுக்குத் தாயில்லையே என்ற ஏக்க மில்லாமல் சாமிநாதன் வளர்த்து வந்தார்.

பாலூர் வட்டாரத்தில் வேலை வயிறு வளர்க்கும் அளவுக்கு வருநயம் அளிக்கவில்லை. சிங்காரியும் குறுகுறு என வளர்ந்து விட்டாள். பதினேழு வயதுப் பருவம் அவளைப் பெயருக்கேற்றபடி யாக்கிவிட்டது. இரண்டு முழு ஜீவன்கள் வாழ வேண்டியதோடு, மகளுக்குக் கல்யாணம் செய்விக்க வேண்டிய மகத்தான பொறுப்பும் வேறு.

பட்டணத்தில் மிலிடரி கண்ட்ராக்டர்களிடம் சென்று வேலை செய்தால் நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்று யாரோ சொன்னதின் பேரில் சாமிநாத நாயக்கர்

பட்டணத்துக்குப் போய்ச் சேர்ந்தார். இவர்கள் போய்ச் சேருவதற்கும் அரிசி ரேஷன் வருவதற்கும் சரியாக இருந்தது. ஆகவே, கைநிறையக் கூலியும் பணமும் இருந்தும், வயிறு நிறைய ஒரு வேளை சாப்பாட்டுக்கே திண்டாட்டமாகப் போய் விட்டது. ரேஷனில் கொடுக்கப் பட்ட அரிசி ஒரு வாரத்துக்குக் காணவில்லை!



3

பல்லாவரத்தில் அரிசி கிடைக்கிறதென்று யாரோ சொன்னார்கள். உடனே கிளம்பினான் சிங்காரி. அரிசியை ஒரு கோணிப்பையில் வாங்கி இடுப்பில் வைத்துக் கொண்டு கோட்டை ஸ்டேஷனில் இறங்கிய சிங்காரியை, போலீஸ்காரன் பிடித்து விட்டான். இவனைப் போல் அரிசி கொண்டு வந்து அங்கு கூட்டமாக நிற்பவர்கள் ரொம்பப் பேர். ஒரு கணம் வெலவெலத்து விட்டது சிங்காரிக்கு. ஐயோ! என்ன ஆகுமோ? எப்பொழுது விடுவார்களோ? ஒரு வேளை இதற்காகத் தண்டனை ஏதாகிலும் அளித்து—தான் பெண்பிள்ளை என்பதற்காகத் தன் தகப்பனாரைப் பிடித்துக் கொண்டால்......? இதை நினைத்தபோது சிங்காரிக்கு அழுகை அழுகையாக வந்தது. போலீஸ்காரர்களின் குத்தூசி போன்ற கேலிப் பேச்சு வேறு; தன்னைப் போலவே அகப்பட்டுக் கொண்ட மற்றவர்களின் வாடியமுகம் வேறு; எல்லாம் சேர்ந்து சிங்காரியைக் கலக்கின. இதற்குள் தகப்பனார் சாப்பிட வந்திருப்பாரே என்று நினைத்த போதுதான் துக்கம் தாங்க முடியவில்லை.

அப்பொழுது தன்னைச் சுட்டிக்காட்டி ஒரு வாலிபன் அந்தப் போலீஸ்காரரிடம் ஏதோ பேசுவது தெரிந்தது. அவனை அதற்கு முன் ஒரு தடவை பார்த்திருப்பதாக அவளுக்கு நினைவு. வாரிவிட்ட அந்தக் கிராப்பு; அரும்பிய மீசை; மெல்லிய மல் ஜிப்பாவுடன் கூடிய அவன் எதற்காகத் தன்னைச் சுட்டிக் காட்டிப் பேசுகிறான் என்பது தெரியவில்லை.

போலீஸ்காரரும், அந்த வாலிபனும் இவளருகே வந்தார்கள்.

"ஏ புள்ளே! இவரு உங்க மனுஷரா? நான்தான் அரிசியைக் கொண்டு வந்தேன் என்கிறாரே!" என்றான் போலீஸ்காரன்.

இவளைப் பதில் பேச விடாமலே அவன் - சுந்தரமூர்த்தி, "ஆமாய்யா...நான்தான் சொல்கிறேனே! நம்பிக்கை இல்லையா? நாங்கள் இரண்டு பேருமாகத்தான் கொண்டு வந்தோம். வயசுப் பெண் கேஸ் நடக்கிற வரையில் எதற்கு ஐயா உட்கார்ந்திருக்கணும்? அது வரையில் நானிருக்கிறேன். அவளை விட்டு விடுங்க" என்றான்.

சிங்காரிக்கு ஒரு கணம் மகிழ்ச்சியும், மறுகணம் வேதனையுமாக இருந்தது.

"தம்பி, உண்மையோ! பொய்யோ! பெண் பிள்ளையாயிருந்தால் 10 ரூபாய் அபராதத்தோடே விட்டு விடுவார்கள். மாஜிஸ்ட்டிரேட் உன்னைப் பார்த்தவுடன் ஒருவாரம் போட்டுடுவாரே!" என்றார் போலீஸ்காரர்.

"பரவாயில்லை..." என்ற பதிலைக் கேட்டவுடனே திடுக்கிட்டாள் சிங்காரி.

'தனக்காக யாரோ ஒருவன் ஒருவாரம் சிறைத் தண்டனை விருப்பதா? வேண்டாம், வேண்டாம். நாமே இருந்து விடுவோமே!' என்று எண்ணினாள் சிங்காரி.

ஆனால் "உம், ஓடிப்போ பின்னே!" என்று அதட்டல் சத்தம் கேட்டதும் அவள் தன்னை யறியாமலே ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தாள். ஒருமுறை போகும் போது தனக்காகப் பரிந்து வந்த அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவனும் அந்தக் கூட்டத்தின் மத்தியிலிருந்து பார்க்காமல் இருந்திருக்க முடியுமா?

வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள். தகப்பனார் அங்கே மகளைக் காணாது வாயிலுக்கும் உள்ளுக்குமாக போய் வந்து கொண்டிருந்தார். சிங்காரி அந்தப் படை பதைக்கும் வெய்யிலில் வீட்டுக்குள் நுழைந்தாள். நடந்த விவரத்தைக் கூறினாள் சிங்காரி. மகள் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பி வந்ததற்குச் சந்தோஷமடைந்தார். அரிசி போனதுபற்றிச் சற்றும் கவலைப்படவில்லை.

ஆனால் சிங்காரியினால் அந்த வாலிபனின் உருவத்தை மட்டும் மறக்க முடியவில்லை.


4

நாட்கள் சென்றன. ஓடி மறைந்தன என்று கூடக் கூறலாம். வேலை முன்

போல் லாபகரமாக இல்லை. ஆகவே, பாலுவோடு வந்து விட்டார்கள் தந்தையும் மகளும். கையில் ரொக்கம் கொஞ்சம் சேர்ந்திருந்தது. வீடும் சிறு தோட்டமுமாக வாங்கிக் கொண்டார்கள். இனி அவருடைய அபிலாஷை மகளுக்குக் கல்யாணம் செய்து வைத்து மகிழ வேண்டியதுதான்.

சிங்காரிக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது என்னவென்றால் நிச்சயம் செய்திருந்த கணவர் முன்பே அவள் இதயத்தில் வரித்திருந்த, தனக்காகக் குற்றத்தை ஏற்ற சுந்தரமூர்த்தியே என்ற விஷயம்தான். தந்தையிடம் என்னவென்று சொல்ல? சுந்தரமூர்த்தி சிங்காரியின் தூரத்து உறவாகவும் இருந்தான் என்றால் சிங்காரியின் சந்தோஷத்துக்குக் கேட்கவா வேண்டும்?

. கல்யாணமாகி இரண்டுமாதம் வாழ்க்கை மிகவும் சந்தோஷமாகத்தான் சென்றது. கொத்து வேலையைத் தவிர வேறு வேலையே செய்தறியாத சுந்தரமூர்த்திக்கு அந்த வட்டாரத்தில் எதும் வேலை கிடைக்கவில்லை. மாமனார் வீட்டில் ஜம்மென்று சாப்பிட்டு, மடிப்புக் கலையாமல் சொக்காய் போட்டுக்கொண்டு காலங்கழித்து வந்தான். ஆனால் சாமிநாத நாயக்கர் கண்டிப்புப் பேர் வழி. இடை இடையே இடித்து இடித்து ஏதோ கூற ஆரம்பித்தார். சிங்காரியும் தந்தையின் அந்தச் சொற்களுக்குப் பதில் ஏதாவது கூறி அடக்கியே வந்தாள். ஓரிடத்தில் சுந்தரமூர்த்தி வேலையை ஒப்புக் கொண்டு, நடுவில் நாலைந்து நாள், மேஸ்திரியிடம் கோபம் என்று போகாமலிருந்ததைக் கேள்விப் பட்டார் நாயக்கர். கோபம் பொத்துக் கொண்டு வந்தது அவருக்கு. சிங்காரியைக் கூப்பிட்டார். "இதெல்லாம் நல்லா இல்லே! கலியாணம் கட்டியாச்சு. நாலு காசு சம்பாதிக்க யோக்யதை இல்லேன்னு ஊர்லே தான் மதிப்பாங்களா? கிடைச்ச வேலையையும் செய்யாமப்போனா, எனக்குன்னு அவமானமா இருக்குது!" என்று கத்தினார். திண்ணையில் உட்கார்ந்திருந்த சுந்தரமூர்த்தியின் காதில் இது விழுந்தது. வெடுக்கென்று எழுந்து உள்ளே வந்தான். அவனும் பதிலுக்கு ஏதேதோ பேசி விட்டான்.



ஆனால் கடைசியில் சிங்காரியின் தகப்பனார் "அவ்வளவு ரோசமுள்ளவன் ஏதாவது வேலை வெட்டி செய்யணும்" என்று சொன்னதுதான் அவன் மனதைக் கலக்கியது; உடம்பைக் குலுக்கியது.

என்ன நினைத்தானோ என்னவோ! வெளியே போனான். அன்று வரவில்லை. மறுநாள், அதற்கு அடுத்த நாளும் காணவில்லை. சிங்காரி அழுதழுது முகம் வீங்கினாள். சாமிநாத நாயக்கரும் எங்கெல்லாமோ தேடினார். 'அப்படி என்னதான் சொல்லிவிட்டேன். அவன் நல்லத்துக்குத் தானே சொன்னேன். சும்மா சோப்பு வாரிக்கிட்டு, மல் ஜிப்பா மடிப்புக் கலையாமே போட்டுக்கிட்டா ஒண்ணும் நடக்காது. உலையிலே அரிசி வந்து குதிக்காதுன்னு அவன் நல்லதுக்குத்தானே சொன்னேன்' என்று அங்கலாய்த்தார்.

5

ஒரு மாதம் கழித்து மணிபுரியிலிருந்து சுந்தரமூர்த்தி ஒரு கடிதம் எழுதியிருந்தான். எதும் வருத்தப்பட வேண்டாமென்றும், அங்கு பெரிய சாலையொன்று போடும் வேலை நடக்கிறதென்றும் நல்ல சம்பளம் கிடைப்பதாகவும் எழுதியிருந்தான். மாதம் இரண்டு கடிதாசிதான் போடமுடிந்தது. மாதா மாதம் ஏதாவது பணமும் வரும். கலியாணமாகி நான்கு மாதங்களிலேயே புருஷன் தன்னை விட்டுச் சம்பாதிப்பதற்கென்று வடக்கே தூரதேசம் போனது சிங்காரிக்கு அடக்காத் துயரமாகி விட்டது. துயரத்தை மறக்க வீட்டுத் தோட்டத்திலே செடிகள் பயிரிட்டாள். மல்லிகை காலத்தில் மல்லிகை, ரோஜாப்பூ காலத்தில் அழகான ரோஜா, செவ்வந்திப்பூ காலத்தில் கண்ணைப் பறிக்கும் மஞ்சள் நிறப் பூ, இவைகள் குலுங்கக் குலுங்கப் பூக்கும் என்று பயிரிட்டிருந்தாள். பட்டணத்திற்குக் கூட அனுப்பும் அளவுக்குத் தோட்டம் செழிப்பாகி விட்டது. ஆகவே, அவள்

'அவ்வளவு தொலைவு போய் சம்பாதிக்க வேண்டாம்; இங்கே தோட்டத்துப்பூவொன்றே நாம் இருவரும் சாப்பிடப் போதுமான பணம் தரும்' என்று அடிக்கடி எழுதுவான்.

• • •

எங்கள் வீட்டிற்குத் தினமும் முதன் முதலில் பூவைக் கொடுத்து விட்டுத்தான் காலைக்கு வரும் பாசஞ்சரில் காஞ்சீபுரத் துக்குப் பூவைக் கொடுத்தனுப்புவான். அப்படிப்பட்டவன் அன்று வராதது என்னவோ போலிருந்தது.

மணி ஐந்தடித்தது. வீட்டு வாசலில் 'கடக், கடக்' என்று வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது. 'யாரது?' என்று பார்க்க நாங்கள் எல்லோரும் ஓடினோம். வண்டியி லின்று சிங்காரி குதித்து ஓடி வந்தான். நாங்கள் "பூ எங்கே? வண்டியில் வருகிறாயே! எங்கேயாவது போய் வந்தாயா?" என்று கேட்பதற்குள், அவனே "அம்மா, அம்மா! அவரு காலை பாஸஞ்சருக்கு வந்துட்டாரு, அம்மா! வண்டியிலே இருக்காரு. ஸ்டேஷன்லே பூ கொடுத்துட்டுத் திரும்பினேன். பெட்டி படுக்கையோடே கம்ப ஊரு ஸ்டேஷனிலே யாரு இறங்குறான்னு பார்த் தேன், அவர்! 'அத்தான்' என்று அலறிப் புட்டேன். அந்த தேசத்திலே நல்ல மழை யாம். ஆறு மாசம் வேலை நடக்காதாம். பார்த்துட்டுப்போக வந்தாராம்" என்றான். அவன் முகத்தில் சந்தோஷம் பொலிந்தது.

"சிங்காரி! இனிமேல் எங்களை மறந் திடுவே" என்றான் சுருணு.


"மறப்பேனா அம்மா......" என்று கூறிக் கொண்டே வண்டியில் ஏறினான்.

"செவ்வந்திப்பூ நீ நாலைஞ்சு பூவை வெச்சுக்க மாட்டேன்" என்றான் சுருணு.

"கலியுக நளன்"

அறுபத்துநாலு கலைகளில் சமையற் கலை மிக முக்கியமானது. ஆதிகாலத்தில் நளனும் பீமனும் அக்கலையில் சிறந்திருந்தார்கள் என்று இதிகாசங்கள் கூறுகின்றன. நளன் சக்கரவர்த்தி, பீமன் மன்னர் குலத்து மைந்தன். ஆகவே சமையற் கலையை நம் முன்னோர்கள் எவ்வளவு உயர்வாகக் கருதி யிருக்கவேண்டும்?

கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்களுடைய கையினால் "கலியுக நளன்" என்ற பட்டம் பொறித்த மெடல் வாங்கியவர் ஸ்ரீ எஸ். அப்பாசாமி ஐயர்.



அவர் பிறந்தது திருநெல்வேலி ஜில்லா; நெடுநாளாக வசிப்பது திருவல்லிக்கேணி. சமையலுக்கு அடுத்தபடியாக ஸ்ரீ அப்பாசாமி ஐயரின் பக்தி காங்கிரஸின் பேரில். சென்ற முப்பது வருஷங்களாகக் காங்கிரஸ் மகாசபைகள் கூடும் இடங்களில் எல்லாம் தென்னிந்தியப் பிரதிநிதிகளுக்காக ஸ்ரீ எஸ். அப்பாசாமி ஐயரின் ஹோட்டல் நடைபெறுவதுண்டு. ஒரு கலியாணத்தில் அப்பாசாமி ஐயரின் சமையல் என்றால், கலியாணக்காரர்கள் பெரிய மனுஷர்கள் என்றோ ரஸிகர்கள் என்றோ அல்லது தேசபக்தர்கள் என்றோ வைத்துக் கொள்ளலாம்.

சென்ற செப்டம்பர் 18உ ஸ்ரீ அப்பாசாமி ஐயர் அவர்களுடைய ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ வீருசாமிப் பிள்ளை அமோகமாக நாதஸ்வர வாத்தியத்தில் இன்னிசை மழை பொழிந்தார். சென்னையிலுள்ள பெரிய மனிதர்கள் — ரஸிகர்கள் பலரும் விஜயம் செய்து தம்பதிகளை வாழ்த்தினார்கள்.

ஸ்ரீ அப்பாசாமி ஐயர் நீடூழி வாழ்ந்து தமது சமையல் கலைத் திறமையினால் பல கல்யாணங்களையும் மகாநாடுகளையும் மற்ற வைபவங்களையும் சிறப்பிக்க வேண்டுமென இறைவனை வேண்டுகிறோம்.



பாத கமலம்

ஆசிரியர்: கே. ஏ. அப்பாஸ் மொழி பெயர்ப்பு: கே. கணேஷ்

IV


நான் சந்திராவின் படுக்கைக்குப் பக்கத்திலிருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தேன். அவனது முகத்தைமட்டுமே நான் காண முடிந்தது. அதுவும் வெளுத்துச் சவம் போல் இருந்தது. இறந்து விட்டானோ என்றுகூடச் சந்தேகித்தேன். எனது காலடி ஓசையைக் கேட்டு அவன் மிகவும் லேசாகக் கண்களைத் திறந்தான். நான் நாற்காலியை இழுத்து அவன் படுக்கையருகில் போட்டு அமர்ந்தேன். பூச்செண்டு என் கையிலேயே இருந்ததால் அதனைத் தலையணையின்மீது வைத்தேன். அவன் என்னைப் பார்ப்பதற்காக முகத்தைத் திருப்பியபொழுது அவனது முகம் இட்டதட்டப் பூக்களைத் தொட்டது. அதன் வாசனை அவனது உணர்ச்சியை எழுப்பிவிட்டது. அவன் வாயிலிருந்து 'பூக்கள்' என்ற சொல் பெருமூச்சுடன் வெளிவந்தது. கண்களில் நீர் பெருகியது. அதில் துயரமும் துக்கமும் பிணியும் ஒன்றறக் கலந்திருந்தன. அக் கண்ணீர்!—அவனது முகத்திலிருந்த பாவச் சின்னத்தையும் போலித் தன்மையையும் கழுவியே விட்டன.

"நீங்களா! இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று மெல்லிய குரலில் கேட்டான். நாலாயிரம் ரூபாய்க்காக நான் விலை பேசியிருந்த அவனது வாழ்க்கைக் கதையின் உச்சநிலையை உணரவே அங்கு வந்திருக்கிறேன் என்று அவனிடம் என்னால் கூற முடியவில்லை. அவனது வீட்டிற்கு ஏதோ போன பொழுது அவன் அசௌகரியமுற்று ஆஸ்பத்திரியில் இருப்பதாக அறிந்து அவனது உடல் நிலையை விசாரித்து விட்டுச் செல்லலாமென வந்ததாகக் கூறி வைத்தேன்.

"நீங்கள் மிகவும் அன்புடையவர்" என்று கூறியவன் திடீரென சம்பந்தா சம்பந்தமில்லாமல் "நீங்கள் கதை எழுதுகின்றவர் அல்லவா?" என்றான்.

நான் பதில் கூறுவதற்கு முன்னால் அந்த வெள்ளைத் துணியில் ஒரு நிழல் விழுவதைக் கண்டு சுற்றிலும் பார்க்க பாபு நிற்பதைக் கண்டேன். பல நாட்கள் தூங்காதவன் போலவும் அழுது வடிந்தவன் போலவும் அவன் காட்சியளித்தான். இந்தக் கதையையும் அவனது காதலையும் தொடங்க வைத்த அந்தப் பாத பூஜைப் பொருளான வேணி அவன் கையினில் இருந்தது. எனது போராசைக்காரச் சாத்தான், "கதையின் உச்சமும் நெருங்கிவிட்டது. சபாஷ்! கையிலே நாலாயிரம் ரூபாய் ரொக்கம்" என்று கூறினான்.


பாபு நான் அங்கிருப்பதைக் கூட உணரவில்லை என நினைக்கிறேன். அவன் நேரே கட்டிலின் தலைமாட்டருகில் சென்று ஆதரவுடன் சந்திராவை நோக்கி "சந்திரா, நீ இங்கிருப்பதை இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன். உன்னைப் பற்றி அவர்கள் என்னவோ புளுகினார்கள். நீ அந்தச் சேட்டுடன் வாழ்க்கை நடத்தச் சென்று விட்டதாகக் கூடக் கூறினார்கள். ஆனால் நான் நம்பவே இல்லை....உன் உடம்புக்கு என்ன சந்திரா? நீ மெலிந்து துரும்பாய்ப் போய் விட்டாயே! எல்லாம் என்னால்தான் என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு அறை வாடகைக்கு எடுத்திருக்கிறேன். இன்றைக்கே இப்பொழுதே உன்னை என்னுடன் அழைத்துச் செல்கிறேன். ஒரு கணமேனும் எனது சந்திராவை எனது பார்வையிலிருந்து



விலகி இருக்கச் செய்ய மாட்டேன்" என்று ஆவேசத்துடன் கூறினான்.

பாபு இவ்வாறு கூறிக் கொண்டிருக்கையில் நான் சந்திராவின் முகத்திலே தோன்றும் உணர்ச்சி பாவங்களை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தேன். முதலில், அவன் வந்தவுடன் அவளது வாழ்க்கையின் ஜோதியே அவளது கண்களில் திரும்பியது போலிருந்ததைக் கண்டேன். பின்னர் சிறிது நேரத்தில் அணைக்கப்பட்ட மின்சார வெளிச்சம் போல அது மறைந்து துக்கம் குடி கொண்டதையும் கண்டேன் பின்னர் திடீரென ஒரு புதிய பயங்கரத் தீர்மானத்திற்கு வருவது போல் கண்களில் ஒளி தோன்றியது. அதன் பிறகு......?

நான் பெண்களின் சக்தியை வணங்கும் உணர்ச்சிப் பேயனல்ல. அவர்களது மாறாத அன்பு, பணிவு என்பதெல்லாம் ஆண்களை வலைக்குள் இழுத்து வீசப்படும் மாய மாலம் என்று எண்ணுபவன். பாபுவின் உணர்ச்சி மிக்கக் காதல் மொழிகளுக்குப் பதில் கூறுவதற்குப் பதிலாக என்னைப் பார்த்து—ஆம், என்னைத்தான்—



ஆத்திரம் கொடுக்கும்படியான குரலில், "அன்பே, இந்த மனிதனை வெளியே போகச் சொல்லுங்கள்" என்று கூறினாள். அதைப்போல் கேவலமாக ஒரு பெண் நடக்க முடியுமென எனது கற்பனையில் கூட எட்டினதில்லை.

'அன்பே!' என்றது ஆம், என்னைப் பார்த்துத்தான். வாழ்க்கையில் இரண்டே இரண்டுமுறை சந்தித்த என்னைப் பார்த்து, தனது வாழ்க்கையையும், இதயத்தையும், அன்பையும், தன் உயிரையும் அவள் பாதத்திற்குச் சமர்ப்பித்த இந்த மனிதனைப் போகச் சொல்லுவதாம். ஏன்? இதற்கு ஒரே ஒரு காரணந்தான் இருக்க முடியும்.

அவனோ ஒரு ஏழை, பூ வியாபாரி. நானோ வாழ்க்கையில் ஏதோ ஒரு நல்ல அந்தஸ்தில் இருக்கிறவன். அன்று நான் பெண்ணினத்தை வெறுத்ததைப் போல் வாழ்க்கையில் என்றுமே வெறுத்ததில்லை.

தான் கேட்ட வார்த்தைகளினால் ஸ்தம்பித்தவன் போல் சில விநாடிகள் பாபு நின்றான். அவனது கன்னங்களின் நிறம் வெளுப்படைந்ததையும் அவனது பரந்த தோள்கள் குறுகிச் சென்றதையும் கண்ணுற்றேன். தன் கையில் அப்பொழுது வைத்துக் கொண்டிருந்த கேனியைக் குருடனைப் போல் வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தான். அவனும் இவ்வன்பின் அர்ப்பணம் தனது வாழ்வோடு சம்பந்தப்பட்டதல்ல என எண்ணினான் போலும். நடுங்கிய கைகளால் சங்கோசத்துடன் அதனைப் படுக்கைமீது வைத்து "நான்...நான்... உனக்காகக்......கொண்டு வந்தேன்......!" என்று உணர்ச்சியுடன் கூறினான்.

சந்திரா அவன் கூறிய வார்த்தைகளைச் சற்றும் பொருட்படுத்தியதாகத் தோன்றவில்லை. அதற்குமாறாக, நான் கொண்டு வந்த செண்டைச் சந்திரா கன்னத்தில் அணைத்துக் கொண்டே கண்களால் என்னைச் சுட்டிக் காண்பித்து "இதோ இவர் ஏற்கெனவே இவ்வழகான பூக்களைத் தந்திருக்கிறார். உன்னுடைய வேணி வேண்டாம், பாபு" என்றாள்.

"உன் பாதத்திலாவது கட்டிக்கொள்ளலாமே" என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு வெளியே போய்விட்டான் பாபு. அவனது காதல் கனவின் கடைசித் தந்திகள் என்றுமே ஒன்றுசேர முடியாதவாறு இரு துண்டுகளாக அறுந்த சத்தம் காதிலே கேட்டது போல் இருந்தது.

இந்தக் கேவலமான அற்பப் பெண்ணிடம் கோபம் கொள்வது காலத்தை விரயமாக்குவதாகத்தான் முடியும். அவளை வெறுப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை என எண்ணினேன். அப்போது என் சிந்தனையைக் கலைக்க "உங்கள் வரவை நான் இவ்விதம் உபயோகித்துக் கொண்டதற்காக மிகவும் வருந்துகிறேன். என்னை மன்னியுங்கள்" என்றாள் சந்திரா.

நான் வேணியைச் சுட்டிக்காட்டி ஆத்திரத்துடன் "நீ மன்னிப்புக் கோருவதானால் என்னிடம் எதற்குக் கேட்கின்றாய்? இதோ இந்தப் பூக்களிடம் கேள். சந்திரா, உன்னைப் போன்ற பெண்கள் பூக்களின் உயர்வையோ காதலின் பெருமையையோ அறிய முடியாதவாறு சாபக் கேட்டிற்கு உள்ளானவர்கள். அன்றொரு நாள் இரவு பாபு உன் பாதங்களில் மலரைச் சுற்றிய பொழுது நீ நகைத்தாய். உனக்கு அது ஒரு வேடிக்கையாக வெறும் கேலிக்கூத்தாகத் தோன்றியது. நான்கூட அப்பொழுது தலையிலே சூட்டிப் போற்றப்பட வேண்டிய இந்தப் பூக்கள் கேவலம், உன்னுடைய காலுக்குப் போடப்பட்டு அவமதிக்கப் படுகின்றனவே என நினைத்தேன். பாபு பூச்சரத்தை மட்டும் உன் பாதத்தில் சேர்க்கவில்லை. அவன் தனது இதயத்தையும் உனது பாதத்தில் அர்ப்பணித்தான். கால்களில் சூடி அவமதித்ததற்குப் பதிலாக நீ அம்மலர்களைத் தலையிலே சூடிக் கௌரவித்துப் பாராட்டியிருக்க வேண்டும். உன்னைப் போன்ற பெண்கள், இதயங்களையும் பூக்களையும் மிதித்து அழிப்பதிலேயே இன்பம் காணுகின்றீர்கள். உனது காலருகே உள்ள மலர்கள் எதன் சின்னமாக இருக்கின்றன என்பதை இன்று நன்கு உணர்கிறேன். காலிலே மலர்கள் சூடிப் பூக்களை யொத்த உயரிய நோக்கங்களை மிதிக்கும் உன்னைப் போன்ற அற்பப் பெண்களின் மடமையை என்னவென்பது? ஏ பேயே! இதோ இதை எடுத்துக் கொள்" என்றேன்.

எனக்கு ஏதோ பித்துப் பிடித்தது போல் இருந்தது. மனித சமுதாயத்தின் மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டிருந்தது. பெண் மனத்தின் இந்த விபரீதப் போக்கைக் கண்டு என் நெஞ்சம் கொதித்தது. "இந்த வேணியை எடுத்து உனது காலில் அணிந்து கொள். இது வெறும் மலர் மாலை மட்டும் அல்ல. பாபுவின் இதயமாகும்" என்று வெறிபிடித்தவன்போல் கத்தினேன்.

வேணியை ஒரு கையால் எடுத்து மறு கையால் துணியை உயர்த்தி, "அவன் உனது கால்களில் இதனைச் சூடச் சொன்னான். அவனது எண்ணம் நிறைவேறும்படி......" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தேன்.

ஆனால் அவள் போர்வையை உயர்த்திய போது நான் கண்ட காட்சியை என்னவென்பது? அந்தக் காட்சியைக் கண்டதும் நான் சொல்லவந்த வார்த்தைகள் அப்படியே எனது உதடுகளில் உறைந்து விட்டன. எனது கரங்களிலிருந்து வேணி கீழே விழுந்தது. அது சந்திராவின் பாதங்கள் இருக்க வேண்டிய இடத்தில் விழுந்தது. ஆனால் அங்கே பாதங்கள் இல்லை. பாதங்களுக்குப் பதிலாக பாண்டேஜ் இருந்தது!

"சந்திரா!"

உடனே எனது மனதிலே பல காட்சிகள் 'விர்' என்று சுழலத் தொடங்கின—அரட்டையின் செக்கச் சிவந்த கண்கள், மின்னுகின்ற வாளின் கூரிய முனை, துக்கமே சூடி கொண்ட மிசிட்டாவின் முகம், மீண்டும் அந்த ரத்தக் கண்கள்!

"சந்திரா!"

"வாளின் கூரிய முனையிலே ஆடுவதென்பது லேசான விஷயமல்ல."

டாக்டரிடமும் இவர்கள் இதையேதான் கூறியிருக்க வேண்டும்.


"சந்திரா!"

"ஏன் இப்படிப் பதறுகின்றீர்கள்? ஓடுகின்ற யந்திரத்திலே எவனாவது காலை வைத்தால் நிச்சயமாய்க் காலை இழக்க வேண்டியதுதான் என்று நீங்களே அன்று கூறவில்லையா?" என்றாள்.

முற்றும்


ஹெர்குலஸ்

இன்று உற்பத்தியாகும் சைகிள்களில் மிக நேர்த்தியானது



உலகிலேயே ஏராளமாக
உற்பத்தி செய்யப்படுவது

தி ஹெர்குலஸ் சைகிள் அன்
மோட்டார் கம்பெனி லிமிடெட்,
பர்மிங்ஹாம், இங்கிலாந்து



'ஹெர்குலஸ்' மூன்று வேக ஹப்பை எவ்வித மாடல்களிலும் பொருத்தலாம். அல்லது தனியாகவும் கிடைக்கும்.

HCX/13/1

எல்லா பிரபல வியாபாரிகளாலும் விற்கப்படுவது


லக்ஸ் டாய்லட் சோப்பின்
புதிய பரிமளத்தை போற்றும்
இன்னுமொரு சினிமா நட்சத்திரம்
குமாரி கல்யாணி
"லக்ஸ் டாய்லட் சோப்பின் புதிய பரிமளம் மிக மிக ரஞ்சகமானது"
LUX
சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்
LTS. 213-172 TM

ஸ்தாபிதம்: 1941 தந்தி: "உமா"

உமா கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

உமா மஹால், உமா கோல்டு கவரிங் போஸ்டாபீஸ்

மசூலிப்பட்டணம்

உமா ஆபரணங்கள் அசல் தங்கத் தகட்டினால் மிஸ்ரம லோகத்தின்மேல் மூடப்பட்டு தயார் செய்தவை. அப்படி இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 500 ரூபாய் இனாம். 10 வருஷம் உத்திரவாதம்



800 டிசைன் கொண்ட கேட்லாக் விண்ணப்பித்துக் கொண்டால் இலவசமாக அனுப்பப்படும். ஆபரணங்கள் வி. பி. பி. பார்சல் சார்ஜ் 0-15-0 மாத்திரம்.

N. B:—உள் நாடுகளைவிட இதர [illegible]-க்கு கேட்லாக் விலையைவிட 25% அதிகம்



ᵣᵤ., Printed and Published by R. Krishnamurthy, at the "Kalki" Press
& 119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI அக்டோபர் 9, 1949 4 அணா

REGD. NO. M. 4392



S. 114-172 TM